Vol.5, Issue 3 | Annual Subscription ₹480


@NewsRotary /RotaryNewsIndia

ஆகஸ்ட் 2022

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Rotary



# ரோட்டரி நியூஸ் அலுவலகத்திற்கு வந்த RI தலைவர்கள்

*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் அவர் கணவர் DGN நிக் க்ராயாசிச் தங்கள் இந்திய பயணத்தின் போது சென்னையிலுள்ள ரோட்டரி நியூஸ் அலுவலகத்திற்கு வந்தனர்.*

*சரியாக ஒரு மாதத்திற்கு முன்னர், ஜூன் 26 அன்று RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி அவர்களும் நம் அலுவலகத்திற்கு வருகை தந்தனர்.*



RI இயக்குனர் A S வெங்கடேஷ்

*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் DGN நிக் க்ராயாசிச் ரோட்டரி நியூஸ் ஆசிரியர் ரஷிதா பகத் மற்றும் பிற ஊழியர்களுடன்.*



*RI தலைவர் சேகர் மேத்தா, ராஷி, RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி, DG 3232 தலைவர் J ஸ்ரீதர் மற்றும் அவர் மனைவி புனிதா ஆகியோருடன் ரோட்டரி நியூஸ் அலுவலர்கள்.*

# உள்ளே


12
இதயத்தை துடிக்கவைக்கும் RC ஜாம்ஷெட்பூர்

18
110 நாடுகளில் 30% பெண் ரோட்டரி உறுப்பினர்கள்

20
ரோட்டரியில் பிராந்தியமயமாக்கல் தேவை: சேகர் மேத்தா

22
உக்ரைனில் ரோட்டரியின் பணிகள் பிரமிக்கவைக்கின்றன: ஹ்யூகோ

25
இலங்கைக்கு இந்திய ரோட்டரியின் உதவி

26
ரோட்டரியில் பெண்களின் திறமைக்கு எல்லையே இல்லை!

34
ரோட்டரியின் WinS வசதியைப் பெற்ற குருகுலம்

36
ரோபோடிக்ஸ் கற்கும் அரசுப் பள்ளி மாணவர்கள்

38
ரோட்ராக்டர்களாக கரூரின் இளம் வர்த்தகர்கள்

44
ஒரு கிராமத்தை மாற்றியமைத்த ரோட்டரி திட்டம்

46
ஒரு இளம் பெண்ணைக் காப்பாற்றிய கிராமத்தை தத்தெடுக்கும் திட்டம்

70
குழந்தை பராமரிப்பில் சுற்றுச்சூழல் காப்போம்




## ரோட்டரியின் முதல் பெண் தலைவர்

*நிறைவாக, ரோட்டரிக்கு முதல் பெண் தலைவர் வந்துவிட்டார்: கனடாவைச் சேர்ந்த ஜெனிஃபர் ஜோன்ஸ். இது நம் அனைவருக்கும் ஒரு மைல்கல் ஆண்டாக இருக்கப்போவது உறுதி. இதுவரையிலான அவருடைய பயணத்தை விவரிக்கிற, அவருடைய மார்பகப் புற்றுநோய் அனுபவம் மற்றும் நடன விருப்பத்தையும் பேசுகிற கதை சொல்லும் தலைவர் என்ற கட்டுரையை நான் படித்தேன். 55 வயதில் அவர் ஈர்க்கின்ற, சுறுசுறுப்பான பெண்மணியாக உள்ளார். அவர் நம் தலைவராக அமைந்திருப்பது நம் அதிர்ஷ்டம்தான்.*

*நம்முடைய குடியரசின் முன்னாள் தலைவர் APJ அப்துல் கலாம் சொன்னது போல் ''பெரிதாகச் சிந்தியுங்கள், அதைச் சாதிக்கப் போராடுங்கள்.'' நம் புதிய தலைவர் ஜோன்ஸையும் ரோட்டரியையும் கடவுள் ஆசிர்வதிப்பார்.*

*பரத் மற்றும் ஷலன் சவுர் எழுதிய இதய அதிர்ச்சியைத் தடுத்தல் என்ற கட்டுரையைத் தங்கள் நலனை மதிக்கிற எல்லா ரோட்டரியன்களும் படிக்கவேண்டும். இந்தக் கட்டுரையை நான் மிகவும் விரும்பிப் படித்தேன். இது எளிமையாகவும், எவரும் புரிந்து கொள்ளும்படியும் அமைந்திருந்தது. ஆரோக்கியமான வாழ்க்கைமுறைக்கு அவர்கள் வழங்கியிருக்கும் ஆலோசனைகளும் எளியவை, எதார்த்தமானவை.*

*ராபர்ட் ஃபிராங்க்ளின் ரெகோ, RC பாஜ்பெ — D 3181*




*ரஷீதா பகத் தன்னுடைய ஆசிரியர் பக்கத்தில் ''திசைகாட்டல் உயர்நிலையிலிருந்து நேரடியாக வரும்போது, அதிசயங்கள் நடக்கும்'' என மிக நன்றாக எழுதியுள்ளார். ''பாலினச் சமநிலைக்கான போர் மிக நீண்டது, அதற்குப் பல போராளிகள் வேண்டும்... ஆண்களும் சரி, பெண்களும் சரி.'' இந்தச் சொற்கள் புதிய ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸுக்கு முன் இருக்கும் சவால்களை நன்கு விவரிக்கின்றன.*

*நமீதா ஷர்மா, RC நாக்பூர் — D 3030*

*ஜூலை இதழில் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸின் அட்டைப் படப் புகைப்படம் மிக நன்றாக இருந்தது. ஜோன்ஸ் அவர்களே ஏழு ஆண்டுகளுக்குமுன் ஊகித்ததுபோல், ஒருவழியாக ரோட்டரி தன்னுடைய முதல் பெண் தலைவரைப் பெற்றுவிட்டது.*

*RID Dr மகேஷ் கோட்பாகி ரோட்டரியில் தோழமைகளின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார். RID A S வெங்கடேஷ் புதிய ரோட்டரி ஆண்டுக்கான புதிய யோசனைகள், தொலைநோக்குகளை உருவாக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். டயானா ஸ்கோபெர்க் எழுதிய கதை சொல்லும் தலைவர் என்ற கட்டுரை ஜோன்ஸின் குணங்களை வண்ணமயமான புகைப்படங்களுடன் விளக்கியது, ஹூஸ்டன் மாநாட்டில் PM நரேந்திர மோடி அவர்களின் காணொலி உரை ரோட்டரியன்களுக்கு முன்னேறிச் செல்வதற்குத் தேவையான ஆற்றலை அளிக்கிறது.*

*ஃபிலிப் முலப்பொனெ M T*
*RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

*RC நாக்பூர் விஷன் சுந்தரி திட்டத்தின்கீழ் நாக்பூரில் பெண்களுக்குத் திறன் அளிப்பதுபற்றிய இன்னொரு கட்டுரை 100 பெண்களுக்கு அழகுக் கலைப் பயிற்சி வழங்கப்பட்டதை விவரிக்கிறது. ஜெனிஃபர் ஜோன்ஸ் அவர்கள் ரோட்டரி தலைவரானதன் மூலம் ரோட்டரி தன்னுடைய முதல் பெண் தலைவரைப் பெற்றுள்ளது மிகவும் மகிழ்ச்சி.*

*ஜகதீஷ் M வகாசியா, RC சூரத் ஈஸ்ட் — D 3060*

RID A S வெங்கடேஷின் செய்தி, புதிய ரோட்டரி ஆண்டுபற்றிய புதிய நம்பிக்கையை வழங்குகிறது, முந்தைய வெற்றிகள் புதிய சிந்தனைச் செயல்முறைக்கு வழி வகுத்திருப்பதாகவும், அதன் மூலம் புதிய வாய்ப்புகளைத் திறப்பதாகவும் அவர் கூறுகிறார். அவருடைய பார்வைகள் மிகுந்த ஊக்கம் அளிக்கின்றன.

முகுந்தம் சிங்கம், RC திருச்சி
ராப்பள்ளி டயமன்ட் சிட்டி — D 3000

## ஜூன் இதழ் கடிதங்கள்
## புதிய நம்பிக்கை பிறக்கிறது

'நம்பிக்கை' என்ற சொல் மிகுந்த ஆழம் கொண்டது. நேபாளத்தில் உள்ள பெரெ கிராமத்தில் செய்யப் பட்ட பணியில் அது மிக உரக்க வெளிவருகிறது. இது இந்த நாட்டுக்கு மட்டுமின்றி, மொத்த உலகத்துக்குமான கதை என்று நான் உணர்கிறேன். ரோட்டரி அந்த நேபாளக் கிராமத்தில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது.

RI இயக்குநர் A S வெங்கடேஷ் 'மிகச் சிறப்பின் நற்பெயர்'பற்றிப் பகிர்ந்துகொண்ட சிந்தனை எனக்குப் பிடித்திருந்தது. பெண்களுக்கு ஆற்றல் அளிப்பது பற்றிய RI தலைவர் சேகர் மேத்தா அவர்களின் கட்டுரை உலகெங்கும் செய்யப்படும் பணியைப்பற்றிச் சொல்லி என்னை வியப்பில் ஆழ்த்தியது.

ரோட்டரியின் ஒற்றுமை நடையைப் பற்றிய கட்டுரை ஊக்கம் அளித்தது, நம் அமைப்பு நாட்டின் வளர்ச்சிக்கு எப்படிப் பங்களிக்கிறது என்பதைக் காண்பிக்கும் பொருத்தத் துடன் அமைந்திருந்தது. RI தலைவர் கருத்தரங்கம் பற்றிய கட்டுரைகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன; படங்கள் ஆயிரம் சொற்களைப் பேசும் துடிப்புடன் இருந்தன. நலம்பற்றிய கட்டுரை தயாராகப் பார்த்துப் பயன்படுத்தக்கூடியதாக அமைந்திருந்தது, நல்ல நினைவூட்டலாகவும் அமைந்திருந்தது.

விவேக் கன்டேல்வால்
RC தியோனர் — D 3141

### இரண்டு பெரிய சாதனைகள்

பெண்களுக்கு ஆற்றல் அளித்தல் மற்றும் உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி ஆகியவை சென்ற ஆண்டு RI தலைவர் சேகர் மேத்தா அவர்களுடைய 2 பெரிய சாதனைகள். ரோட்டரியை மிகச் சிறப்பான முறையில் வழிநடத்திய அவருக்குப் பாராட்டுகள். PRIP K R ரவீந்திரன் தலைமையில் ரோட்டரியன்கள் இலங்கையில் ஒரு பேரணி நடத்தியுள்ளார்கள், அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அந்தத் தீவில் நல்ல ஆட்சியைக் கோரியுள்ளார்கள்.

TCA ஸ்ரீனிவாச ராகவன் உலகின் பல பகுதிகளில் குடியேறியுள்ள, வெவ்வேறு மொழிகளைப் பேசுகிற தன் நீட்டிக்கப்பட்ட குடும்பத்தைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையில் நுட்பமான நகைச்சுவை நிறைந்திருந்தது.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

ஆண்டு நிறைவுச் செய்தியில் RI தலைவர் சேகர் மேத்தா தன் பணியை நன்கு தொகுத்துச் சொல்லியுள்ளார். கடந்த ஆண்டில் வாழ்க்கைச் சவாலான பல திட்டங்கள் நடைபெற்றதைக் கேட்டு நாங்கள் மகிழ்கிறோம். பல சங்கங்கள் பெண்களுக்கு ஆற்றல் அளித்தல், சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், எழுத்தறிவு, ரோட்டரியின் உயர் தலைமை என்பது வெறும் பதவி இல்லை, சேவை செய்வதற்கான, நம் அமைப்பின் மிகச் சிறந்த தோற்றத்தை மக்களிடையில் முன்னிறுத்துவதற்கு ஒரு வாய்ப்பு என்று மேத்தா நிரூபித்துள்ளார். இலங்கை இன்னும் ஆழமான குழப்பத்தில் இறங்குகிற நேரத்தில், நல்ல ஆட்சியைக் கோரவும் விழிப்புணர்வை உண்டாக்கவும் அந்தத் தீவு நாட்டில் ஒரு பேரணியை நடத்துவதற்கு ரோட்டரியன்கள், ரோட்டராக்டர்கள் உதவியுடன் PRIP K R ரவீந்திரன் எடுத்துள்ள சிறப்பு முயற்சி குறிப்பிடக்கூடியது.

R ஸ்ரீனிவாசன், RC மதுரை மிட்-டவுன் — D 3000

### GoI மதில் மேல் பூனையாக இல்லை

RC *சிஸ்விக் அன்ட் ப்ரென்ட்ஃபோர்ட்,* UK*ஐ சேர்ந்த* Rtn *ஜான் ஆர்ம்ஸ்ட்ராங் தன்னுடைய கடிதத்தில் (ஜூலை இதழ்) "இந்தியத் துணைக் கண்டம் மதில் மேல் பூனையாக அமர்ந்திருப்பது" பற்றி வருந்துகிறார், "ரஷ்யப் படைகளைத் திரும்பப் பெற" வேண்டுகிற* RI *அறிக்கையைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.*

RC *மெட்ராஸின் பதிவுத் தலைவருடைய பேரன்* RI*ன் அரசியல் அறிக்கையை ஒரு பிரச்சனையாக்குவது வருத்தம் தருகிறது, உண்மையில் பன்னாட்டு அரசியல் பிரச்சனைகளில்* RI *எந்தக் கருத்தும் தெரிவிக்கக்கூடாது.*

*ஆர்ம்ஸ்ட்ராங் தன்னுடைய காலனிய மனநிலையில் இந்திய அரசாங்கம் எந்தப் பக்கமும் நிற்காதது பற்றித் தீர்ப்பு சொல்கிறார் என்று தோன்றுகிறது, நம் வெளிநாட்டு அமைச்சர்* S *ஜெய்சங்கர் சொன்னது போல், "இந்தியா தன் பக்கத்தில் நிற்கும்: எங்கள் தேசிய நன்மை முக்கியத்துவம் பெறும்." இங்கு இந்திய அரசு மதில் மேல் பூனையாக நடந்துகொள்ளவில்லை, இந்தத் துணைக் கண்டத்தில் உள்ள* 1.4 *பில்லியன் மக்கள் மேற்கத்திய மற்றும்* NATO *நாடுகளின் எடுத்தேன் கவிழ்த்தேன் கொள்கைகளால் உருவாக்கப்பட்டு ஐரோப்பாவில் நடைபெறும் போரின் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடாது என்று உறுதிசெய்கிற ஒரு தெளிவான கொள்கை.*

*ஆர்ம்ஸ்ட்ராங்கின் நாடுதான் காலனிய ஆட்சியின்போது லட்சக் கணக்கான இந்திய உயிர்களின் இழப்புக்குக் காரணமானது, உணவை விளைவிக்கும் மக்களுக்கு உணவை அளிக்காமல் அதைப் போருக்கான உணவாக பிரிட்டன் திருப்பி விட்ட போது நான்கு மில்லியனுக்கும் மேற்பட்ட குடிமக்களைக் கொன்ற வங்காளப் பஞ்சத்தை உண்டாக்கியது. காலனிய ஆட்சியின்போது இந்தியர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க ஆர்ம்ஸ்ட்ராங்கின் தாத்தா ஏதேனும் செய்தாரா? அல்லது, அவர் மதில் மேல் பூனையாக அமர்ந்திருந்தாரா?*

*ஒரு போரின்போது எந்தப் பக்கத்தில் நிற்கவும்* RI*க்கு உரிமை இல்லை, மனிதத் துன்பம் எங்கு நடந்தாலும் அதைத் தணிப்பதில்தான்* RI *கவனம் செலுத்தவேண்டும். போர்களும் பிரச்சனைகளும் எங்கு நேர்ந்தாலும் அவற்றால் பாதிக்கப்படுகிற எல்லாருக்காகவும் நாங்கள் வருந்துகிறோம்.*

*சங்கர் துரைசுவாமி,* RC *மெட்ராஸ் மிட்-டவுன்* — D 3232

We welcome your feedback.Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by email to the editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.**
WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

**அட்டைப்படம்:** இதய நோயாளி ஒருவருக்கு RC ஜாம்ஷெட்பூரின் திட்டத்தின் மூலம் பேஸ்மேக்கர் (Pacemaker) கருவி பொருத்தப்பட்டுள்ளது.

# ஓர் அழைப்பில் தொடங்குகிறது

நாம் அனைவரும் வெவ்வேறு வழிகளில் ரோட்டரி உறுப்பினராகியுள்ளோம். சிலர் தங்களுடைய தந்தை ரோட்டரியனாக இருந்ததால் இங்கு இணைந்துள்ளார்கள். சிலர் தங்களுடைய அலுவலருடைய சொல்லைக் கேட்டு ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டார்கள், பிறகு இங்கு இணைந்தார்கள். மற்றவர்கள் அமெரிக்க உச்சநீதிமன்ற ஆணை ஒன்று அதைச் சாத்தியமாக்கிய பிறகு உறுப்பினர்கள் ஆனார்கள். எனினும், நாம் ஒவ்வொருவரும் ஒரு வழியில்தான் இங்கு நுழைந்துள்ளோம்: ஓர் அழைப்பு.

நம் கற்பனைகளின் பூட்டுகளைத் திறக்கிற, எல்லாமும் சாத்தியம் என்று அறிந்துகொள்ள நம்மை அனுமதிக்கிற ஓர் அழைப்பு. நம் ஒவ்வொருவருக்கும் அதே வாய்ப்பு இருக்கிறது: ஓர் அழைப்பை இன்னொருவருக்கு வழங்கும் பெருமை.

நம் சமூகங்களைக் கூர்ந்து கவனித்து நம்முடைய வருங்காலத் தலைவர்களை அடையாளம் காண்பதுபற்றிக் கற்பனை செய்துபாருங்கள், அது ஓர் ஊக்கமளிக்கும் சிந்தனை. பல நேரங்களில், நம்மைப்போலவே இருக்கிறவர்களை ஈர்க்கவேண்டும் என்று நமக்குத் துடிப்பு ஏற்படும். நம்மிடமிருந்து மிகவும் வேறுபட்டவர்களாகத் தோன்றுகிற மக்கள் உண்மையில் நம் மதிப்பீடுகளைப் பகிர்ந்துகொள்ளலாம், அவர்களிடமும் அதே திறமைகள் இருக்கலாம், வெளிப்படுவதற்காகக் காத்திருக்கலாம்.

ரோட்டரிமுழுவதும் பன்முகத் தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்குதலை (DEI) வளர்ப்பதற்கான நம்முடைய அடுத்த படிநிலையை எடுக்கவேண்டிய நேரம் இது.

தாங்களும் இதில் ஒரு பகுதி என்று மக்கள் உணர்கிற ஓர் அனுபவத்தை உண்டாக்குவது என்பது வெறுமனே நம்முடைய உறுப்பினர் எண்ணிக்கைகளைக் கூடுதல் பன்முகத் தன்மை கொண்டவையாக ஆக்குவதுமட்டுமில்லை. நம்முடைய கூட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் நாம் ஒருவருடன் ஒருவர் மனம் திறந்தும் நேர்மையாகவும் பேசக் கூடிய, நம் உறுப்பினர்கள் வரவேற்கப்படுவதாகவும் பாதுகாப்பாகவும் உணர்கிற இடங்களாக ஆக்க வேண்டும்.

ரோட்டரி முழுவதும் DEIஐ முன்னெடுத்துச்செல்ல நாம் அனைவரும் உறுதிகொண்டுள்ளோம் என்று நான் நம்புகிறேன். நம்முடைய அமைப்பின் மிக ஆழமான பண்பாடுகளில் இது வேரூன்றியுள்ளது, இனி வரும் பல பத்தாண்டுகளில் நாம் துடிப்பாகவும் பொருந்துவோராகவும் தொடர்ந்து இருப்போம் என்பதை இது உறுதிப்படுத்தும்.

சில ஆண்டுகளுக்கு முன்னால், 2023க்குள் பெண் உறுப்பினர்களுடைய பங்களிப்பை 30%ஆக உயர்த்தவேண்டும் என்கிற லட்சிய இலக்கை நம் ரோட்டரி வாரியம் அமைத்தது. இந்தக் காலகட்டத்துக்கு இன்னும் ஓராண்டு கூட இல்லை, ஆனால், நம்மால் இந்த இலக்கை எட்டவும், தாண்டிச் செல்லவும் இயலும் என்று நான் நம்புகிறேன்.

ஒவ்வொரு கண்டத்திலிருந்தும், ஒவ்வொரு பண்பாட்டிலிருந்தும், ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ரோட்டரி தலைவர்கள் உருவாகவேண்டும். இளம் உறுப்பினர்களும் இளம் சிந்தனையாளர்களும் இன்னும் பெரிய பதவிகள், பொறுப்புகளை ஏற்கவேண்டும். பல ஆண்டுகளாக உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் சொல்வதை நாம் எவ்வளவு ஆர்வத்துடன், மதிப்புடன் கேட்கிறோமோ, அதே அளவு ஆர்வம், மதிப்புடன் புதிய ரோட்டரி உறுப்பினர்கள் சொல்வதையும் கேட்கவேண்டும்.

ரோட்டரியை DEIக்கு முழுமையாக அர்ப்பணிக்கச் செய்வது மற்றும் நம்முடைய மிகப் பெரிய உறுப்பினர் இலக்குகளை எட்டுவது போன்றவை நிலவுக்குச் செல்வது போல் சாத்தியமில்லாத ஒன்றாகத் தோன்றலாம். ஆனால், நம்மைப் போன்ற செயல் வீரர்கள் ஒரு பெரிய இலக்குக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டால், தங்களுடைய ஒவ்வொரு துளி ஆற்றலையும் பயனுள்ளதாக ஆக்குவார்கள் என்பது எனக்குத் தெரியும்.


S கிருஷ்ணப்ரதீஷ்

ரோட்டரி நியூஸ் அலுவலகத்தில் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்.

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்



# சிறந்த சேவை


ரோட்டரி உலகில், பதவியிலிருக்கும் ரோட்டரி தலைவரின் வருகை என்பது மிகப்பெரிய கௌரவம். சரி ஜூன் 2022க்கு முன்னர், அதாவது கடைசியாக சென்னையில் உள்ள ரோட்டரி நியூஸ் அலுவலகத்துக்கு 2007ம் ஆண்டில் அப்போதைய தலைவர் வில்ஃப் வில்கின்சன் வருகை தந்தார். நான் ரோட்டரி இதழின் ஆசிரியராக 2014ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பணியில் சேர்ந்தேன். அதற்கு முன்பே இது நடந்தது. நான் ஆசிரியராக பதவியேற்ற காலத்துக்கு முன்னர், உள்வரும் ரோட்டரி தலைவர்கள் கல்யாண் பானர்ஜி, ரான் பர்டன், காரி ஹுவாங் முதல் K R ரவீந்திரன் ஆகியோர் எங்கள் அலுவலகத்துக்கு வருகை தந்துள்ளனர்.

ஆனால், திடீரென்று மற்றும் தற்செயலாக எந்த ஒரு திட்டமிடலும் இல்லாமல் ஒரு மாதகாலத்தில், அதாவது ஜூன் மாதம் 26 முதல் ஜூலை மாதம் 26க்குள் பதவியிலிருக்கும் இரண்டு ரோட்டரித் தலைவர்கள் முதலில் சேகர் மேத்தா, அடுத்தது ஜெனிஃபர் ஜோன்ஸ் என இரு தலைவர்களும் எங்கள் அலுவலகத்துக்கு வந்து எங்களை திகைக்க வைத்தனர். சேகர் மேத்தா ரோட்டரி நியூஸ் அறக்கட்டளையின் நிர்வாகக் குழுவில் அறங்காவலராக உள்ளார்.

சேகர் மேத்தாவின் பதவிக்காலம் முடிந்தாலும் அவர், உற்சாகத்துடனும் ஆற்றல் மிகுந்தவராகவே இருந்தார். அதேபோல புதிய தலைவரான ஜெனிஃபர் ஜோன்ஸ், எங்கள் அலுவலகத்துக்கு வருகை தந்தபோது வசீகரத்துடனும், உற்சாகத்துடனும், மன உறுதியுடனும், துடிப்பாகவும் செயல்படக்கூடியவராகவும் இருந்தார். அவரது முகபாவம், பேச்சு மற்றும் அவரது உடல்மொழி அவர் ஒரு வர்த்தக நோக்கு உடைய பெண் என்பதை தெளிவுபடுத்தியது. கடின உழைப்பு, உற்சாகம், ஆற்றல், அறிவுசார் கண்ணோட்டம் ஆகியவற்றின் மூலம் பிரச்னைகளுக்கு தீர்வுகாணமுடியும் என்றும் இதை வெளிப்படுத்த வரலாற்று சிறப்புமிக்க வாய்ப்பு தனக்கு கிடைத்திருப்பதையும் அவர் நன்கு உணர்ந்துள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக கருணை உள்ளம் என்பது பாலினத்துக்கு அப்பாற்பட்டது என்பதையும் அவர் அறிந்துள்ளார். முதலில் புணேயிலும் அடுத்து சென்னையிலும் அவர் பேசிய கூட்டங்கள் மற்றும் கலந்துகொண்ட நிகழ்வுகளிலிருந்து அவர், தனது ஆற்றல், அன்பு, கடின உழைப்பு ஆகியவற்றை முதலீடு செய்து தனது தலைவர் பதவிக்காலத்தில் வெற்றிக்கொடியை நாட்டுவார் என்பது உறுதியாகத் தெரிந்தது. தலைவர் பதவிக்கு வர பாலினம் காரணம் என்பதை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தகுதியும் திறமையும் இருந்தால் யார் வேண்டுமானாலும் தலைவராகலாம் என்பது அவரது கருத்தாக இருந்தது. இதே போல, நம் இந்திய ரோட்டரி அடுத்த ரோட்டரி ஆண்டில் ஏழு பெண் மாவட்ட தலைவர்களை பார்க்க போகிறது. இவர்களை நான் புணேயில் லஷ்யா என்னும் மாவட்ட தலைவர்களுக்கான நிகழ்ச்சியில் பார்த்தேன். அவர்களுக்கு நம் வாழ்த்துகள்.

மீண்டும், தற்செயலாக இந்த இதழில் அட்டைப்பட கட்டுரையும், துணிச்சலான மற்றும் அர்ப்பணிப்பு உள்ள ஒரு பெண்ணை பற்றியது. இதயச் செயல்பாட்டில் குறையுள்ள நோயாளிகளுக்கு குறைந்த செலவில் பேஸ்மேக்கர் கருவி பொருத்தும் செயலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு கருணை உள்ளத்துடன் அயராது உழைத்து வருகிறார். ஜாம்ஷெட்பூர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர் Dr விஜயா பரத். இதய நோய் நிபுணரான அவர், கடந்த 17 வருடங்களுக்கு மேலாக இதயத் துடிப்பு குறைவாக உள்ள ஏழை நோயாளிகளுக்கு நகரில் உள்ள டாடா மெயின் மருத்துவமனையில் “பேஸ்மேக்கர்” கருவி பொருத்தி அவர்களின் இதயம் சரியாக துடிக்கும் வகையில் அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வருகிறார். மருத்துவமனையில் இதயநோயியல் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பிறகும், தனக்குப்பின் துறைத் தலைவராக வந்த Dr மந்தர் ஷாவை, ரோட்டரி உறுப்பினராக்கி அவரையும் இப்பணியில் தொடரச் செய்துள்ளார். அவரது பெரு முயற்சிக்கு நன்றி. அவரது முயற்சியால் 222 இதய நோயாளிகள், டாடா மருத்துவமனையில் பேஸ்மேக்கர் பொருத்திக் கொண்டுள்ளனர். அவர்களது இதயம் இன்றும் சீராக இயங்கி வருகிறது.

நிச்சயமாக, இதுதான் சிறந்த சேவை.



ரஷீதா பகத்

## Governors Council

RID 2981 Selvanathan V
RID 2982 Saravanan P
RID 3000 I Jerald
RID 3011 Ashok Kantoor
RID 3012 Dr Lalit Khanna
RID 3020 Bhaskar Ram V
RID 3030 Dr Anand A Jhunjhunuwala
RID 3040 Jinendra Jain
RID 3053 Rajesh Kumar Chura
RID 3054 Dr Balwant S Chirana
RID 3060 Shrikant Balkrishna Indani
RID 3070 Dr Dushyant Choudhary
RID 3080 Kalta VP
RID 3090 Gulbahar Singh Retole
RID 3100 Dinesh Kumar Sharma
RID 3110 Pawan Agarwal
RID 3120 Anil Agarwal
RID 3131 Dr Anil Lalchand Parmar
RID 3132 Rukmesh Pannalalji Jakhotiya
RID 3141 Sandip Agarwalla
RID 3142 Kailash Jethani
RID 3150 Talla Raja Sekhar Reddy
RID 3160 Vommina Naga Satish Babu
RID 3170 Venkatesh H Deshpande
RID 3181 N Prakash Karanth
RID 3182 Dr Jayagowri Hadigal
RID 3190 Jeetendra Aneja
RID 3201 Rajmohan Nair S
RID 3203 B Elangkumaran
RID 3204 VV Pramod Nayanar
RID 3211 K Babumon
RID 3212 Muthu VR
RID 3231 Palani JKN
RID 3232 Dr. Nandakumar N
RID 3240 Kushanava Pabi
RID 3250 Sanjeev Kumar Thakur
RID 3261 Shashank Rastogi
RID 3262 Pravudutta Subudhi
RID 3291 Ajoy Kumar Law

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or RI. No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions is welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

Website

# RI இயக்குனர்



## ஒன்றுகூடி பணியாற்றுவோம்

புதிய உலகத் தலைவர் ஜெனிபர் ஜோன்ஸுடன் புதிய ரோட்டரி ஆண்டு தொடங்கியுள்ளது. உறுப்பினர்களின் வளர்ச்சி மற்றும் தக்கவைப்பில் புதிய சாதனைகளை படைத்த முன்னாள் தலைவர் சேகர் மேத்தாவை நாம் வணங்குவோம். “ஒவ்வொருவரும், இன்னொருவரை கொண்டு வாருங்கள்” என்ற அவரது வேண்டுகோள், கிட்டத்தட்ட 10,000 உறுப்பினர்களை சேர்த்து அமைப்பை வலுப்படுத்துவதில் அதிசயங்களை செய்துள்ளது. RY 21–22ல் “பெண்களுக்கு அதிகாரமளித்தல்” பணி வெற்றியடைந்தது, அது இப்போது உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்களுக்கு ஒரு முழக்கமாக உள்ளது.

தலைவர் ஜோன்ஸ் அந்த தலைமை பதவிக்கு வந்ததற்கு அவரது பாலினம் காரணம் அல்ல, அவர் கவனமாக வெளிப்படுத்திய தலைமை மற்றும் அர்ப்பணிப்பு சேவைகள் தான் காரணம். அவரது கணவர், DGN நிக் கிரேயாசிச், ஒரு துணைவரின் பங்கு எவ்வாறு சிறந்ததாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருக்கும் என்பதை நமக்கு உணர்த்துகிறார்.

ரோட்டேரியன்கள், தங்கள் எல்லைகளை விரிவுபடுத்தி, ஊடகங்கள் மூலம் ரோட்டரியின் பொது தோற்றத்தை வளர்க்க வேண்டும் என்று ஜோன்ஸ் விரும்புகிறார்.

பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம் (DEI) என்பது அவரது தனித்துவமான மந்திரம். கிராமப்புற, தொலைதூரப் பகுதிகளில் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பெண் குழந்தைகளின் வளர்ச்சியை இலக்காகக் கொண்ட திட்டங்கள், இந்த காலகட்டத்தின் தேவை. இந்த ஆண்டு இந்த பகுதிகளில் பெருமளவில் பணியாற்ற உறுதிமொழி எடுப்போம்.

நமது ஏழாவது கவனம் செலுத்தும் பகுதியான சுற்றுச்சூழலை ஆதரிப்போம். பூமியைப் பாது காப்பதே நம் முதல் கடமை. அது ஆரோக்கியமான சூழலையும் பசுமையான நகரத்தையும் உருவாக்கும். இதுவே நாம் வாழ உதவும்.

புனே, கொச்சி, சென்னை, வாரணாசி மற்றும் டெல்லி ஆகிய நகரங்களுக்குச் சென்ற தலைவர் ஜோன்ஸ் மற்றும் நிக் ஆகியோருக்கு இந்தியாவில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. மனித குலத்திற்கான நமது அர்ப்பணிப்பான சேவையின் மூலம் உலகை மாற்றக் கூடிய ஒரு அமைப்பாக ரோட்டரியை நாம் அனைவரும் கற்பனை செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

இந்த பணியில் அவருடன் ராணுவ வீரர்கள் போல் இருப்போம் என அனைவரும் உறுதிமொழி எடுப்போம்.

**Dr மகேஷ் கோட்பாகி**
RI இயக்குனர், 2021–23

# மாற்றத்தை ஏற்போம்!



இரண்டு வாரங்களுக்கு முன்பு, நான் மூத்த ரோட்டேரியன் ஒருவருடன் உரையாடினேன். அண்மையில் தொற்றுக்காலத்தில் ரோட்டரியின் செயல்பாட்டில் ஏற்பட்ட தாக்கம் குறித்து விவாதித்தோம். தொற்றுக்காலத்தில் தொழில்நுட்பம் ஏதாவது ஒரு வழியில் எங்களிடையே தொடர்பு ஏற்படுத்தியதை நாங்கள் ஒப்புக் கொண்டோம். இணைய வழியில் நடைபெற்ற சந்திப்புகள் ஒருபோதும் நேரில் நடைபெறும் சந்திப்புகளுக்கு அல்லது கூட்டங்களுக்கு இணையாகாது என்பதை நாங்கள் புரிந்துகொண்டதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. மேலும் நாங்கள் தொற்றுக்கு முன்னதான ரோட்டரி கூட்டங்களுக்கும் செயல்பாடுகளுக்கு விரைவில் திரும்ப இருக்கிறோம்.

எங்களிடையே நடந்த உரையாடல் அன்றே முடிந்துவிட்ட போதிலும், நான் அதைப் பற்றி இன்னும் நினைத்துக் கொண்டே இருக்கிறேன். அத்தகைய நடவடிக்கைகள் என்ன பலனை கொடுத்தாலும் நாம் இன்னும் சௌகரியமாக இருப்பதிலிருந்து விடுபட தயாராக இல்லை என்றே தெரிகிறது. இத்தகைய மனோபாவம் நமது வளர்ச்சிக்கு தடையாக இருக்கும். யானையை அறைக்குள் பார்க்க நாம் மறுக்கிறோமா?

ரோட்டரியின் மிகப்பெரிய பலமே, காலங்களின் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றத்தை ஏற்று செயல்படுவது தான். நம்முடைய இந்த குணம் தான் 120 ஆண்டுகளாக நாம் நிலைத்திருக்கவும், வளர்ச்சி யடையவும் முக்கிய காரணமாகும். இ-சங்கங்கள், உயர்ரக (hybrid) சங்கங்கள், பாஸ்போர்ட் சங்கங்கள் ஆகியவை ரோட்டரியின் மாற்றத்தை பிரதி பலிக்கும் சான்றுகளாகும். கண்ணை மூடிக்கொண்டு செயல்பட்டால் நமக்கு நாமே தீங்கு செய்வோம். ஒரே விஷயத்தை திரும்பத் திரும்பத் செய்து அதில் வேறு வகையான முடிவை எதிர் பார்ப்பது முட்டாள்தனம். அடுத்த தலைமுறையினரை ஈர்க்கவும், அவர்களை தக்கவைத்துக் கொள்ளவும் வேண்டுமானால் மாற்றத்தை தழுவ வேண்டும். தற்போதைய நிலையை நிலை நிறுத்துவது நமக்கு ஸ்திரத்தன்மையை அளிக்கும் என்றாலும் அதுவேகூட மிகப்பெரிய அச்சுறுத்தலாகவும் இருக்கக்கூடும். மாற்றத்தை விரும்பி ஏற்றுக்கொண்டால் நாம் வெகுதூரம் செல்லும் திறனை அளிக்கும்.

எத்தகைய மாற்றம் வேண்டும் என்று சிந்தித்து மதிப்பிடுவோம். மாற்றங்களை துணிச்சலுடன் ஏற்றுக்கொள்வோம். மாற்றத்தை ஏற்றுக்கொள்வது நமது செயல் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இதை நாம் ஒரு போதும் தவறவிட்டு விடக்கூடாது.

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


## Board of Trustees

| | |
|---|---|
| AS Venkatesh<br>**RI Director & Chairman, Rotary News Trust** | **RID 3232** |
| Dr Mahesh Kotbagi<br>**RI Director** | **RID 3131** |
| Dr Bharat Pandya<br>**TRF Trustee** | **RID 3141** |
| Rajendra K Saboo | RID 3080 |
| Kalyan Banerjee | RID 3060 |
| Shekhar Mehta | RID 3291 |
| Panduranga Setty | RID 3190 |
| Ashok Mahajan | RID 3141 |
| PT Prabhakar | RID 3232 |
| Dr Manoj D Desai | RID 3060 |
| C Basker | RID 3000 |
| Kamal Sanghvi | RID 3250 |
| Gulam A Vahanvaty | RID 3141 |

## Executive Committee Members (2022–23)

| | |
|---|---|
| Dr Dushyant Choudhary<br>**Chairman, Governors Council** | RID 3070 |
| Venkatesh H Deshpande<br>**Secretary, Governors Council** | RID 3170 |
| Dr N Nandakumar<br>**Treasurer, Governors Council** | RID 3232 |
| Dinesh Kumar Sharma<br>**Advisor, Governors Council** | RID 3100 |

**Editor**
Rasheeda Bhagat

**Deputy Editor**
Jaishree Padmanabhan


**Administration and Advertisement Manager**
Vishwanathan K



**Rotary News Trust**
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Magazine

# ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்



பெரும்பாலான மக்கள் நம்மை உள்ளூர்த் திட்டங்கள் மற்றும் நிதி திரட்டல்களுடன் இணைத்துப் பார்க்கிறார்கள். இது நல்ல விஷயம் தான். ஆனால், ரோட்டரி எப்படிப்பட்ட பன்னாட்டு ஆற்றல் என்பதைச் சிலர் தான் அறிந்துள்ளார்கள். ரோட்டரியின் இந்த அம்சத்தை ஓர் எடுத்துக்காட்டின் வழியாகப் புரிந்துகொள்வது இன்னும் எளிது. 2019ன் முடிவிலும் 2020ன் தொடக்கத்திலும் ஆஸ்திரேலியாவைச் சேதப்படுத்திய காட்டுத்தீக்கு ரோட்டரி எப்படி எதிர்வினையாற்றியது என்பதைச் சிந்தியுங்கள்.

கனடாவைச் சேர்ந்த ரோட்டரியன்களுக்குக் காட்டுத் தீயைப் பற்றி முன்பே தெரிந்திருந்தது. ஆஸ்திரேலியக் காட்டுத்தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு மிகச் சிறந்த வழி, ரோட்டரி அறக்கட்டளை தான் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். விரைவில், பிற நாடுகள் மற்றும் தைவானைச் சேர்ந்த ரோட்டரி சங்கங்கள், மாவட்டங்கள் அவர்களுடன் இணைந்துகொண்டார்கள், இதனால், இந்தத் தீயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய பொருளாதார மீளுதலை ஆதரிப்பதற்காக மொத்தம் $280,000 மதிப்புள்ள மூன்று அறக்கட்டளைப் பன்னாட்டு நல்கைகள் வழங்கப்பட்டன.

நாம் உதவிய தொலைதூரச் சமூகங்களின் சார்பாக ஒரு விவசாயி எழுதிய நன்றிக் கடிதம் சிறிய பண்ணை நிலமாகிய எங்கள் பகுதிக்கு உதவுவதற்காகப் பிற நாடுகளைச் சேர்ந்த ரோட்டரி சங்கங்கள் உடனடியாக முன்வருவார்கள் என்று நம்பக்கூட இயலவில்லை. இப்படிப்பட்ட ஓர் உதவிக்குத் தகுதியுள்ளவர்களாக நீங்கள் எங்களைக் கருதியதற்கு நன்றி என்றது.

ரோட்டரியின் பெயரில் செய்யப்படுகிற மிகவும் குறிப்பிடக்கூடிய திட்டங்கள் ரோட்டரி அறக்கட்டளையின் வழியாகச் சாதிக்கப்படுகின்றன. இந்தப் பட்டியல் மிகப் பெரியது. நம்முடைய இளம்பிள்ளைவாத ஒழிப்பு முயற்சிகள், நம்முடைய அமைதிக் கல்வித் திட்டங்கள் மற்றும் பெரிய அளவுத் திட்டங்களுக்கான நல்கைகளின் தாக்கத்தைப்பற்றிச் சிந்தியுங்கள்.

என்னைப் பொறுத்தவரை, ரோட்டரியையும் அதன் அறக்கட்டளையையும் பிரிக்க இயலாது: இவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். ஆஸ்திரேலியாவில் உள்ள சன்ட்ரிங்காம் ரோட்டரி சங்க உறுப்பினர் என்ற முறையில் நான் அனுபவிக்கும் நட்பு, தோழமை, திட்டங்களை நான் விரும்புகிறேன். அதே நேரம், ரோட்டரி அறக்கட்டளையின் வழியாகப் பல மக்களுடைய வாழ்க்கைகளை மாற்றும் ஒரு பன்னாட்டு இயக்கத்தின் பகுதியாக இருப்பதும் எனக்குப் பிடித்திருக்கிறது. ரோட்டரி நாணயத்தின் அந்த இன்னொரு பக்கத்தை எண்ணிப்பாருங்கள், உங்கள் அறக்கட்டளையை ஆதரியுங்கள். இதைச் செய்வதன் மூலம், நம் உலகுக்கு உண்மையாகத் தேவைப்படும் திட்டங்களுக்கு உயிர் கொடுக்கிற உங்களுடைய சக உறுப்பினர்களையும் நீங்கள் ஆதரிப்பீர்கள்.

**இயன் ரிஸ்லி**
TRF அறங்காவலர் தலைவர்



# அனைவருக்கும் ஓர் அருங்காட்சியகம்

EVA **ரெமிஜன்-டோபா**



*மெல்போர்னில் உள்ள கார்ல்டன் கார்டன்ஸ்.*

மெல்போர்ன் ஆஸ்திரேலியாவின் பண்பாட்டுத் தலைநகரம் என அறியப்படுகிறது, அதற்கு ஒரு பெரிய காரணம், அதன் அருங்காட்சியகங்கள். 27 மே முதல் 31 மே வரை நடைபெறும் 2023 RI மாநாட்டின் போது, இந்த நகரில் உள்ள பல்வேறு அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வரலாற்று, கலை, படைப்பூக்கப் பொருட்களைக் கண்டிப்பாகப் பாருங்கள்.

உங்களுடைய நாளை Melbourne Arts Precinctல் தொடங்குங்கள். இது National Gallery of Victoria உள்ளிட்ட இந்த நகரத்தின் மிகப் புகழ் பெற்ற காட்சியகங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது.

நீங்கள் செயல் கலையை விரும்புகிறவர் என்றால், Federation Squareல் அமைந்துள்ள ACMIIக் (நகரும் படங்களுக்கான ஆஸ்திரேலிய மையம்) காணுங்கள். மெல்போர்ன் தன்னுடைய பண்பாட்டுப் பன்முகத் தன்மைக்காகவும் அறியப்பட்டுள்ளது. குடியேற்ற அருங்காட்சியகத்தில், உலகெங்குமிருந்து ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்த மக்களுடைய உண்மைக் கதைகளை நீங்கள் கேட்கலாம். இந்தப் பகுதியில் வாழ்ந்த பழங்காலக் குடியிருப்பாளர்களைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு, மெல்போர்ன் அருங்காட்சியகத்தின் புஞ்சிலாகா பழங்குடியினப் பண்பாட்டு மையத்துக்குச் செல்லுங்கள்.

அடுத்து, மெல்பர்ன் கிரிக்கெட் மைதானத்தில் உள்ள ஆஸ்திரேலிய விளையாட்டு அருங்காட்சியகத்துக்குச் சென்று, தேசிய அளவில் புகழ் பெற்ற விளையாட்டு களைப் பற்றிக் கற்றுக்கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, 1850களில் மெல்போர்னில் உருவாக்கப்பட்ட ஆஸ்திரேலிய விதிமுறைகள் கால்பந்து. இங்கு இந்த நாட்டின் மிகப் பெரிய விளையாட்டு நினைவுப்பொருள் திரட்டையும் நீங்கள் பார்க்கலாம்.

மேலும் தெரிந்துகொள்ள, பதிவு செய்ய: convention.rotary.org. பார்க்கவும்.

# Rotarians!

**Visiting Chennai for business?**

**Looking for a compact meeting hall?**



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotary clubs | : | 36,913 |
| Rotaract clubs | : | 11,370 |
| Interact clubs | : | 18,415 |
| RCCs | : | 12,371 |
| Rotary members | : | 1,175,466 |
| Rotaract members | : | 207,597 |
| Interact members | : | 423,545 |

*As on July 18, 2022*

## Membership Summary

As on July 1, 2022 (Interim)

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 135 | 6058 | 8.09 | 63 | 55 | 240 |
| 2982 | 76 | 3277 | 7.02 | 47 | 98 | 73 |
| 3000 | 132 | 5175 | 8.83 | 99 | 305 | 214 |
| 3011 | 121 | 4467 | 26.89 | 76 | 120 | 36 |
| 3012 | 148 | 3782 | 23.80 | 71 | 82 | 61 |
| 3020 | 78 | 4632 | 6.82 | 33 | 168 | 350 |
| 3030 | 98 | 5136 | 15.03 | 126 | 357 | 379 |
| 3040 | 111 | 2594 | 14.26 | 57 | 83 | 182 |
| 3053 | 74 | 2929 | 17.14 | 36 | 51 | 127 |
| 3054 | 167 | 6916 | 20.36 | 106 | 195 | 569 |
| 3060 | 105 | 4803 | 14.72 | 65 | 78 | 151 |
| 3070 | 120 | 3052 | 15.63 | 48 | 53 | 59 |
| 3080 | 107 | 4333 | 13.25 | 147 | 192 | 116 |
| 3090 | 99 | 2510 | 6.49 | 46 | 109 | 161 |
| 3100 | 100 | 2132 | 10.18 | 14 | 28 | 151 |
| 3110 | 141 | 3662 | 10.76 | 14 | 19 | 106 |
| 3120 | 90 | 3695 | 16.56 | 66 | 34 | 55 |
| 3131 | 141 | 5293 | 23.92 | 120 | 244 | 143 |
| 3132 | 86 | 3498 | 11.32 | 34 | 125 | 167 |
| 3141 | 108 | 5759 | 25.72 | 144 | 189 | 103 |
| 3142 | 103 | 3607 | 20.71 | 84 | 148 | 84 |
| 3150 | 110 | 4208 | 13.31 | 143 | 148 | 119 |
| 3160 | 78 | 2783 | 9.99 | 29 | 20 | 82 |
| 3170 | 145 | 6370 | 15.27 | 99 | 260 | 176 |
| 3181 | 87 | 3344 | 9.24 | 35 | 197 | 116 |
| 3182 | 87 | 3433 | 9.18 | 45 | 131 | 104 |
| 3190 | 163 | 6497 | 19.19 | 202 | 272 | 72 |
| 3201 | 164 | 6284 | 9.75 | 126 | 104 | 87 |
| 3203 | 94 | 4710 | 7.92 | 74 | 234 | 37 |
| 3204 | 72 | 2404 | 8.49 | 23 | 32 | 13 |
| 3211 | 155 | 5060 | 8.48 | 7 | 27 | 133 |
| 3212 | 127 | 4706 | 11.84 | 83 | 270 | 153 |
| 3231 | 94 | 3399 | 7.86 | 34 | 99 | 417 |
| 3232 | 172 | 7484 | 18.92 | 132 | 229 | 98 |
| 3240 | 107 | 3602 | 16.46 | 67 | 412 | 226 |
| 3250 | 102 | 3853 | 20.63 | 64 | 74 | 186 |
| 3261 | 92 | 3255 | 18.68 | 17 | 25 | 44 |
| 3262 | 128 | 4142 | 14.92 | 76 | 625 | 270 |
| 3291 | 158 | 3959 | 24.80 | 137 | 103 | 675 |
| **India Total** | **4,475** | **166,803** | | **2,889** | **5,995** | **6,535** |
| 3220 | 72 | 1988 | 15.74 | 95 | 144 | 75 |
| 3271 | 130 | 2788 | 16.93 | 151 | 184 | 25 |
| 3272 | 161 | 1708 | 18.44 | 70 | 22 | 47 |
| 3281 | 308 | 8818 | 18.21 | 278 | 156 | 207 |
| 3282 | 179 | 3635 | 10.62 | 202 | 49 | 47 |
| 3292 | 153 | 5805 | 17.73 | 175 | 137 | 129 |
| **S Asia Total** | **5,478** | **191,545** | | **3,860** | **6,687** | **7,065** |

*Source: RI South Asia Office*

# இதயத்தை துடிக்கவைக்கும் RC ஜாம்ஷெட்பூர்

**ரஷீதா பகத்**

இந்தியாவில் உள்ள ஒரு மூன்றாம் நிலை மையம் காபூலில் நடத்திய இதய பரிசோதனை முகாமின்போது, 50 வயதான ஆப்கானிஸ்தான் குடிமகன் ஷாதாப்பின் இதயத்தில் கோளாறு இருப்பது தெரியவந்தது. அவருக்கு இதயத்தில் “பேஸ்மேக்கர்” பொருத்த வேண்டியிருந்தது. ஷாதாபுக்கு காபூலில் சிறிய பண்ணை உள்ளது. குடும்பத்தில் அவர் ஒருவர் தான் வருவாய் தேடித்தருபவர். காபூலிலும், லாகூரிலும் சிகிச்சை பெற முடியாத நிலையில் அவர் தில்லியை வந்தடைந்தார். தில்லியில் அவரை இந்த மருத்துவமனைக்குச் செல்லுங்கள், அந்த மருத்துவ மனைக்குச் செல்லுங்கள் என்று அலைக்கழித்தனர். யாரும் உதவி செய்யாத நிலையில் சிகிச்சைக்கான செலவு கட்டுக்கடங்காமல் போகவே, உதவி செய்ய யாரும் முன்வராத நிலையில் அவர் கையில் இருந்த பணமும் கரைந்துபோனது.

விரக்தியின் விளிம்பில் இருந்த அவரிடம், சில காபூலிவாலாக்கள், தில்லியிலிருந்து கொல்கத்தா செல்லுங்கள், அங்கு இதய குறைபாடு உள்ளவர்களுக்கு இலவசமாக இதய சிகிச்சை செய்கிறார்கள் என்று கூறியுள்ளனர். ஜாம்ஷெட்பூரில் ஒரு Dr இதய நோயாளிகளுக்கு சிகிச்சை

*ஷாதாப், Dr விஜயா பரத் மற்றும் மருத்துவக்குழுவுடன்.*



அளிப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து அவர், நேராக என்னிடம் வந்தார் என்று நினைவுகூர்ந்தார் Dr விஜயா பரத். அவர் இதயநோய் மருத்துவர் மட்டுமல்ல, RID 3250க்கு உட்பட்ட ஜாம்ஷெட்பூர் ரோட்டரி சங்க உறுப்பினரும்கூட. அவர் கடந்த 17 வருடங்களாக ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா மெயின் மருத்துவ மனையின் கூட்டு முயற்சியுடன் இதய நோயாளிகளுக்கு பேஸ்மேக்கர் சிகிச்சை அளித்து வருகிறார்.

அந்த பெண் மருத்துவர், ஷாதாபை பரிசோதித்தபோது அவருக்கு இதயத்தில் கோளாறு இருப்பதும், இதயத்துடிப்பும் குறைந்திருப்பதும், அவருக்கு பேஸ்மேக்கர் பொருத்த வேண்டும் என்பதும் தெரியவந்தது. அதை அவரிடம் கூறியபோது, என்னிடம் இருந்த பணமும் கரைந்துவிட்டது, எனது விசாவும் காலாவதியாகும் நிலையில் உள்ளது என்று கூறினார். அதற்கு டாக்டர் விஜயா, பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல், விசாவை மட்டும் நீட்டித்துக் கொண்டு வாருங்கள் என்று கூறினார்.



Dr *விஜயா பரத் (வலது) ஒரு பயனாளியுடன்.*



இதைக்கேட்ட ஷாதாப், தரையில் மண்டிபோட்டு அமர்ந்து ஆப்கான் மொழியில் சப்தமாக ஏதோ கூறினார். அவர் என்ன சொல்கிறார் என்பது மருத்துவருக்குப் புரியவில்லை. சிகிச்சை வலி நிறைந்தது என அவர் நினைக்கிறாரோ என நினைத்துக் கொண்டு, உங்களுக்கு சிகிச்சையின் போது வலி ஏதும் ஏற்படாது. மயக்க மருந்து கொடுத்துதான் அறுவைச்சிகிச்சை செய்யப்படும் என்று Dr விஜயா தெரிவித்துள்ளார். அதற்கு அவர், நான் சிகிச்சைக்காக பயப்படவில்லை. சிகிச்சை மூலம் உன்னை குணப்படுத்த முடியும். பயப்படாதே நான் இருக்கிறேன் என்று சொன்ன முதல் நபர் நீங்கள் தான். அதற்காகத்தான் பிரார்த்தனை செய்தேன் என்றார். அவரது பேச்சு பெண் மருத்துவருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

விசாவை நீட்டித்து ஜாம்ஷெட்பூர் வந்த ஷாதாபுக்கு பேஸ்மேக்கர் பொருத்தப்பட்டது. அவர் மகிழ்ச்சி யுடனும் ஆரோக்கியத்துடனும் வீடு திரும்பினார்.

ரோட்டரி உதவியுடன் பேஸ்மேக்கர் பொருத்தப்பட்ட 99-வது நபர் ஷாதாப். இதுவரை RC ஜாம்ஷெட்பூர் 222 பேருக்கு பேஸ்மேக்கர் பொருத்த உதவி யுள்ளது. ரோட்டரியின் பேஸ்மேக்கர் கதை பிறந்தது 2004 ஆம் ஆண்டில். அப்போது Dr விஜயா ரோட்டரி உறுப்பினர்கூட இல்லை. ரோட்டரி ஆன் ஆக மட்டுமே இருந்தார். அவரது கணவர் ராமச்சந்திர பரத், ஜாம்ஷெட்பூர் ரோட்டரி சங்க உறுப்பினர் மட்டுமல்ல, முன்னாள் ஆளுநராகவும் இருந்தவர். டாடா நகரில் உள்ள டாடா மெயின் மருத்துவமனையில் இதயோநோய் சிகிச்சை நிபுணராகப் பணியாற்றி வரும் விஜயா, ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியரின் மனைவி அஞ்சலிதாஸை (65) சந்திக்க நேரிட்டது. அஞ்சலி அவ்வப்போது நினைவு இழந்துவிடுவார். அவரது இதயம் துடிப்பதில் சிக்கல் இருந்தது. அவருக்கு பேஸ்மேக்கர் கருவி பொருத்தினால்தான் பிரச்னை தீரும் என்ற நிலை இருந்தது. ஆனால், ஏழை பள்ளி ஆசிரியரால் பணம் செலவழிக்க முடியாத நிலையில்,

தனது மனைவி அடிக்கடி சுயநினைவு இழப்பதையே பார்த்து வந்தார். தாஸ் தினமும் எனது மருத்துவமனைக்கு வந்து என்னிடம், என் மனைவியை காப்பாற்ற ஏதாவது செய்யுங்கள் என்பார். அவரது மனைவிக்கு பேஸ்மேக்கர் தேவைப்பட்டது. ஆனால், அதற்குத் தேவையான பணம் கணவரிடம் இல்லை.

இந்த நிலையில், 2004ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் மாலையில், Dr விஜயா, ஏழை இதய நோயாளிகளுக்கு பேஸ்மேக்கர் என்ற தலைப்பில் கூகுளில் தேடுதல் நடத்தினார். அதே நேரத்தில் USஸில் ஆளுநர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பிய, RID 3250-க்கு உட்பட்ட, ஜாம்ஷெட்பூர் ரோட்டரி சங்க உறுப்பினருமான ரொனால்டு டிகோஸ்டா, தேவைப்படும் நோயாளிகளுக்கு பேஸ்மேக்கர் பொருத்தும் திட்டத்தை செயல்படுத்தி வருவது தெரியவந்ததும் Dr விஜயா ஜாக்பாட் அடித்தது போல் உணர்ந்தார். உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி பேஸ்மேக்கர் வங்கிக்கு பேஸ்மேக்கர்களை சப்ளை செய்யும் ஹார்ட் பீட் இன்டர்நேஷனல் (ஹெச்பிஐ) என்ற அமெரிக்க அமைப்பு பற்றிய தகவல்களும் கூகுள் மூலம் தெரியவந்தது.

தனது கணவர் கலந்துகொண்ட சங்கத்தின் நிர்வாகக்குழு கூட்டத்தில் மாவட்ட ஆளுநர் ரொனால்டு டிகோஸ்டா, அமெரிக்காவில் நடைபெற்ற ஆளுநர்கள் பயிற்சி மாநாட்டில் ஏழை இதய நோயாளிகளுக்கு பேஸ்மேக்கர்கள் வழங்கும் திட்டத்தைப் பற்றி தெரிந்து கொண்டதாக கூறியிருந்தது நினைவுக்கு வந்தது. ஆனால், முழுமையாகத் தெரியவில்லை. இப்போது கூகுள் மூலம் ஆராய்ந்த போது ஹார்ட் பீட் இன்டர்நேஷனல் மற்றும் ரொனால்டு கூறிய தகவல்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்பது தெரிய வந்ததாக Dr விஜயா கூறினார்.

நல்லது நடக்க வேண்டும் என்று விதிக்கப் பட்டிருந்தால் எல்லாம் சரியாகத் தானே நடக்கும். Dr விஜயா உடனடியாக புளோரிடாவை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் ஹார்ட் பீட் இன்டர்நேஷனல் அமைப்புக்கு ஒரு கடிதம் எழுதினார். உலகம் முழுவதிலும் சிறந்த பேஸ்மேக்கர்களை உற்பத்தி செய்து நன்கொடையளிக்கும் நிறுவனங்கள் ரோட்டரி பேஸ்மேக்கர் வங்கிகளுக்கு அனுப்பும் வழிமுறைகளை கண்டறிந்தார். இதைத் தொடர்ந்து RC ஜாம்ஷெட்பூர் துரிதமாக செயல்பட்டு Dr விஜயா தான் பேஸ்மேக்கர் பொருத்தும் மருத்துவ நிபுணர் என்றும், டாடா மெயின் மருத்துவமனைதான் சிகிச்சை அளிக்கும் இடம் என்றும் தெரிவித்து விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பினர். இதையடுத்து உலகின் 42வது மற்றும் இந்தியாவின் ஐந்தாவது பேஸ் மேக்கர் வங்கி 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் பிறந்தது.

சங்கத்தின் உறுப்பினர் கே.என்.வெங்கட், தனது மகனின் 40வது பிறந்தநாளை முன்னிட்டு முதல் வருடாந்திர உறுப்பினர் தொகையான 4,200 டாலரை ஹெச்பிஐ-க்கு வழங்க முன்வந்தார். இதையடுத்து அமெரிக்காவிலிருந்து ஜாம்ஷெட்பூருக்கு ஒரு பெட்டியில் பேஸ்மேக்கர்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பேஸ்மேக்கர் கருவி பொருத்தப்பட்ட முதல் பயனாளி அஞ்சலிதாஸ் என்று பெருமையுடன் குறிப்பிட்டார் Dr விஜயா. அது முதல் பேஸ்மேக்கர் தேவைப்படும் எந்த ஒரு ஏழை நோயாளியும் டாடா மருத்துவமனை திருப்பியனுப்பியதில்லை என்று அவர் பெருமிதத்துடன் கூறினார். தொடக்கத்தில் மனைவியாக இருந்த அவர், பின்னர் ரோட்டேரியனாக, ஜாம்ஷெட்பூர் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார்.

பேஸ்மேக்கர் யாருக்கு எப்போது தேவைப்படும் என்கிற விவரங்களையும் அவர் தெரிவித்தார். சிலருக்கு இதயத்துடிப்பு மிக குறைவாக இருக்கும். அதாவது



*பேஸ்மேக்கர் பொருத்தப்பட்ட டொஸ்மா லியங்கி.*

இதயத்துடிப்பு நிமிடத்துக்கு 40 என்ற அளவில் குறைவாக இருக்கும். (வழக்கமாக ஒரு நிமிடத்துக்கு 60 முதல் 90 முறை இதயத் துடிப்பு இருக்க வேண்டும்.) அதுவும்கூட திடீரென நின்றுவிடும் வாய்ப்பு உள்ளது. இதயத்துடிப்பு குறைவான நிலையில் ஒரு நபரால் எந்த வழக்கமான பணிகளிலும் ஈடுபட முடியாது. மிகவும் சோர்வாக காணப்படுவார். எனவே ஒருவரின் இதயத்துடிப்பு வழக்கமாக செயல்படவைப்பதற்காக பொருத்தப்படுவதுதான் பேஸ்மேக்கர் என்று Dr விஜயா விளக்கினார்.

இதயத்துடிப்பை சரி செய்வதற்காக பேஸ்மேக்கர் கருவி பொருத்துவதற்கு 30 நிமிடங்கள்தான் ஆகும். கழுத்து எலும்புக்கு கீழே மார்பின் இடது அல்லது வலது புறம் இரண்டு இன்ஞ்ச் அளவுள்ள பேஸ்மேக்கர் கருவியைப் பொருத்தி, அதிலிருந்து ஒரு மெல்லிய கம்பியை இதயத்துடன் இணைப்பார்கள். இந்த கருவி லிதியம் பேட்டரி மூலம் செயல்படும் என்று அவர் விளக்கினார். தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக இப்போது பேஸ்மேக்கரின் எடை 15 கிராமாக குறைந்துள்ளது. இரண்டு பேஸ்மேக்கர் பொருத்த வேண்டியிருந்தால் அதன் எடை 19 கிராம்தான் இருக்கும். ஒரு பேஸ்மேக்கரின் விலை ரூ.55,000. இரட்டை பேஸ்மேக்கர் விலை ரூ.1.2 லட்சம் இருக்கும்.

பேஸ்மேக்கர் கருவி பொருத்தப்பட்ட பின் இதய நோயாளியின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பேஸ்மேக்கர் கருவிக்கான கட்டணம் தவிர, மருத்துவமனை மற்றும் மருந்துகளின் செலவினங்கள் ரூ.5,000 முதல் ரூ.10,000 வரை இருக்கும். 2018ம் ஆண்டு நான் டாடா மெயின் மருத்துவமனையின் இதய நோயியல் துறைத் தலைவர் பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்றேன். ஆனால், டாடா மெயின் மருத்துவ மனை சில சமயங்களில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள இதய நோயாளிகளாக இருந்தால் ஆபரேஷன் அல்லது மருத்துவமனை கட்டணங்களை நிர்வாகம் வாங்குவதில்லை என்பது எனக்குத் தெரியும்



டோஸ்மா லியங்கி தன் குழந்தைகளுடன்.

என்று கூறும் Dr விஜயா, இப்போது மருத்துவமனையின் ஆலோசகராகவும், சங்கத்தின் பேஸ்மேக்கர் குழுவிலும் பணியாற்றி வருகிறார்.

டாடா மருத்துவமனையில் தமக்குப் பின் பொறுப்பேற்ற Dr மந்தர் ஷாவிடம் பேசி அவரை ஜாம்ஷெட்பூர் ரோட்டரி சங்க உறுப்பினராக்கினார் Dr விஜயா. இப்போது Dr மந்தர்ஷா, சங்கத்தின் பேஸ்மேக்கர் குழு தலைவராக இருக்கிறார். ஜாம்ஷெட்பூர் டாடா மருத்துவமனையில் தேவைப்படும் ஏழை நோயாளிகளுக்கு பேஸ்மேக்கர் பொருத்தும் பணியை தொடர்கிறார்.

2004 முதல் 2014ம் ஆண்டுவரை, ஹெச்பிஜ, பேஸ்மேக்கர் கருவிகள் கொண்ட அட்டைபெட்டியை அனுப்பிவந்தது. அதற்கு சுங்க வரியும் குறைவு. ஆனால், மத்திய அரசின் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டதால் நன்கொடையாக அளிகக்ப்படும் பேஸ்மேக்கர் கருவிகளைப் பெருவதில் சிக்கல் ஏற்பட்டது.  மேலும் கூடுதல் வரி விதிக்கப்பட்டது. இதையடுத்து எங்கள் சங்கத்தின் பேஸ்மேக்கர் குழு மாற்று ஏற்பாடுகள் பற்றி சிந்தித்தது. சாய்பாஸா ரோட்டரி சங்க உறுப்பினர் ரோட்டேரியன் என்.எல்.ருங்தா அளித்து வரும் வருடாந்திர நன்கொடை மூலம் ஒரு தொகுப்பு நிதியம் ஏற்படுத்தப்பட்டது. தேவைப்படும் நோயாளிகளுக்கு பேஸ்மேக்கர் கருவிகள் வாங்க அந்த தொகை பயன்படுத்தப்பட்டது. இதனால் இதய நோயாளிகளின் இதயத்தை துடிக்கவைக்கும் திட்டம் இடையூறு இல்லாமல் தொடர்ந்து வருகிறது என்றார் Dr விஜயா.

புதிய ரோட்டரி ஆண்டு தொடங்கியுள்ளதால் வரும் ஆண்டுக்கான வருடாந்திர தொகையான ரூ.6 லட்சத்தை விரைவில் அனுப்பிவைப்பதாக ருங்தாவிடமிருந்து முதல்நாள்தான் கடிதம் வந்துள்ளதாக Dr விஜயா கூறினார். இதன் மூலம் மேலும் 9 இதய நோயாளிகளுக்கு பேஸ்மேக்கர் கருவி பொருத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ருங்தாவின் வருடாந்திர பங்களிப்பிற்கு PRID கமல் சங்வி பொறுப்பாளர். அவர், சில ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்பூர் வந்து, பயனாளிகள் சிலரிடம் கலந்துரையாடினார். இத்திட்டத்தை தொடர்வதற்கு தேவையான

அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளார். சாய்பாஸா ரோட்டரி சங்கத்தின் ரோட்டேரியன் ருங்தா, நிரந்தர அடிப் படையில் வருடாந்திர தொகையை கருணையுடன் இத்திட்டத்துக்கு நன்கொடையாக அளிக்க முன்வந்துள்ளதை சங்வி பாராட்டினார்.

இத்திட்டத்தால் ஈர்க்கப்பட்ட PRIP சேகர் மேத்தா, பேஸ்மேக்கர் கருவி தேவைப்படும் நோயாளிகள் பலரை ஜாம்ஷெட்பூர் சங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று குறிப்பிட்ட Dr விஜயா, பயனாளிகள் 3250 ரோட்டரி மாவட்டத்தைச் சேர்ந்த வர்கள் (பிகார் மற்றும் ஜார்க்கண்ட்) மட்டுமல்ல, ஒடிஸா மற்றும் மேற்குவங்கத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர் என்று தெரிவித்தார்.


கடந்த 2005 மார்ச் மாதம் முதல் இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை 222 பேருக்கு பேஸ்மேக்கர் கருவி பொருத்தப்பட்டுள்ளது. ஒவ்வொருவரிடமும் ஒரு சுவாரஸ்யமான கதை உள்ளது. அதில் ஷாதாப் உள்ளிட்ட இருவர் விதிவிலக்கானவர்கள். அவர்களில் ரோட்டரி மூலம் பேஸ்மேக்கர் கருவி பொருத்தப்பட்ட 22 வயதான பழங்குடியின பெண் தோஸ்மா லியாங்கியும் ஒருவர். முதல் முறை அவர் கர்ப்பமாக இருந்தபோது அவரது இதயச் செயல்பாட்டில் குறைபாடு இருந்தது கண்டறியப்பட்டது. அதாவது அவருக்கு பேஸ்மேக்கர் கருவி தேவைப்பட்டது. அந்த சமயத்தில் அவருக்கு குறைப் பிரசவம் ஏற்பட்டது. ஆனாலும் அவருக்கு இரட்டை பேஸ்மேக்கர் கருவி பொருத்தப்பட்ட பின் அவரது இதயத்தின் செயல்பாடு நன்றாக உள்ளது. ஆரோக்கியமாக வாழ்க்கை நடத்துகிறார். அடுத்தடுத்த கர்ப்பங்கள் மூலம் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி உள்ளார்.

டாடா மருத்துவமனையிலிருந்து ஓய்வுபெற்ற நிலையிலும், Dr விஜயா, புதிய இதய நோய் நிபுணர் Dr மந்தர் ஷாவுடன் இணைந்து செயலாற்றி வருகிறார். தனிப்பட்ட முறையில் இதய நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வரும் அவர், பிகார் மற்றும் ஜார்க்கண்டைச் சேர்ந்த, பேஸ்மேக்கர் தேவைப்படும் இதய நோயாளிகளை, குறிப்புகளுடன் Dr மந்தர் ஷாவிடம் அனுப்பிவைக்கிறார்.

சாதாரணமாக பேஸ்மேக்கரில் உள்ள பேட்டரிகள் 10 ஆண்டுகள் வரை செயல்படும். முன்பு பேஸ்மேக்கர் பொருத்திக் கொண்ட சிலரின் பேட்டரிகள் செயலிழந்து விட்ட நிலையில், அவர்களுக்கு இரண்டாவது முறையாக பேஸ்மேக்கர் புதிய கருவி பொருத்தப்பட்டது. அந்த வகையில் ரோட்டரி மூலம் 12 பேர் பயனடைந்துள்ளனர்

கடந்த 10 ஆண்டுகளில் பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ள நோயாளிகள் சிலர் இப்போது இலவச பேஸ்மேக்கர்களை புறக்கணித்துவிட்டு அதற்கு பணம் செலுத்த முன்வந்துள்ளனர் என்று Dr விஜயா நினைவுகூர்ந்தார். எங்களிடம் பேஸ்மேக்கர் பொருத்திக் கொண்ட ஒருவர், நீண்ட நாள் கழித்து அதை மாற்ற வரும் போது, எங்களது பிள்ளைகள் இப்போது வேலைக்குச் செல்கிறார்கள். எனவே எங்களுக்கு இலவசமாக பேஸ்மேக்கர் தேவையில்லை. இரண்டாவது முறை பேஸ்மேக்கர் பொருத்தத் தேவையான பணத்தை நாங்கள் கொடுத்துவிடுகிறோம் என்று சொல்கின்றனர். இது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. நாங்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு வேறு ஒரு ஏழைக்கு உதவுங்கள் என்று அவர்கள் சொல்லும்போது மனம் மகிழ்கிறது. இதயநோய் பிரச்னை உள்ள ஏழைகள் பேஸ்மேக்கர் கருவி தேவைப்பட்டால் rotaryisr16030@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்றார் Dr விஜயா.

இந்த திட்டம் ஒருகட்டத்தில் பாலிவுட்டில் திரைப்படமாக உருவெடுக்கலாம் என்பது யாருக்குத் தெரியும்? பேஸ்மேக்கர் திட்டத்துக்காக 2018ஆம் ஆண்டில், ICICI வங்கி சிறந்த பெண்மணிகளுக்கான விருதை தமக்கு வழங்கியதை Dr விஜயா நினைவுகூர்ந்தார். விருதை வழங்கி பேசிய நடிகை வித்யாபாலன், விருபெற்றவர் கூறிய கதை நன்றாக உள்ளது. இத்திட்டம் குறித்து யாராவது திரைப்படம் எடுக்க முன் வந்தால் அதில் நடிக்க தான் தயாராக இருப்பதாக அவர் கூறினார்.■



PRID *கமல் சங்வி பேஸ் மேக்கர் பொருத்தப்பட்டுள்ள இதய நோயாளி ஒருவருடன்.*



THINK EXCELLENCE. LIVE EXCELLENCE.

# Shri Vaishnav Vidyapeeth Vishwavidyalaya

**City Office:** Shri Vaishnav Vidya Parisar, 177 Jawahar Marg, South Rajmohalla, **INDORE**-2 **Campus:** Indore-Ujjain State Highway, **INDORE**-453111. **Mob.: 9303700163, 9303700164, 9303700165, 930700166**

## LEARN TO BE PROACTIVE WITH FUTURE READY SYLLABUS AND REAL-TIME INDUSTRY EXPOSURE.

**REGISTER NOW!**

**ONLINE REGISTRATION OPEN | Register@www.svvv.edu.in**

Scan me

**Scholarships for the Meritorious Students • Relief for the Children of COVID-19 Warriors**

**Excellent Track Record of Placements.**

Approved under Section 2(f) of the UGC Act, 1956

ADVT.

↗ MoU with Hanyang University, South Korea & St. Cloud State University, USA for Student/Faculty Exchange and Joint Research. ↗ MoU with TCS for Technical Collaboration. ↗ MoU with NRDC (Ministry of Science & Technology) for transfer of technology to industry. ↗ MoU with NCSSS (National Cyber Safety and Security Standards) for Technical Collaboration. ↗ MoU with Tata Power Ltd. for Technical Collaboration. ↗ Agreement with CISCO Network Academy. Agreement with Bosch India. ↗ MoU with Microsoft Corporation (India) Pvt. Ltd. for Technical Collaboration. ↗ MoU with IBM for Technical Collaboration. ↗ MoU with Red Hat for Technical Collaboration. ↗ Apple Authorised Training Centre Agreement for Education. ↗ MoU with Mitsubishi Electric India. ↗ MoU with ICT Academy ↗ MoU with Mahatma Gandhi National Council of Rural Education (MGNCRE) Government of India, Ministry of Education. ↗ MoU with Impetus Technology India Pvt. Ltd. for Technical Collaboration. MoU with Manmade Textiles Research Association (MANTRA) for Technical Collaboration ↗ Fees Structure is approved by the Government of Madhya Pradesh. ↗ Ranked jointly by Innovation cell of the Ministry of Education (Government of India) and AICTE in Top 50 Most Preferred Institutions in 2021.

## ADMISSIONS 2022-23

### ENGINEERING AND TECHNOLOGY

**B. Tech.** (4 years)
Agricultural Engineering/Automobile Engineering/ AE (Electric Vehicle Engineering)/Civil Engineering/ Electronics and Computer Science Engineering/ Electrical Engineering (Solar Energy-Tata Power)/ Electrical & Electronics Engineering/Electrical Engineering/Electronics and Communication Engineering/EC (Internet of Things) / ME (Artificial Intelligence & Machine Learning)/ CE (Artificial Intelligence & Machine Learning)/ ECE (Artificial Intelligence & IoT)/ Electronics and Instrumentation Engineering/ Instrumentation & Control Engineering/ Mechanical Engineering/ Mechanical Engineering (Plant Engineering-Tata Power)/Mechatronics /Railway Engineering/ Robotics and Automation

**M. Tech.** (2 years)
Civil (Geotechnical Engineering) /Civil (Structural Engineering)/Civil (Transportation Engineering) / Civil (Water Resources Engineering) / Digital Communication/Digital Instrumentation/ Embedded System & VLSI design/Mechanical (Thermal and Design Engineering)/Power Electronics/Power System /Renewable Energy/ Virtual Instrumentation/ Construction Technology & Management/ Automation & Robotics

**Diploma Programs** (3 years)
Automobile Engineering /Civil Engineering/ Electrical Engineering /Electronics and Instrumentation Engineering/Electronics Engineering/Mechanical Engineering/ Mechatronics Engineering/ Solar Energy

**B. Tech.** (4 years)
Computer & Communication Engineering/ Computer Science & Business Systems- (TCS)/ Computer Science Engineering/CSE (Mobile Applications)-Apple (AATCE)/ CSE (Artificial Intelligence - IBM)/ CSE (Big Data Analytics-IBM)/ CSE (Big Data and Cloud Engineering- Impetus)/ CSE (Cloud and Mobile Computing - IBM)/ CSE (Data Science - IBM)/ CSE (Enterprise System-red hat) /CSE (FullStack Development & Blockchain- IBM)/CSE (Information and Cyber Security - NCSSS)/ CSE (Artificial Intelligence and Machine Learning-Microsoft)/ Information Technology/IT (Data Science-IBM)/IT (FullStack Development & Blockchain-IBM)/CSE (Internet of Things-IBM)

**M. Tech.** (2 years)
Computer Science Engineering /Computer Science Engineering (Big Data Analytics)

**Dual Degree Programs**
**B. Tech. + M. Tech.** (4+2 years)
Computer Science Engineering/Computer Science Engineering (Big Data Analytics)

**B. Tech. + MBA** (4+2 years)
Computer Science Engineering/ Information Technology

**Diploma Program**
**One-Year** Post Graduate Diploma in Computer Applications (PGDCA)
**Six-Months** Diploma in Computer Hardware and Networking (DCHN)

**B. Tech.** (4 years)
Garment & Fashion Technology/ Textile Engineering

**M. Tech.** (2 years) Textile Engineering

**B. Sc.** (3 years) Fashion Design

**Diploma Program** (3 years)
Textile Engineering

### FORENSIC SCIENCE

**B.Sc. (Hons.)** (4 years)
Digital & Cyber Forensics

**B.Sc.** (3 years)
Forensic Science/ Forensic Psychology

**M.Sc.** (2 years) Forensic Science/ Forensic Psychology/ Cyber Forensics

**M.A./ M.Sc.** (2 years) Criminology

**Dual Degree Program**
**B.Sc.+ M.Sc.** (3+2 years)
Forensic Science/ Forensic Psychology

### ARCHITECTURE

**B.Arch.** (5 years)

**B.Des.** (4 years) Interior Design/ Product Design/Graphics & Animation

**M.Des.** (2 years) Interior Design

**B.Plan.** (4 years)

**M.Plan.** (2 years) (Urban Planning)

**Dual Degree Program**
**B.Des.+ M.Des.** (4+2 years)
Interior Design/ Product Design/ Graphics & Animation

### MANAGEMENT

**MBA** (2 years)
Engineering Management/ Family Business & Entrepreneurship/ International Business/ Media Management/Agri-business/Business Analytics/ Advertising and Public Relations/Tourism/ Rural Management-MGNCRE/ Hospital & Healthcare Management/ Marketing/ Human Resource/ Finance

**BBA (Hons.)** (4 years)
**BBA** (3 years)
**BBA (Fintech)** (3 years)
**BBA (Rural)** (3 years)

**Dual Degree Programs**
**BBA + MBA** (3+2 years)
Marketing/HR/Finance/Operations/ Fintech/Rural Management-MGNCRE

**MBA** (2 years) (Industrial Management)
Open to Engineering Graduates only.

### JOURNALISM AND MASS COMMUNICATION

**M.A.** (2 years)
Journalism and Mass Communication/ Hindi Journalism

**Dual Degree Program**
**B.A. + M.A.** (3+2 years)
Journalism and Mass Communication

### FINE ARTS

**BFA** (4 years) Painting/ Animation

**MFA** (2 years) Painting/ Animation

### AGRICULTURE

**B.Sc. (Hons.)** (4 years) Agriculture

**M.Sc.** (2 years)
**Agriculture**
Genetics and Plant Breeding / Entomology /Plant Pathology/ Soil Science & Agricultural Chemistry/ Agronomy/ Horticulture (Fruit Science)/ Horticulture (Vegetable Science)

### SCIENCE

**B.Sc.** (3 years)
Physics/ Chemistry/ Maths/ Life Science/ Computer Science/ Biotechnology/ Electronics/ Instrumentation/ Statistics/ Economics

**B.Sc. (Hons.)** (4 years)
Physics/ Chemistry/ Maths

**M.Sc.** (2 years)
Physics/ Chemistry/ Maths/ Environmental Science/ Analytical Chemistry/Biotechnolgy

**Dual Degree Program**
**B.Sc. + M.Sc.** (3+2 years)
Physics/ Chemistry/ Maths/ Statistics

### COMPUTER APPLICATIONS

**BCA** (3 years) Big Data Analytics-IBM

**M.Sc.** (2 years) Computer Science

**MCA** (2 years) Banking Technology

**MCA** (2 years)

**Dual Degree Programs**
**BCA + MCA** (3+2 years)
**BCA + MCA** (3+2 years)
Banking Technology

### SOCIAL SCIENCES, HUMANITIES AND ARTS

**B.A.** (3 years)

**B.A. (Hons.)** (4 years)
Psychology/ Economics/ English Literature/ Sociology/ Political Science/ Anthropology/ History

**M.A./ M.Sc.** (2 years)
Psychology/ Applied Psychology/ Clinical Psychology/ Counselling Psychology/ English Literature/ Sociology/ Economics/ Education/ Anthropology/ History/Political Science

**Dual Degree Program**
**B.Lib & I.Sc. + M.Lib & I.Sc.** (1+1 year)
**One- Year Advanced Diploma in French**

### COMMERCE

**B.Com (Hons.)** (4 years)

**B.Com** (3 years)
Banking & Finance/ Entrepreneurship/ Tax Procedure/ Computer Applications/ Plain

**M.Com** (2 years)

**Dual Degree Programs**
**B.Com+ M.Com** (3+2 years)
**B.Com + MBA** (3+2 years)

### LAW

**LL.B (Hons.)** (3 years)

**LL.M** (2 years)
Business Law/ Crimnal Law

**LL.M** (1 year)
(Business Law, Criminal Law, Human Rights)

**Integrated Programs** (5 years)
**B.A.LL.B (Hons.)**
**B.B.A.LL.B (Hons.)**
**B.Com. LL.B (Hons.)**

### HOME SCIENCE

**M.Sc.** (2 years) Food & Nutrition

**Dual Degree Program**
**B.Sc.+ M.Sc.** (3+2 years) Food & Nutrition

### PARAMEDICAL SCIENCES*

**Bachelor Medical Lab. Technician** (3 years)

**DIPLOMA PROGRAMS** (2 years)
X ray Radiographer Technician/ Medical Lab. Technician/ Cath. Lab. Technician/ Dialysis Technician/ Optrometric Refraction/ Optometrist Contact Lens/ Anesthesia Technician/ Yoga/ Naturopathy

### FACULTY OF DOCTORAL STUDIES & RESEARCH (3 years)

All Seats of Ph. D program have been filled up.

**Teaching Assistanceship (TA) of ₹12,400 (Rupees Twelve Thousand Four Hundred Only) for all GATE Qualified Candidates admitted in 02 years full time M.Tech Program, subject to MHRD/UGC/AICTE Guidelines**

**Note : (1) Lateral Entry seats are available in B.Tech. (2) SVET (Shri Vaishnav Entrance Test) will be held on August 07 and 14, 2022. The seats in various programs will be filled on the basis of prescribed Tests/SVET-2022.**

*Subject to approval of concerned Regulatory Authority

**Toll Free: 1800 233 9111**
**Helpline: 1800 102 9191**

For details, visit: www.svvv.edu.in admission@svvv.edu.in

# 110 நாடுகளில் 30% பெண் ரோட்டரி உறுப்பினர்கள்

**ரஷீதா பகத்**



RI *தலைவர்*
*ஜெனிஃபர் ஜோன்ஸ்*

கடந்த இரண்டு ஆண்டுகளில் என்னிடம் கேட்கப்பட்ட பொதுவான கேள்வி ரோட்டரியின் முதல் பெண் தலைவர் என்பதை எப்படி உணர்கிறீர்கள் என்பது தான். எங்களின் மாறுபட்ட கண்ணோட்டங்களை மேம் படுத்துவதற்கான வாய்ப்புகள் திறந்திருப்பதால் உற்சாகமாக நான் உணர்கிறேன் என்று பதிலளித்தேன் என்றார் ஹுஸ்டன் மாநாட்டில் பேசிய உள்வரும் தலைவரான ஜெனிஃபர் ஜோன்ஸ்.

ஒவ்வொரு நுழைவுக்கும் மூல காரணம் ரோட்டரியில் சேர விடுக்கப்பட்ட அழைப்புதான். அதனால் தான் ரோட்டரி உலகம் முழுவதும் இந்த அழைப்பை முன்னெடுத்துச் செல்ல, பன்முகத்தன்மை, சமபங்கு, உள்ளடக்கம் (Diversity, equity and inclusion - DEI) ஆகியவற்றை பயன்படுத்துவதில் உறுதியாக இருக்கிறேன். நமது DEI முன்முயற்சிகளை மதிப்பதும், அதன் படி வாழ்வதும் நமது கலா சாரத்தின்படி நடப்பதைவிட அதிகமானது. இது நம்மிடம் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு கொண்டாடுவது. உலக அளவில் மனிதகுலத்தை ஒன்றுசேர்க்கும் செயலாகும்.

DEI என்று வரும்போது அதன் முடிவுகள் என்ன என்பதுதான் முக்கியமானது. 2023ம் ஆண்டுக்குள் ரோட்டரியில் 30 சதவீதம் பேர் பெண் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற நிர்வாகக்குழுவின் இலக்கை எட்டுவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் மட்டுமே உள்ளன. நாம் நீண்டகாலம் பயணித்துள்ளோம். ஏற்கெனவே 110 நாடுகளில் இந்த இலக்கை எட்டிவிட்டோம் என்று பலத்த கரவொலிக்கு இடையே அவர் கூறினார்.

ஆனால், ரோட்டரி உலகம் முழுவதிலும் 30 சதவீதப் பெண்கள் என்ற நிலையை எட்டவேண்டுமானால் நாம் இன்னும் கொஞ்ச தூரம் பயணிக்க வேண்டும். 50 சதவீதம் என்பதற்கான அடுத்த நிறுத்தம் 30 சதவீதமாகும். ரோட்ராக்ட் உறுப்பினர்கள் இந்த இலக்கை ஏற்கெனவே எட்டிவிட்டது உங்களுக்குத் தெரியுமா? ரோட்டரி கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் அதிக அளவில் இடம்பெற வேண்டும். அதில் பேசுபவர்கள் உண்மையாகவும் வெளிப்படையாகவும் பேசவேண்டும். அப்போதுதான் உறுப்பினர்கள் அதை வரவேற்பார்கள். அதாவது தடைகளை அகற்றிவிட்டு சேர்ப்பதற்கான கதவுகளைத் திறந்து விட வேண்டும். ஒவ்வொரு கண்டம், கலாசாரம் மற்றும் இனத்திலிருந்தும் நமக்கு ரோட்டரி தலைவர்கள் தேவை. இளைஞர்கள் முக்கிய பொறுப்புகளையும் பங்கையும் வகிக்க முன்வர வேண்டும்.

ரோட்டேரியன்கள் நீண்ட நாள் உறுப்பினர்களை மதிப்பதுடன், புதிய ரோட்டரி உறுப்பினர்கள் சொல்வதை காதுகொடுத்து கேட்க வேண்டும் என்று ஜோன்ஸ் கூறினார். வரலாற்று தகவல்களை பகிர்ந்து கொள்ளும் போது நாம் முன்னெப்போதையும் விட ஒருவருக்கொருவர்

நல்லவராக இருக்க வேண்டும். ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வதும், ஒருவர் எழுச்சிக்கு மற்றொருவர் உதவுவதும், நமது பாதுகாப்பில் இருப்பவர்கள் மீது அக்கறை செலுத்துவதும் முக்கியமானது.

நமது குறிக்கோள்கள், சாதனைகள் பற்றி பேசுவதற்கு ஹூஸ்டன் சரியான இடம். நிலவுக்கு மனிதனை முதல் முதலாக அனுப்புவது, பாதுகாப்பாக பூமிக்கு திரும்பச் செய்வது என்னும் தகவலை 1961ம் ஆண்டு மே மாதத்தில் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜான் F கென்னடி, ஹுஸ்டனில் இருந்து தான் அறிவித்தார் என்று ஜோன்ஸ் நினைவுகூர்ந்தார். ஹிடன் ஃபிகர்ஸ் திரைப்படத்தில் டோரோதி வாகனாக நடித்த ஒலிவியா ஸ்பென்ஸ், நாஸாவில் முதல் நிர்வாகப் பதவியை வகித்த ஆப்பிரிக்க-அமெரிக்க பெண்மணி என்பதையும் அவர் நினைவுகூர்ந்தார். அவர் அமைதியானவர், கடின உழைப்பாளி, சிறந்த கணிதவியலாளர். திறமையான சக ஊழியர்களைக் கண்டறியும் திறமை கொண்ட அவருக்கு நன்றி. பலதரப்பட்ட பின்னணிகள் கொண்ட பெண் தலைமுறையினர் அவருக்கு கடமைப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான அறிவியல் முன்னேற்றங்கள் அவரது கடின உழைப்பால், திறமையால் விளைந்தவை என்று ஜோன்ஸ் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், அந்த வகையான மரபு பெரிய விஷயமாகும். ஏனெனில் ரோட்டரியின் முதல் பெண் தலைவர் என்பது இரண்டாவது மூன்றாவது என்று வரும் வரை எதையும் குறிக்காது. அந்த நிலைக்கு வர ரோட்டரிக்கு மாறு பட்ட கண்ணோட்டம் கொண்ட தலைவர்கள் தேவை. புதிய பாதைகளை திறக்கவும், புதிய பாதையில் செல்லவும், புதுமைகளைச் செயல்படுத்தக்கூடிய தலைவர்கள் ரோட்டரிக்கு வரவேண்டும். இது ஒரு மிகப்பெரிய பணியாகும் என்றார்.

உறுப்பினர்கள் வளர்ச்சி பற்றி ஜோன்ஸ் குறிப்பிடுகையில், ஒருபுறம் புதிய உறுப்பினர்கள் சேர்த்தாலும் மறுபுறம் இருக்கும் உறுப்பினர்களை இழந்துவிடாமல் தடுத்து நிறுத்துவது முக்கியமானது. எனவே நமது சங்கத்தின் அனுபவங்கள் வரவேற்கத்தக்க தாகவும் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், சுவாரஸ் மாகவும் இருக்க உதவுவோம். சங்கக்கூட்டங்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில், வரவேற்கும் வகையில் இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும், என்றார்.

ஆனால், கதவுகளை விரிய திறந்துவைப்பதன் மூலம் மட்டும் இவற்றை செய்துவிட முடியாது. நம்மீதுள்ள மதிப்புதான் நமக்கு பலம். ஒரு சிறந்த அமைப்பு என்கிற முறையில் நாம் நமது உறுப்பினர்களிடமும் தரத்தை எதிர்பார்க்கிறோம். மாவட்ட மற்றும் சங்கங்களின் தலைவர்கள் புதிய உறுப்பினர்களுக்கு அர்த்தமுள்ள பொறுப்புகளையும் சேவை வாய்ப்புகளையும், தனிப்பட்ட வளர்ச்சியையும் வழங்க வேண்டும். ஏனெனில் இவை ஒரு நோக்கத்தையும் ஆர்வத்தையும் உருவாக்குகின்றன. நாம் உறுப்பினர்களுக்கு உதவி செய்தால்தான், சமூகத்திற்கு சேவை செய்ய முடியும். நான் உறுப்பினர்கள் என்று கூறும்போது அது ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் இரண்டையும் உள்ளடக்கியது. நான் பல்வேறு சர்வதேச குழுக்கள், உறுப்பினர்கள் குழு மற்றும் மெல்போர்ன் மாநாட்டுக் குழுவில் ரோட்ராக்டர்களை சேர்க்க இருக்கிறேன் என்று ஜோன்ஸ் அறிவித்தார்.

எதிர்காலத் தலைவர்களை உருவாக்கவும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தவும் இளைஞர்கள் ஆலோசனைக் குழுவை கூட்ட திட்டமிட்டுள்ள தாகவும் அறிவித்தார். எனது பதவிக்காலத்தில் மாவட்ட மாநாடுகளின் போது ரோட்டரி தலைவரின் பிரதிநிதியாக ரோட்ராக்டர்கள் குழுவை நியமிக்கவிருக்கிறேன். நாம் ஒவ்வொருவரிடமிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய உள்ளது.

மகளிர்க்கு அதிகாரம் அளிக்கச் செய்ய தலைவர் சேகர் மேத்தா மேற்கொண்ட முயற்சிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இது உலகம் முழுவதும் மிகவும் சக்திவாய்ந்ததாக எதிரொலித்தது. மகளிர் அதிகாரம் பெறுவதை அங்கீகரிக்கும் துணிச்சலான முயற்சியை நாங்கள் தொடர்வோம்.

ரோட்டரி திட்டங்கள் ஒளிவீசவும், அதை உலகுக்கு காட்சிப்படுத்தவும் நானும், நிக்கும் கற்பனை தாக்க சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள இருக்கிறோம். நாம் கவனம் செலுத்தும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிறப்பான திட்டங்களை பார்வையிட நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்த நிறுத்தங்கள் எல்லாம் வெவ்வேறு வகையான ஊடக அணுகுமுறையுடன் கூடியதாக இருக்கும். சிலர் ரோட்டரியின் கதை சொல்லும் சர்வதேச அளவில் முதன்மையான பத்திரிகை யாளர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் ரோட்டரி சென்றடையாத சமூகம் மக்களைச் சென்றடைய உதவும் சமூக ஊடகத்தில் செல்வாக்கு மிகுந்தவர்களாக இருப்பார்கள்.

ஒவ்வொரு ரோட்டேரியன்களும் மிகப்பெரிய கனவுகாண வலியுறுத்திறேன். உங்களின் மிகப்பெரிய கனவுகள் நனவாக வேண்டும். எப்படி என்று கேட்கிறீர்களா? போலியோவை ஒழிக்க நாம் கனவுகண்டதுபோல என்றார் ஜோன்ஸ்.

கற்பனையில் ரோட்டரி என்னும் தனது கருப்பொருளை தொட்டுப்பேசிய ஜோன்ஸ், போலியோ இல்லாத உலகம், அனைவருக்கும் தூய்மையான குடிநீர், நோய் நொடிகள் இல்லாத உலகம், எழுத்தறிவு பெற்ற குழந்தைகள், அனைவரிடமும் கருணை, நம்பிக்கை, அன்பு, அமைதியை ஏற்படுத்தும் உலகை கற்பனை செய்வோம். அதனால் தான் நான் ரோட்டரி பற்றி கற்பனை செய்யுங்கள் என்கிறேன் என்றார் ஜெனிஃபர் ஜோன்ஸ்.■

# ரோட்டரியில் பிராந்தியமயமாக்கல் தேவை: சேகர் மேத்தா

ரஷீதா பகத்

ஹூஸ்டன் மாநாட்டின் நிறைவு அமர்வில், பதவி காலம் முடிந்து வெளியேறும் தலைவரான சேகர் மேத்தா, ரோட்டரிக்கான தனது கனவுகள் பலவற்றை வெளிப்படுத்தினார். அனைத்து ரோட்டேரியன்களும் பெரிதாக கனவு காண்பதுடன், அதை செயலாக்க கடுமையாக உழைக்க வேண்டும் என்றார். மிகப்பெரிய நிறுவனமான ரோட்டரி, உலகின் 10 முக்கிய அம்சங்களில் ஒன்றாக எப்போதும் பேசப்பட வேண்டும் என்பதே தமது லட்சியக்கனவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். ரோட்டரி ஒரு மிகப்பெரிய அமைப்பு என்பதும், அது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதும் நாம் அனைவரும் அறிந்த ஒன்று. இதற்காக நாம் பெருமைப்படு கிறோம். 117 ஆண்டு கால வரலாறு நமக்குள்ளது. ஐக்கிய நாடுகள் சபையைவிட அதிக நாடுகளில் நாம் தடம்பதித்துள்ளோம்.

நாம் சிறப்பாகச் செயல்பட்டாலும், உலகின் முதல் 10 சேவை அமைப்புகளின் பட்டியலை கூகுள் மூலம் நாம் தேடிப்பார்த்தால் அதில் ரோட்டரி இடம்பெறவில்லை. உறுப்பினர்கள் எண்ணிக்கை, திட்டச் செலவுகள் அல்லது அதன் தாக்கத்திலும் நாம் மேலே வரவில்லை. பொது சுகாதாரத் திட்டங்களில் முதிர்ந்த அனுபவம் பெற்ற ரோட்டரியை வளர்ச்சி திட்டங்களைச் செயல்படுத்தும் போது உலக சுகாதார நிறுவனம் அல்லது ஐக்கிய நாடுகள் சபை ஆலோசனைக்கு தொடர்ந்து அழைக்க வேண்டும் என்பது தான் எனது கனவாகும். உலக பொருளாதார மன்றத்தில் பேசுவதற்கு ரோட்டரி அழைக்கப்பட வேண்டும். பல்வேறு நாடுகள் இணைந்து செயலாற்ற வருமாறு நம்மை அழைக்க வேண்டும் என்றார்.

ஆனால், சாதனைகளை எட்ட வேண்டுமானால், நாம் நமது அமைப்பை முழுமையாக மறுமதிப்பீடு செய்ய வேண்டும். இன்று நமது வருவாய், செலவினங்கள் அல்லது உள்ளீடு ஆகியவற்றை ரோட்டரி அறக்கட்டளை மூலமே கணக்கிட முடியும். ஆனால், அது முழுக்கதையின் ஒரு பகுதி மட்டுமே என்று குறிப்பிட்ட மேத்தா, இந்தியாவை ஓர் உதாரணமாகச் சுட்டிக்காட்டினார். இந்தியா இது வரை அதிகபட்சமாக 20 மில்லியன் டாலரை, ரோட்டரி அறக்கட்டளை மூலம் மானிய உதவியாகப் பெற்றுள்ளது. ரோட்டேரியன்கள் இந்தியாவில் மேற்கொண்ட பணிகளின் முழு மதிப்பு அது தானா? என்றால் இல்லை என்றே கூறமுடியும். உண்மையான மதிப்பு அதைவிட பத்து மடங்காக இருக்கும். பெரும்பாலான செலவினங்கள் சங்கத்தின் அளவில் நடப்பதால், நாம் செய்த பணிகளின் முழுமதிப்பு அல்லது உண்மையான மதிப்பு நமக்குத் தெரிவதில்லை என்றார்.

சில உதாரணங்களைக் கூறிய அவர், நாம் எத்தனை மருத்துவ மனைகளையும், பள்ளிகளையும் நிறுவி நிர்வகித்து வருகிறோம்? எத்தனை இதய அறுவைச் சிகிச்சைகளுக்கு நிதியுதவி செய்திருக்கிறோம்? நம்மால் எத்தனைப் பேர் சுகாதாரச் சேவைகளைப் பெறமுடிந்துள்ளது? உலகம் முழுவதும் எத்தனை ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகளை நிறுவியுள்ளோம் நாம்? கோவிட் தொற்றுக்காலத்தில் நிவாரண உதவித் திட்டங்களுக்கு நாம் எவ்வளவு செலவழித்திருக்கிறோம்? எங்களிடம் இதற்கான எண்ணிக்கையும் இல்லை, மதிப்பீடும் இல்லை என்றார்.

இதன் விளைவு, ரோட்டேரியன் களுக்கு அமைப்பின் உண்மையான மதிப்பு தெரியாது என்பதுதான். நம்மிடம் போதுமான தரவுகள் இல்லாததால் நமது செயல்பாடு களின் உண்மை மதிப்பையும், தாக்கத்தையும் நாம் குறைத்து மதிப்பிடுகிறோம். ரோட்டரியின் உண்மையான மதிப்பு மில்லியன் டாலர் கணக்கல்ல, பில்லியன் டாலர் கணக்கு. இதை ஒவ்வொருவரும் தெரிந்துவைத்திருக்க வேண்டும் ஒவ்வொரு ரோட்டரி சங்கமும், தாங்கள் செய்யும் பணிகளின் மதிப்பை விவரமாக பதிவு செய்ய வேண்டும். எத்தனை மணி நேரம் திட்டப் பணிகளுக்காக செலவிட்டிருக் கிறோம் என்கிற தகவலும் பதிவு செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்தால், ரோட்டரி இன்டர் நேஷனலின் உண்மையான தாக்கத்தை நாம் அளவிட முடியும்.



### பிராந்தியங்களுக்கு கூட்டாட்சி சுவை கொடுங்கள்

ரோட்டரியின் ஒளிமயமான எதிர்காலம் தனது மற்றொரு கனவு எனக் குறிப்பிட்ட சேகர் மேத்தா, ரோட்டரிக்கு கூட்டாட்சி கட்டமைப்பை

கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். ரோட்டரி ஆஸ்திரேலியா, ரோட்டரி ஆப்ரிக்கா, ரோட்டரி கொரியா உள்ளிட்டவைகளுக்கு தனியான நெறிமுறைகள், கலாசாரம், நடைமுறைகள் நிர்வாகம் இருந்தாலும் அனைத்தும் ரோட்டரி இன்டர்நேஷனலுடன் தொடர்புடையவை. ஒன்றின் மீதான அளவு மற்றதற்கு பொருந்தாது.



ஜப்பானில் உள்ள ரோட்டரி, அமெரிக்க ரோட்டரியிலிருந்து மாறுபட்டது, அது ஜெர்மனி ரோட்டரியிலிருந்தும் வேறுபட்டது. ரோட்டரியில் பிராந்தியமயமாக்கல் வேண்டும். உள்ளூர்க்காரர்களை கவர்ந்திழுக்கவும், உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் இது உதவும் என்றார்.

அவரது மற்றொரு முக்கியமான கனவு, ரோட்டரியின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை ஆண்டுக்கு 2 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்பதுதான். ஒவ்வொரு ரோட்டேரியனும், ஒவ்வொருவரும் ஒருவரை கொண்டுவர வேண்டும் என்னும் நான் அறிமுகப்படுத்திய தாரகமந்திரத்தை பின்பற்றினால் இது சாத்தியமே. ஆனால், இது வெறும் முழக்கமாக அல்லாமல் ரோட்டரியின் குறிக்கோளாகவும் இருக்க வேண்டும். பன்முகத் தன்மை, சமபங்கு, உள்ளடக்கம் ஆகியவைதான் நமது முக்கிய குறிக்கோள். இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை என்றாலும் மேலும் வளர்வோம் என்பது ரோட்டரி அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்புக்கு இது உதவும். இதன் மூலம் நாம் அதிக திட்டங்களையும் அதிக மில்லியன் டாலர் மதிப்பிலான திட்டங்களையும் செயல்படுத்த முடியும். மேலும் மில்லியன் கணக்கிலான மக்களும் பயனடைவார்கள் என்றார்.

இந்தக் கனவுகள் நனவானால், அரசாங்கங்கள், கார்ப்பொரேட் நிறுவனங்கள் ரோட்டரியுடன் இணைந்து நல்ல திட்டங்களைச் செயல் படுத்த முன்வருவார்கள். பல்வேறு கார்ப்பொரேட் நிறுவனங்கள் இப்போது சமூக பொறுப்புணர்வு திட்டங்களில் கவனம் செலுத்தி வருகின்றன. ரோட்டரி அவர்களுடன் கூட்டாண்மை ஏற்படுத்திக் கொண்டு பல பெரிய திட்டங்களைச் செயல்படுத்த முடியும். போலியோ ஒழிப்பு திட்டத்தை நாம் செயல்படுத்தியது போல், தேசத்தை கட்டமைப்பதிலும் நாம் முக்கியப் பங்கு வகிக்க முடியும். போலியோ ஒழிப்பு நடவடிக்கையில் நமது பங்கு பணிகளை உலகறியச் செய்துள்ளோம். ஜாம்பியாவில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைக்காகவும், ஹைட்டியில் குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், இந்தியாவை முழு எழுத்தறிவு பெற்ற நாடாக உருவாக்கியதற்காகவும் அறியப்பட வேண்டும்.

இந்த ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு திட்டம் எல்லா இடங்களிலும் ரோட்டேரியன்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அது மகளிர்க்கு அதிகாரம் அளித்தல் அல்லது மகளிர் மேம்பாடு திட்டமாகும். நானும் ராஷியும் சென்ற இடங்களில் எல்லாம் இத்திட்டத்தின் செயல்பாடு களை எங்களுக்கு விளக்கினர். ரோட்டரி கவனம் செலுத்தும் பகுதிகளில் எல்லாம் இதைச் செயல்படுத்தலாம். மேலும் பெரிய அளவிலான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான திறனை இது எங்களுக்கு அளிக்கும். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரதமர்களும், அதிபர்களும் இந்த முயற்சியை பாராட்டியுள்ளனர். தற்போது இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது. மனித குலத்தில் பாதிக்கும் மேல் உள்ள மகளிர் மற்றும் சிறுமிகளுக்கு பாதி வாய்ப்புகள் நிச்சயமாக கிடைக்க வேண்டும்.

தமது பதவிக்காலம் முடிந்ததை அடுத்து கையெழுத்திட்ட சேகர் மேத்தா, இவை சாதாரண கனவுகள் அல்ல. அவை நமது அமைப்பின் எதிர்காலத்தை வடிவமைக் கூடியவை. இந்த ஆண்டு இயக்குநர்கள் குழு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் குறித்து விவாதிப்பதில் அதிக நேரம் செலவிட்டதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நாங்கள் இப்போதுதான் ஊசியை நகர்த்தத் தொடங்கியுள்ளோம் என்றார்.■

# உக்ரைனில் ரோட்டரியின் பணிகள் பிரமிக்கவைக்கின்றன: ஹ்யூகோ

ரஷீதா பகத்

ரோட்டரி முக்கியமாக கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்று அமைதியை கட்டமைத்தல் மற்றும் முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணுதல். ஹூஸ்டன் மாநாட்டில், உக்ரைன் நாட்டு போர் பின்னணி மீதும் கவனம் செலுத்தப்பட்டது. மாநாட்டில் உரையாற்றிய ரோட்டரி இன்டர்நேஷனல் ஜெனரல் செகரட்டரி மற்றும் தலைமைச் செயல் அதிகாரியான ஜான் ஹ்யூகோ, 11,000-த்துக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்கு முற்றுகையின்போது ஒடுக்கப்பட்ட உக்ரைன் நாட்டு மக்களுக்கு ரோட்டரி எவ்வாறு உதவி செய்தது என்று விளக்கினார். அவரது பெற்றோர் உக்ரைன் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவரது பேச்சில் விறுவிறுப்பு இருந்தது.

RI *பொதுசெயலாளர் ஜான் ஹ்யூகோ*



உக்ரைன் நாட்டு மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு உலகம் முழுவதிலிருந்து உதவிகள் கிடைக்கப்பெற்றது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார். தி போர்ட்நைட் (The Fortnight) விடியோ கேம் நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் அகதிகளுக்கு நிதியுதவி செய்து ஆதரவளிக்க முடிவு செய்தனர். தங்களது விடியோ கேம் விற்பனை மூலம் 15 முதல் 20 மில்லியன் டாலர் திரட்ட அவர்கள் முன்வந்தனர். போர்ட்நைட் வீரர்களின் சராசரி வயது 19. இவர்கள் 155 மில்லியன் டாலர் வரை உக்ரைன் நிவாரண நிதிக்கு நன்கொடையாக அளித்தனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ரோட்டரியின் புதிய செயல் திட்டத்தை நாங்கள் உருவாக்க முயன்றபோது, நாங்கள் செய்த ஆய்வில், இளைஞர்கள் இது போன்ற பணிகளைச் செய்ய ஆர்வம் காட்டியதும் அர்த்தமுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்பியதும் தெரியவந்தது. மற்றவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் அனைத்து தலைமுறையினரும் ஆர்வமாக இருந்தனர். அதனால்தான் நிலையான மாற்றத்தை உருவாக்க மக்கள் ஒன்றிணைந்து செயல்படும் உலகத்தை நாம் காண்கிறோம்.

**மாற்றத்தை ஏற்படுத்திய ஹூஸ்டன் கிளப்**

ரோட்டரி வளர வேண்டும் என்ற நிலையில், ரோட்டரி சங்கங்கள், ஹூஸ்டனில் உள்ள பிளானோ வெஸ்ட் ரோட்டரி சங்கத்தின் செயல்பாடுகளை உற்று கவனிக்கலாம். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அந்த சங்கத்தில் 20 உறுப்பினர்களே இருந்தனர். அவர்களில் ஒருவர்கூட சேவை செய்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. அவர்களின் சராசரி வயது 67. அந்த சங்கத்தில் 5 பேர் மட்டுமே பெண்கள். ஒருவர் மட்டுமே கறுப்பர் இனத்தைச் சேர்ந்தவர். உண்மையில் இந்த சங்கம், சமூக நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவில்லை. எனவே சங்கத்தின் உறுப்பினர்கள் தங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொண்டனர். பள்ளிநேரத்துக்குப் பிறகு குழந்தைகளுக்கு உணவு வழங்குதல், ஆசிரியர்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளுடன் அவர்கள் தொடங்கினார்கள். காவல்துறை அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்தனர். கோவிட்-19 தொற்றுக் காலத்தில் நிவாரண உதவிகளை ஏழை சமூகத்தினருக்கு வழங்கினர்.

அடுத்து, ஆப்ரோ-அமெரிக்கன் மற்றும் லத்தீன் அமெரிக்கர்கள் வசிக்கும் பகுதிகளில் கோவிட் தொற்று காலத்தில் தேவைப்படும் குடும்பத்தினருக்கு உணவுகளை நேரடியாக வழங்கத் தொடங்கினர். இந்த நடவடிக்கை அனைத்து சமூகத்தைச் சேர்ந்த மக்களையும் கவர்ந்ததால் அவர்களும் உதவிக்கரம் நீட்டத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து ஆப்ரோ-அமெரிக்கன், லத்தீன் அமெரிக்கன் மற்றும் LGBTQ மக்கள் சங்கத்தில் சேரத் தொடங்கினர். இதனால் சங்கம் இளமையானது. இன்று அந்த

சங்கத்தில் 37 பெண்கள் மற்றும் 28 ஆண்கள் உள்பட மொத்தம் 65 உறுப்பினர்கள் உள்ளனர். சங்க உறுப்பினர்களின் சராசரி வயது 67 லிருந்து 50 ஆகக் குறைந்துவிட்டது என்று பலத்த கரவொலிக்கு இடையே ஹ்யூகோ கூறினார்.

சங்கங்கள் வளரும்போது, சமூகங்களை மாற்றும் சக்தி அவர்களுக்கு உண்டு. அதன் உறுப்பினர்கள் செய்யும் நன்மைகள் கவனிக்கப்படாமல் போகாது என்று அவர் மேலும் கூறினார்.



ரஷீதா பகதி

*உக்ரைன் ரோட்டேரியன் ஒருவருடன் PRIP ராஜேந்திர சாபூ மற்றும் அவர் மனைவி உஷா.*

### உக்ரைனுக்கு உதவுதல்

தற்போது உக்ரைனில் ரோட்ராக்டர்கள் உள்ளிட்ட ரோட்டரி குடும்பத்தினர் செய்து வரும் பணிகள் அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வை காட்டுகிறது என்று குறிப்பிட்ட அவர், அதனை விவரித்தார். உக்ரைன் மீதான ரஷியதாக்குதல் தொடங்கியபோது நாங்கள் ரோட்டரியின் பேரிடர் நிவாரண நிதியை ஏற்படுத்தி உக்ரைனுக்கு நேரடியாக நன்கொடை அளிக்க ஏற்பாடு செய்தோம். உலகம் முழுவதிலிருந்து தாராளமாக நன்கொடை அளித்தவர்களுக்கு நன்றி. உக்ரைன் நாட்டு மக்களுக்கு குடிநீர், உணவு, தங்குமிடம், மருந்துகள், உடைகள் உள்ளிட்ட நிவாரண உதவிகள் வழங்குவதற்காக ரோட்டரி 15 மில்லியன் டாலர் பங்களிப்புச் செய்துள்ளது.

ஆனால், அது கதையின் ஒருபகுதி மட்டுமே. உலகம் முழுவதும் பல்வேறு அமைப்புகள் உக்ரைனுக்காக நிதி திரட்டி வருகின்றன. ஆனால், நாம் தனித்துவமானவர்கள். உக்ரைனில் 62 ரோட்டரி சங்கங்களும், 6 சாட்டிலைட் சங்கங்களும் உள்ளன. இவற்றில் 1,100 உறுப்பினர்கள் உள்ளனர். மேலும் 24 ரோட்ராக்ட் சங்கங்களில் 300-க்கும் மேலானவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். உக்ரைனில் உள்ள ரோட்டரி குடும்பத்தினருடன் உள்ள தொடர்பு காரணமாக ரோட்டரி இன்டர்நேஷனல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருந்து, அவசர சிகிச்சைக்கான வாகனம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை வழங்கமுடிந்தது. நாங்கள் எல்லாவற்றையும் கேட்டு அதற்கு பதிலளித்தோம். உக்ரைனில் உள்ள ரோட்டேரின்கள் மற்றும் ரோட்ராக்டர்கள் அனைவரும் எங்களுக்கு ஆதரவாக இருந்ததுடன் அசாதாரணமாகச் செயல்பட்டனர்.

ரஷிய தாக்குதல் காரணமாக உக்ரைனில் விமான சேவை நிறுத்தப்பட்டிருந்த நிலையில் அந்த நாட்டின் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒரு குழுவாக வந்து ஹூஸ்டன் மாநாட்டில் பங்கேற்றனர். அவர்கள், தங்கள் நாட்டுக் கொடியை அசைத்ததும் மாநாட்டில் பங்கேற்ற இதர ரோட்டேரியன்கள் உற்சாகத்துடன் அவர்களை வரவேற்றனர். உணர்வுபூர்மாக பேசிய ஹ்யூகோ, 1940-களில் உக்ரைன் மீது சோவியத் யூனியன் படையெடுத்தபோது எங்களது பெற்றோர் அங்கிருந்து வெளியேறி ஜெர்மனியின் தெற்குபகுதியில் உள்ள புலம்பெயர்ந்தவர்கள் முகாமில் தஞ்சமடைந்தனர். அதன் பிறகு அமெரிக்காவில் புதிய வாழ்க்கையைத் தொடங்கினர். எனது தந்தை மிக்சி கனில் உள்ள கிளார்க்ஸ்டன் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தபோது அவர்களை இருகரம் நீட்டி வரேவற்றனர், தங்கள் நாட்டிற்கு திருப்பிச் செலுத்து வதற்கான வழி இருப்பதை அவர்கள் இங்கே கண்டுபிடித்தனர்.

1990-களில் சுதந்திரம் பெற்ற சில நாள்களில் உக்ரைனில் தாம் உக்ரைனில் பணியாற்றியதாகவும், உறவினர்கள், நண்பர்கள், முன்னாள் தோழர்கள் பலர் இன்றும் அங்கு வாழ்ந்து வருவதாகவும் அவர் கூறினார். உக்ரைனில் பாதிக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ரோட்டேரியன்கள் செய்துவரும் உதவிகள் தம்மை பிரமிக்கவைத்ததாகவும், அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் மேலும் கூறினார். ரோட்டரி மூலம் பல்வேறு மருத்துவமனைகளுக்கு மருத்துப் பொருள்களும், மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டன. போலந்து, ஹங்கேரி, ஸ்லவோகியா, மோல்தோவா, ரோமானியா, பால்டிக் குடியரசு மற்றும் பல்வேறு நாடு களைச் சேர்ந்த ரோட்டேரியன்கள், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட லட்சக்கணக்கான அகதிகளுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளனர். ரோட்டேரியன்களில் சிலர் தங்கள் நாட்டை ஒட்டியுள்ள எல்லைப் பகுதிகளுக்குச் சென்று அகதிகளுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்கியுள்ளனர். மேலும் அவர்கள் உள்ளூர் சூழலுக்கு ஏற்ப

செயல்பட உதவினர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

போர் வளையத்தில் சிக்கியுள்ள நாட்டில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்ட உதவிகள் தொடர்பாக உங்களுக்கு ஆதாரம் ஏதேனும் தேவைப்பட்டால் நான் சொல்வதை சாட்சியாக எடுத்துக் கொள்ளுங்கள் என்றார் ஹ்யூகோ. போர் தொடங்கிய பிறகு உக்ரைனில் ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த மக்கள் தங்கள் உயிருக்காக போராடுகிறார்கள். முழு நகரமும் தங்கள் கண் முன்னே அழிக்கப்படுவதை காண்கிறார்கள். இதுவரை ஆயுதங்களைத் தொடாத மக்கள், தங்கள் நாட்டை காக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவற்றிற்கு நடுவே உக்ரைன் மக்கள், தகுந்த சமயத்தில் ரோட்டரி செய்த உதவியை நினைத்துப் பார்க்கின்றனர். ரோட்டரியில் சேர வேண்டும் என்ற அசாதாரண முடிவை எடுக்கின்றனர்.

போர்ட்நைட் வீரர்கள் தங்கள் அலவன்சுகளை நன்கொடையாக வழங்கியது, ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்ராக்டர்கள் இன்னமும் கூட்டங்களை நடத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முற்படுவது எனக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஏன் நமது அமைப்புக்கும் அதன் எதிர்காலத்துக்கும் பெருத்த நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. ஏனெனில் நாம் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தினால், நமது அமைப்பு வளர்ச்சி அடையும், அதன் மூலம் மேன்மேலும் நல்லதைச் செய்ய முடியும். எது சரி என தெரிந்ததோ அதைச் செய்வதற்கு துணிச்சலுடன் எழுந்து நிற்பதன் மூலம் உலகத்தை அமைதிக்கு மிக அருகில் கொண்டுவர முடியும் என்று கூறி தனது உரையை முடித்தார் ஜான் ஹ்யூகோ.

அவரின் கருத்துக்களைத் தொடர்ந்து உக்ரைனின் லிவிவ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான மைரோஸ்லாவ் காவ்ரிலிவ் பேசுகையில், தங்கள் நாட்டில் உள்ள ரோட்டரி சங்கங்கள் எப்படி ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கின. உறுப்பினர்கள், தங்கள் சகாக்களுக்கு எப்படி உதவினர் என்று விவரித்தார்.

ஷெல்டர்பாக்ஸ் CEO சஞ்ச் ஸ்ரீகாந்தன், ரோட்டரியும் ஷெல்டர்பாக்ஸும் எப்படி கூட்டாண்மையுடன் செயலாற்றி நெருக்கடியான காலகட்டத்தில் நிவாரண உதவிகளை வழங்கினர் என்று விவரித்தார். அமைதி மாநாட்டின் நிறைவு அமர்வில் RIPE ஜெனிஃபர் ஜோன்ஸ், யுனிசெப், அமெரிக்கா பிரிவின் தலைமை நிர்வாகி மைக்கேல் நையன்ஹுயிஸ் இருவரும் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் கூட்டாண்மை அமைத்துள்ளதாக அறிவித்தனர்.■

Rotary PEOPLE OF ACTION

# இந்தியாவிலிருந்து மருந்துகளைப் பெற்றது RC கொலம்போ வெஸ்ட்

## ரோட்டரி செய்திக் குழு

கடுமையான பொருளாதார நெருக்கடியின் பிடியில் உள்ள இலங்கை, வெளிநாட்டு நாணய கையிருப்பு இல்லாததால் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்ய முடியாத நிலையில், DGE ஜெரோம் ராஜேந்திரம் அந்நாட்டின் சுகாதார அமைச்சகம் மற்றும் இலங்கை தேசிய மருத்துவமனை, கொழும்பு (NHSL) ஆகியவற்றிட மிருந்து அவசர கோரிக்கை ஒன்றை பெற்றார்.



RID 3220 DGE *ஜெரோம் ராஜேந்திரம் (இடது) மருந்துகளை சுகாதார சேவைகளின் துணை இயக்குனர்* Dr W K *விக்கிரமசிங்கேவிடம் (இடமிருந்து 4வது) அளிக்கிறார்.*

உதவிக்கான கோரிக்கையைத் தொடர்ந்து, ராஜேந்திரம் இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்களை அணுகினார். PDG Dr E K சகாதேவன் மற்றும் RC ஈரோடு சென்ட்ரல், RID 3203, அவசரகாலப் பொருட்களை கொடுத்து உதவ உடனடியாக ஒப்புக்கொண்டனர். சில நாட்களுக்குள் ரூ.1 கோடி மதிப்பிலான பொருட்களின் ஏற்று மதியை ஏற்பாடு செய்தனர்.

சுகாதார சேவைகளின் துணை இயக்குனர் Dr W K விக்கிரமசிங்கே விடம் மருந்துகளை கொடுத்தது RC கொலம்போ வெஸ்ட், RID 3220.'' என்று சங்கத்தின் தலைவர் கபில மொஹொட்டி கூறினார். DGE ராஜேந்திரம், சமூக சேவை இயக்குனர் K P நாகராஜனா, மொஹொட்டி மற்றும் Dr ருவன் துஷார மதிவலகே, NHSL அதிகாரிகளுடன் சேர்ந்து, அத்தியாவசிய பொருட்களை சரியான நேரத்தில் அனுப்பியதற்காக ரோட்டரி இந்தியாவிற்கு நன்றி தெரிவித்தனர்.■

Rotary PEOPLE OF ACTION

# இலங்கைக்கு இந்திய ரோட்டரியின் உதவி

**கிரண் ஜெஹரா**



PDG *சம்பத்குமார், அவர் மனைவி சாய் பிரசன்னா,* PDG *ஒளிவண்ணன்,* DGND NS *சரவணன்,* DG JKN *பழனி இலங்கையிற்கான துணை கமிஷனர்* D *வெங்கடேஷ்வரனுடன் (இடதிலிருந்து 5வது) சென்னையில்.*

இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் RID 3232 PDG G ஒளிவண்ணன், இலங்கையைச் சேர்ந்த ஹென்றி விக்ரமசிங்கவை வர்த்தக நிமித்தமாக சென்னையில் சந்தித்தார். ஆனால், விக்ரமசிங்கவுக்கு அடிக்கடி கைபேசி அழைப்பு வந்ததால் சந்திப்பு அவ்வபோது தடைபட்டது. அந்த அழைப்புகள் இலங்கை பிரதமர் அலுவலகத்திலிருந்து வந்ததாகவும் அவை அவசர அழைப்புகள் என்றும் விக்ரமசிங்க தெரிவித்தார். இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், உணவுக்கான அவசரத் தேவை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். நான் அவரிடம், ரோட்டரியின் சேவைகளை எடுத்துச் சொல்லி, நாங்கள் உதவ முடியும் என்று அவரிடம் கூறினேன் என்றார் ஒளிவண்ணன்.

இதையடுத்து சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தில் PDG ஒளிவண்ணன் மற்றும் ரோட்டேரியன்கள் சக்ரவர்த்தி, குமார் ராஜேந்திரன் உள்ளிட்டோர் இலங்கை யிற்கான துணை கமிஷனர் D வெங்கடேஸ்வரனை சந்தித்தனர். இந்த கூட்டம் நடந்து முடிந்த பின்னர் ரோட்டேரியன்கள் சமூக வலைத் தளங்களில் இலங்கைக்கு உணவுப் பொருள்கள் அளித்து உதவுமாறு ரோட்டரி சங்கங்களைக் கேட்டுக் கொண்டனர். மேலும் மெட்ராஸ் நார்த் டிரஸ்ட் ரோட்டரி சங்கம் மூலம் நிதி திரட்டவும் முடிவு செய்யப்பட்டது.

PRIP கல்யாண் பானர்ஜி தனது பங்களிப்பாக ரூ.30,000 வழங்கினார். PDG சின்னதுரை அப்துல்லா (D 3212) ரூ.15 லட்சம் மதிப்பிலான உணவுப் பொருள்களை நன்கொடையாக வழங்கினார். AKS உறுப்பினரும் DGயுமான VR முத்து (RID 3212) 1,000 லிட்டர் சமையல் எண்ணெய்யை நன்கொடையாக வழங்கினார். RID 3291 சார்பில் ரூ.2 லட்சம் நிதி வழங்கப்பட்டது. குண்டூரில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனமான அம்மா டிரஸ்ட் 100 டன் அரிசியை நன்கொடையாக அளித்தனர். ஏழு கன்டெய்னர்கள் மூலம் அரிசி, கோதுமை மாவு, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், பால் பவுடர்கள் என மொத்தம் ரூ.90 லட்சம் மதிப்புள்ள, 125 டன் உணவுப் பொருள்கள் மற்றும் ரூ.4.5 லட்சம் மதிப்புள்ள மருந்து ஆகியவை கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. DG JKN பழனி (D 3231), முன்னாள் மாவட்ட PDGs ரஜனி முகர்ஜி (D 3291), சம்பத்குமார் (D 3231) அவரது துணைவியார் Dr சாய்பிரசன்னா, DGND NS சரவணன் (3232) ஆகியோரும் தங்கள் மாவட்டங்களிலிருந்து உதவினர்.

நாங்கள் பணிபுரிந்த வேகத்தைக் கண்டு இலங்கை தூதரக துணை கமிஷனர் வியந்துபோனார். சென்னையில் உள்ள தூதரக அலுவலகத்தில் மீண்டும் சந்திக்க வருமாறு எங்களிடம் கேட்டுக் கொண்டார். நாங்கள் மீண்டும் தொடர்பு கொண்ட போது 10,000 கரி அடுப்புகள் தேவை என்று கோரிக்கை விடுத்தார்.

PDG சம்பத்குமார் மற்றும் அவரது துணைவியார் பிரசன்னா இருவரும் ராஜ்கோட்டில் உள்ள விற்பனையாளரை உடனடியாகத் தொடர்பு கொண்டனர். இது ஒரு சோதனையான காலகட்டம். உக்ரைனாக இருந்தாலும் சரி, இலங்கையாக இருந்தாலும் சரி உலகம் ரோட்டரியின் உதவியை எதிர்பார்த்து இருக்கிறது. எனவே நாங்கள் எங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய தயாராக இருக்கிறோம் என்றார் ஒளிவண்ணன்.■

# ரோட்டரியில் பெண்களின் திறமைக்கு எல்லையே இல்லை!

ரஷீதா பகத்

TRF அறங்காவலர் கீதா மானெக், ஆப்பிரிக்காவில் RI மாவட்டம் 9212-ன் ஆளுநராகப் பணியாற்றியவர். இந்தியாவில் ரோட்டரியின் மெகா சேவைத் திட்டங்கள், குறிப்பாக TEACH திட்டம் குறித்து பேசும்போது அவரது கண்களில் மகிழ்ச்சியின் வெளிப்பாடு தெரிந்தது. ஹைதராபாத் மாநாட்டுக்கு வந்திருந்த அவர், ரோட்டரி நியூஸ் இதழுக்கு அளித்த பேட்டியில், ரோட்டரி உலகமே இந்திய ரோட்டேரியன்களை உற்று நோக்கி வருவதாகவும், உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் சேவைத் திட்டங்கள் செயல்பாடுகளில் இந்தியாவை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்ற ஆப்பிரிக்கா முயற்சிப்பதாகவும் கூறினார்.

**அவரது பேட்டியின் சுருக்கம் இதோ:**

**உங்களின் ரோட்டரி பயணத்தை எப்படி ஆரம்பித்தீர்கள்?**

புதிய சங்கத்தை நிறுவுவதற்கான குழுவில் எனது கணவர் இடம் பெற்றிருந்தார். ஒவ்வொரு திங்கள்கிழமை மாலையும் நடைபெறும் கூட்டத்துக்கு தவறாமல் சென்று வருவார்.

அது 1996ம் ஆண்டு. ஒரு நாள் அவரிடம், நான் உங்களுடன் வரலாமா என்று கேட்டேன். அதற்கு அவர், இன்று வேண்டாம், விரைவில் நாங்கள் பெண்கள் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யவிருக்கிறோம். அப்போது நீ எங்களுடன் சேர்ந்து கொள்ளலாம் என்றார். நானும் சரி என்று விட்டுவிட்டேன். ஒரு நாள், சங்கத்தின் நிறுவனத் தலைவர் எனக்கு அழைப்பு விடுத்தார். நானும் அவரது அழைப்பை ஏற்று சங்கத்தில் சேர்ந்தேன்.

**கென்யாவில் உங்கள் பின்னணி பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.**

நான் கென்யாவில் ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். எனது முப்பாட்டனார் முதலில் அங்கு சென்றனர். இந்தியாவைப் போலவே எங்கள் கிராமங்களிலும் போதிய வசதிகள் இல்லை. கிராமத்து



*TRF அறங்காவலர் கீதா மானெக், RID 9212, ஆப்பிரிக்கா.*

ரஷீதா பகத்

பள்ளியில் ஒரு பெரிய அறை இருக்கும். எல்லா குழந்தைகளும் அங்கு தரையில் விரிக்கப்பட்ட பாயில் அமர்ந்துதான் கல்வி கற்போம். ஒரு பள்ளிக்கு ஒரு ஆசிரியர் மட்டுமே இருப்பார்.

மூன்று வருடங்கள் அங்குதான் படித்தேன். அதன் பிறகு என் தந்தை என்னை நகரத்தில் உள்ள ஒரு உறைவிடப் பள்ளியில் சேர்த்தார். அங்கு நான் ஆங்கிலம் கற்றேன். அதன் பிறகு இங்கிலாந்து சென்று உயர்நிலை பள்ளி படிப்பையும், வர்த்தக நிர்வாகத்துறையில் பட்டப் படிப்பையும் முடித்தேன்.



**உங்களின் குடும்பத்தொழில் என்ன?**

எனது தந்தை கிராமத்தில் வியாபாரியாக இருந்தார். இப்போது நானும் எனது கணவரும் “ரியல் எஸ்டேட்”, “விருந்தோம்பல்”, “காப்பீடு” முதலிய தொழில் செய்து வருகிறோம். நான் ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் இயக்குநராக செயல்பட்டு வருகிறேன்.

**உங்கள் கிராமத்துக்கு சேவை செய்வதன் மூலம் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் என்ன மாற்றங்களைக் கொண்டு வந்தீர்கள்?**

எங்கள் கிராமம் மலைப்பகுதியில் அமைந்துள்ளது. அங்கு இயற்கையான நீர்வீழ்ச்சிகளும் உண்டு. ஆனால், கிராம மக்களின் வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் இருந்தது. நாங்கள் குடிநீர் குழாய் மூலம் குடிநீர் கிடைப்பதையும், வேலை வாய்ப்பு கிடைப்பதையும் உறுதி செய்தோம். எங்கள் கிராமத்தில் தொழில் பயிற்சி திட்டத்தையும் செயல்படுத்தினோம். தரையில் அமர்ந்து படிக்கும் குழந்தைகளுக்கு வசதி யாக மேஜைகள் வழங்கினோம். ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்காக புத்தகங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தோம். நாங்கள் கிராமத்தை விட்டு வெளியேறி 40 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும், இன்றும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து தருகிறோம்.

**இந்தியாவில் ரோட்டரி பற்றிய உங்கள் கருத்து என்ன? இங்குள்ள ரோட்டேரியன்களுடன் முதலில் தொடர்பு ஏற்பட்டது எப்போது?**

இந்தியாவில் உள்ள ரோட்டேரியன்கள் சிறப்பானவர்கள். அர்ப்பணிப்பு உணர்வு உள்ளவர்கள். எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதில் முழு ஈடுபாட்டுடன், உறுதிப்பாட்டுடன் செய்கிறார்கள். ஏதாவது ஒன்று வேண்டுமானால், அதை இலக்காக வைத்து, அதற்காக வேலை செய்து அதைப் பெற்றுவிடுகிறார்கள். இந்தியாவில் ரோட்டரி வேகமாக வளர்ந்து வருகிறது. பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் பல பகுதிகளில் நல்ல குடிநீர் கிடைப்பது பெரிய சவாலாக இருந்தது. ஆனால், இன்று ரோட்டேரியன்கள் இந்தியாவின் பல பகுதிகளில் குடிநீர் கிடைப்பதை உறுதி செய்துள்ளனர். இந்தியாவில் ரோட்டரியின் TEACH திட்டம் மக்களைக் கவரும் வகையில் உள்ளது. ஒரு காலத்தில் இந்தியா, பல்வேறு உதவிகளைப் பெறும் நாடாக இருந்தது. ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக உள்ளது. ஆப்பிரிக்காவிலும், அமெரிக்காவிலும் குறிப்பாக US-மெக்ஸிகோ எல்லைப் பகுதியில் பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்தி வருகின்றனர். இந்திய ரோட்டேரியன்கள் ரோட்டரியை உயரத்துக்கு கொண்டு சென்றுள் ளனர். உறுப்பினர் சேர்க்கை யாகட்டும், அறக் கட்டளைக்கு நிதி கொடுப் பதாகட்டும், மானிய உதவி மூலம், கூட்டாண்மையுடன் மெகா திட்டங்களை செயல்படுத்துவதிலும் உயர்ந்து நிற்கிறார்கள். இந்தியாவைப் போலவே மற்ற ரோட்டரி உலகமும் செயல்பட விரும்புகிறது. நீங்கள் உருவாக்கிய தொடர்புகள், கூட்டாண்மை, டாடா போன்ற பெரிய கார்ப்பொரேட் நிறுவனங்கள், இந்திய அரசு ஆகியவற்றுடன் உங்களுக்கு உள்ள நெருக்கமான உறவுகள் வெளிநாட்டவர் என்ற முறையில் என்னை மலைக்கவைக்கின்றன.

**தலைவர் சேகர் மேத்தா மற்றும் TEACH திட்டத்துடன் முதலில் தொடர்பு ஏற்பட்டது எப்படி?**

எனது கணவர் ரோட்டரி மாவட்ட ஆளுநராகப் பயிற்சி பெற்றபோது சேகர் மேத்தா இயக்குநராக இருந்தார். அதன் பிறகு அவருடன் பல ஆண்டுகள் தொடர்பு நீடித்தது. அவர்கள் இருவரும் இந்த ஆண்டு ஆப்பிரிக்கா வந்து எங்களுடன் நேரம் செலவிட்டார்கள். ஆப்பிரிக்காவின் உண்மையான வலிமையை அவர் அறிந்திருப்பதால் அவரது இதயத்தில் ஆப்பிரிக்காவுக்கு தனி இடம் உண்டு.

**ரோட்டரியின் அடுத்த வளர்ச்சிப் பகுதி ஆப்பிரிக்கா என்று மேத்தா நம்புகிறாரா?**

நிச்சயமாக ரோட்டரி வளர்ச்சிப் பாதையில் அடுத்து முன்நிற்பது ஆப்பரிக்காவத்தான் இருக்கும். போலியோ ஒழிப்பு நடைமுறைகளை நாங்கள் இந்தியாவிடமிருந்து கற்றுக்கொண்டுள்ளோம். கோவிட் தொற்றின் கடுமையான கால கட்டத்தில் நாங்கள் போலியோ ஒழிப்பு சாதனையை நிகழ்த்தியுள்ளோம். ரோட்டரி இன்டர்நேஷனல், ஆப்பிரிக்காவில் உள்ள மெக்கிரேரே பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஒரு அமைதித் திட்டத்தை உருவாக்கி யுள்ளது. அடுத்து வட ஆப்பிக்கா அல்லது மத்திய கிழக்கில் மற்றொரு திட்டம் செயல்படுத்தப்படும்.

**ரஷியா-உக்ரைன் மோதலை அடுத்து அமைதி மையத்துக்கு அதிக தேவை உள்ளதாக கருதுகிறீர்களா?**

ஆமாம். அமைதி என்பது வறுமையுடன் தொடர்புடையது. பெரும்பாலான மோதல்களுக்கு காரணம் போதிய வளம் இல்லாததுதான்.

**ஆப்பிரிக்க நாடுகளிலும் வன்முறைகளும் மோதல்களும் அதிகரித்து வருகின்றனவே?**

ஆம். அதற்கு காரணம் நாங்கள் ஏழைகள். எங்களிடம் வளங்கள் ஏதும் இல்லை. யாராவது இரண்டு பசுக்களை வைத்திருந்தால், அதில் ஒன்றை எடுத்துக் கொள்ள விரும்புகிறார்கள். இதற்கு காரணம் உயிர்வாழ்வதற்காக. மற்றபடி எங்கள் மக்கள் கெட்டவர்களோ அல்லது பேராசை பிடித்தவர்களோ அல்ல. நம்மிடம் இல்லாததைப் பெற வேண்டும் என்ற எண்ணம்தான் இதற்கு காரணம். ஆனால், ஆப்பிரிக்காவில் ரோட்டரி இப்போது அவர்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த முயன்று வருகிறது.

**ஆப்பிரிக்காவில் ரோட்டரி உறுப்பினர் கள் எத்தனைப் பேர் உள்ளனர்?**

ஆப்பிரிக்காவில் 10 லட்சம் பேர் வாழ்ந்து வந்தாலும் ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கை 42,000 தான். இது போதாது. உதாரணமாக இந்தியாவில் மக்கள்தொகை அதிகம். ஆனால், உங்களிடம் குறைந்தது 1,60,000 ரோட்டேரியன்கள் உள்ளனர்.

**அப்படியானால், நீங்களும் அந்த எண்ணிக்கையை பெற விரும்புகிறீர்களா? ஆப்பிரிக்காவில் உறுப்பினர் சேர்க்கையை அதிகரிப் பதற்கான நடவடிக்கை என்ன?**

ரோட்டரிக்குள் மக்களை ஈர்ப் பதற்கான அனைத்து நடவடிக்கை களையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இதற்காக சமூகத்தில் பலதரப்பட்ட மக்களை சந்தித்தும், ரோட்டரி சங்கம் இல்லாத இடங்களை தொகுத்து அங்கெல்லாம் ரோட்டரி சங்கங்கள் நிறுவுவதற்கான முயற்சி களையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். ரோட்டரியை வளர்க்க வேண்டும் என்ற நோக்கம் எங்களிடம் உள்ளது.

**TRF அறங்காவலர் பதவியை அடைவதில் உங்கள் பயணம் கடினமாக இருந்ததா? இந்த பதவிக்கு வரும் முதல் பெண் நீங்கள்தானா?**

இந்த பதவிக்கு வரும் முதல் பெண் அல்ல நான். ஏற்கெனவே இந்தப் பதவியில் பெண்கள் இருந்திருக்கிறார்கள்.

**ஆப்பிரிக்காவைச் சேர்ந்த முதல் பெண் என்று சொல்லலாமா?**

ஆம்.. ஆப்பிரிக்காவைச் சேர்ந்த முதல் பெண். அதுவும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவள் என்று புன்னகையுடன் தெரிவித்தார்.

**அப்படியானால், கடினமான பயணமா?**

உண்மையைச் சொன்னால் அப்படியல்ல. நான் கடினமாக உழைத்தேன், எனது பணியை நேசித்தேன். எனவே எனது பயணம் கடினமானதாகத் தெரியவில்லை. நான் மாவட்டத்தில் சங்கங்கள் நடத்தும் அனைத்து துறை கூட்டங்களிலும் பங்கேற்றுள்ளேன். என்னை குழுவில் சேர்ந்துகொள்ளுமாறு அழைத்தார்கள். என்னிடம் திறமை இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டிருக்கலாம். நான் எப்படி அடையாளம் காணப்பட்டேன் என்பது தெரியவில்லை. ஆனால், ரோட்டரியில் சுறுசுறுப்புடன் எனது பணிகளைச் செய்வேன். மற்றொரு விஷயம் என்னவென்றால், என்னிடம் உதவி கேட்டு யாராவது வந்தால் அவர்களிடம் முடியாது என்று சொன்னதில்லை.

**ரோட்டரியில் உள்ள பெண்களின் எதிர்காலம் குறித்து உங்கள் கருத்து என்ன?**

ரோட்டரியில் பெண்களுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. பன்முகத்



ரஷீதா பகத்

தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கம் ஆகியவை எங்கள் கவனத்தின் முக்கியப் பகுதியாகும். இதில் அனைவரும் சேர்க்கப்படு வதை உறுதி செய்கிறோம். பொதுவாக பெண்கள் வீட்டை கவனிப்பவர்களாகவும், வீட்டில் உள்ளவர்களை பராமரிப்பவர்களாக மட்டுமே கருதப்படுகின்றனர். இப்போதெல்லாம் பெண்கள் கார்ப்பொரேட் நிறுவனங்களில் பணியாற்றி உலகில் பல இடங் களுக்குச் செல்கிறார்கள். விரைவில் ரோட்டரியின் தலைவராக ஜெனிஃபர் ஜோன்ஸ் என்ற பெண்மணி பதவி யேற்க உள்ளார். பெண்களின் திறமைக்கு எல்லையே இல்லை. உயர்பதவியில் வருவதற்கு தகுதியும், கடின உழைப்பும், வெற்றிகளைக் குவிக்கும் செயல்பாடுகளும் இருந்தால் போதுமானது.

**நீங்கள் உயர் பதவிக்கு ஆசைப் படுகிறீர்களா?**

ரோட்டரி தலைவராக வரவேண்டு மானால், அதற்கு முன் ரோட்டரி இயக்குநராக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்தலில் போட்டியிடுவதில் எனக்கு விருப்பம் இல்லை. ஏனெனில் சிலர் எப்போதும் வெற்றி பெறுவார்கள், சிலர் எப்போதும் தோல்வி அடைவார்கள்.

**அப்படியானால், நீங்கள் தேர்தலில் போட்டியிட்டதே இல்லையா? மாவட்ட ஆளுநர் பதவிக்குக்கூட நீங்கள் போட்டியிடவில்லையா?**

இல்லை. ஒருமித்த முடிவின்படி நான் மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். நான் தேர்தலில் போட்டி யிட்டதில்லை.

**ரோட்டரியில் நீங்கள் விரும்புவது என்ன?**

ஒவ்வொரு நாளும் நான் மனநிறைவுடன் படுக்கைக்குச் செல்கிறேன். ஏனெனில் நான் ஒருவரின் வாழ்க்கையைத் தொட்டு விட்டேன் என்பது எனக்குத் தெரியும். குறைந்தபட்சம் ஒருவரின் முகத்தில் புன்னகையை வரவழைக்க வேண்டும் அல்லது முதியவர் ஒருவர் படியிறங்குவதற்கு கை கொடுக்க வேண்டும். ரோட்டரியின் மந்திரமும், மாயாஜாலமும் அதுதான்!

**ரோட்டரியின் எதிர்காலத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்? நீண்ட காலமாக உறுப்பினர்கள் எண்ணிக்கை நிலையாக உள்ளது. இதில் மாற்றத்தை ரோட்டரி உருவாக்குமா?**

ஒருவேளை மாற்றத்தில் வேகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், மாற்றம் நிச்சயம் வரும். உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதில் ரோட்டரி அதிக கவனம் செலுத்தி வருகிறது. உலகில் வன்முறைகளும், மோதல்களும் நீடித்து வரும் நிலையில், போதிய வளங்கள் இல்லாத நிலையில் ரோட்டரி போன்ற அமைப்புகளுக்கு முக்கியத்துவம் இருக்கத்தான் செய்கிறது. காந்திஜி கூறியது போல், உலகில் அனைவரின் தேவையையும் நம்மால் பூர்த்தி செய்யமுடியும்.ஆசைகள் இருக்கலாம். பேராசைகள் கூடாது. பேராசையை ஒழித்துவிட்டால் உலகில் அனைவரும் சமமான வாழ்க்கையை வாழ முடியும்!

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

---

Rotary PEOPLE OF ACTION

# தில்லி நகராட்சிப் பள்ளிகளுக்கு ரோட்டரியின் பரிசு

ரோட்டரி செய்திக் குழு



DG *அஷோக் கன்டூர் ஒரு மாணவிக்கு தொடுகணினி வழங்குகிறார்.*

RC தில்லு லுட்யென்ஸ், RID 3011, தில்லியில் ஐந்து நகராட்சிப் பள்ளிகளின் உள் கட்டுமானத்தை ரூ.9 லட்சம் செலவில் மேம் படுத்தியது. இந்தச் சங்கம் பள்ளிகளுக்கு 5 நீர் குளிர் விப்பான்கள், 100 மேசைகளை வழங்கிப் புதிய ரோட்டரி ஆண்டைத் தொடங்கியது. 400 மாணவர்களுக்கு மதிய உணவுப் பெட்டிகள் வழங்கப்பட்டன. மாநகராட்சித் துணை ஆணையர் டானிஷ் அஷ்ரா, தில்லி துணைநிலை ஆளுநர் V K சக்சேனா முன்னிலையில் DG அஷோக் கன்டூர் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார், 27 நலிந்த மாணவர்களுக்குத் தொடுகணினிகளை வழங்கினார்.■

# புணேவில் 'லஷ்யா' நிகழ்ச்சியில் சில தருணங்கள்



*பல்லக்கில் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்.*



*லஷ்யா கன்வீனர் RI இயக்குனர் A S வெங்கடேஷ், துணை தலைவர் PDG ISAK நாசர், RI தலைவர் ஜோன்ஸ், துணை கன்வீனர் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் தலைவர் ஆஷிஷ் அஜ்மேரா.*



**இடமிருந்து:** DGs *அஷோக் கண்டுர்* (3011), *ஜினேந்திர ஜெயின்* (3040), *மற்றும்* Dr *லலித் கன்னா* (3012).





RID வெங்கடேஷ் மற்றும் வினிதா RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் அவர் கணவர் DGN Dr நிக் க்ரயசிச் அவர்களை வரவேற்கின்றனர்.

**மேலே:** RI இயக்குனர் வெங்கடேஷ் மற்றும் வினிதா, RI தலைவர் சேகர் மேத்தாவை வரவேற்கின்றனர்.

**கீழே:** PDG ISAK நாசர் மற்றும் அறங்காவலர் பரத் பாண்ட்யா.





மராத்திய கலாச்சார முறையில் திருமணம்.





RIDE அனிருதா ராய் சௌத்ரி (இடமிருந்து 2வது) அவர்களை வரவேற்கும் PDG அஜ்மேரா. உடன் RID கோட்பாகி, RIDE T N சுப்ரமணியன் மற்றும் RID வெங்கடேஷ்.



RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் DGN க்ரயசிச் ஆகியோரின் மராத்திய கலாச்சார திருமணத்தில் வினிதா, அமிதா, ராஷ்மி குல்கர்னி மற்றும் Dr ஹேமா (DG அனில் பர்மாரின் மனைவி).



RID கோட்பாகி, PRIP மேத்தா, PDG அஜ்மேரா, RID வெங்கடேஷ் மற்றும் TRF அறங்காவலர் பாண்ட்யா.





**மேலே:** RI *தலைவர் ஜோன்ஸ் அவர்களுடன் அமிதா, கோட்பாகி, வினிதா மற்றும்* RID *வெங்கடேஷ்.*

**வலதில் (இடமிருந்து):** *ஹேமா பார்மர், அமிதா,* RI *தலைவர் ஜோன்ஸ் மற்றும் பீனா தேசாய்.*

**கீழே (இடமிருந்து):** DGEs *ஸ்வாதி ஹெர்கல்* (3132), *ஆனந்த ஜோதி* (3000), *ஆஷா வேணுகோபால்* (3030), *ரீட்டு க்ரோவர்* (3040), *மஞ்சு ஃபாட்கே* (3131), B C *கீதா* (3182) *மற்றும் ஜெயஸ்ரீ மோஹண்டி* (3262).








RID *வெங்கடேஷுடன்* PRID *கமல் சங்வி மற்றும்* PDG *நாசர்.*

*புகைப்படங்கள்: ரஷீதா பகத்*
*வடிவமைப்பு: கிருஷ்ணப்ரதீஷ்* S

# ரோட்டரியின் WinS வசதியைப் பெற்ற குருகுலம்

**ஜெய்ஸ்ரீ**

ஒரு பெண் குழந்தைக்கு கல்வி கற்பிப்பது ஒரு முழு கிராமத்திற்கும் கல்வி கற்பிப்பதாகும். இந்த தொலைதூர குக்கிராமத்தில் பெண்களின் கல்வியை ஆதரிப்பதன் மூலம் நீங்கள் ஒரு சிறந்த சேவையைச் செய்கிறீர்கள், என்று RI இயக்குனர் A S வெங்கடேஷ், ஏப்ரல் மாதம் ஒரு பள்ளியில் தண்ணீர் தொட்டி மற்றும் கழிப்பறைத் தொகுதிகளைத் திறந்து வைத்து RC சம்பல்பூர் சென்ட்ரல், RID 3261 உறுப்பினர்களிடம் கூறினார். குறுகிய கால இலக்குகளை அமைக்கவும், அவை அடைய எளிதாக இருக்கும், மேலும் பெரிய சமூகங்களுக்கு பயனளிக்கும் அதிக அர்த்தமுள்ள திட்டங்களை நீங்கள் செயல்படுத்தலாம். திட்டங்களை வடிவமைக்கும் போது சமூகங்களின் தேவைகளில் கவனம் செலுத்துங்கள், என்று அவர் மேலும் கூறினார்.

ஒடிசாவின் சம்பல்பூரில் இருந்து 140 கிமீ தொலைவில் உள்ள நுவாபாலி கிராமத்தில் இருக்கும் நவபிரபாத் கன்யா குருகுலம் பெண்களுக்கான பள்ளி. அதில் சங்கம் 10 கழிப்பறைகள், குளியலறைகள், குழு கை கழுவும் நிலையங்கள் மற்றும் எரியூட்டி, சானிட்டரி பேட் டிஸ்பென்சர் மற்றும் படுக்கை கொண்ட ஒரு பிரத்யேக MHM அறை, பள்ளி மற்றும் கிராமத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 100,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி ஆகியவற்றைக் கட்டியுள்ளது. இப்பகுதியில் மின் இணைப்பு மோசமாக உள்ளதால், பள்ளி வளாகத்தில் சோலார் பேனல் அமைக்கப்பட்டுள்ளது. RC கீல்-எய்டர், RID 1890, ஜெர்மனி, இந்த திட்டத்தின் சர்வதேச பங்குதாரர்.

இந்த கிராமமும் அதன் சுற்றுப்புற




*RID A S வெங்கடேஷ் தண்ணீர் தொட்டியை துவக்கி வைக்கிறார். உடன் திட்டத்தலைவர் ப்ரதீப் லாத், IPDG சுனில் ஃபாதக், PDGs தீபக் மேத்தா மற்றும் சஷி வர்வந்த்கர், Rtn சுபோத் டோலி, RC சாம்பல்புர் மில்லேனியம் தலைவர் ரஞ்சித் சிங் ஹூரா மற்றும் RC கீல்–எய்டர் தலைவர் டெர்க் ஏக்ஸல் கோச் ஆகியோரும் உள்ளனர்.*



RID A S *வெங்கடேஷ், IPDG ஃபாதக், குருகுலம் தலைவர் பகவான் தேவ் ஆச்சார்யா,* DGN *அகில் மிஷ்ரா (இடமிருந்து 2வது), ஹர்ஜித் சிங் ஹூரா (இடமிருந்து 5வது) மற்றும் ஜெர்மன் ரோட்டேரியன்கள், மாணவிகளுடன் பள்ளி வளாகத்தில்.*

பகுதியும் ஒரு காலத்தில் நக்சல்களால் பாதிக்கப்பட்டிருந்தது. இப்பகுதியில் இன்னும் உள்கட்டமைப்பு மற்றும் வீடுகளில் கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் இல்லை. கிராமவாசிகள் இப்போது பள்ளியில் உள்ள கழிப்பறை வசதிகளை அணுகலாம் என்று சங்கத்தின் திட்ட தொடர்பாளர் பிரதீப் லாத் கூறுகிறார்.

105 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த குருகுலம் பகபந்தேவ் ஆச்சார்யா தலைமையில் ஒரு அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படுகிறது, அவர் 2000ம் ஆண்டில் ஆண்களுக்கான தங்கி பயிலும் பள்ளியை நிறுவினார். 12 ஆண்டுகளுக்குப் பிறகு பெண் மாணவர்கள் வீட்டில் இருந்து வந்து பயில அனுமதிக்கப்பட்டனர். மாணவர்களின் கல்வி நன்கொடையாளர்களின் பங்களிப்பு மூலம் நிதியளிக்கப்படுகிறது. ஆண்டுக்கு பதினைந்து மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். பள்ளி 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை சமஸ்கிருத மொழியை ஊடகமாக கொண்டு பாடம் கற்பிக்கிறது.

மீரட்டில் உள்ள ஆசிரமத்தின் தலைமையகத்தில் அவர் சந்தித்த ஜெர்மன் நண்பர்களின் உதவியுடன் 2018ல் பெண்கள் பள்ளி தொடங்கப்பட்டது. அவர்கள் பள்ளியின் மேல் ஆர்வமாக இருந்தனர் மற்றும் பல முறை எங்களை இங்கு சந்தித்துள்ளனர். RC சம்பல்பூரின் தலைவர் ரஞ்சித் சிங் ஹூராவை டெல்லியில் ஒரு விமான பயணத்தில் சந்தித்த போது ரோட்டரி உடனான அவரது தொடர்பு தொடங்கியது. பெண்கள் பள்ளியின் கட்டுமானம் மற்றும் ஜெர்மன் தொடர்பு பற்றி நான் அவரிடம் கூறினேன், உள்கட்டமைப்புக்கு எங்களுக்கு உதவுவதாக அவர் உறுதியளித்தார். ஹூரா யோசனை முன்வைத்த போது RC சம்பல்பூர் சென்ட்ரல் அதன் ஆதரவை வழங்கியது.

இங்கு தற்போது 100 ஆண்களும் 30 பெண்களும் கல்வி பயின்று வருகின்றனர். “மேம்படுத்தப்பட்ட வசதிகளால், இந்த ஆண்டு அதிக பெண்களை சேர்வார்கள்,” என்று அவர் கூறுகிறார்.

DRFC தீபக் மேத்தா, PDG ஷம்பு ஜகத்ராம்பிகா மற்றும் அப்போதைய DG FC மொஹந்தி ஆகியோருக்கு இந்த திட்டத்தை முடித்ததற்கு கடமைப்பட்டிருப்பதாக லாத் கூறுகிறார். நாங்கள் 2020ல் GGக்கு விண்ணப்பித்திருந்தோம், ஆனால் ‘பயிற்சி’ பகுதி இல்லாததால் எங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. பின்னர் கோவிட் இரண்டாவது அலை ஏற்பட்டது, அதனால் மருத்துவ உதவிக்கு மானியங்களில் முன்னுரிமை அளிக்கப்பட்டன, என்று அவர் கூறுகிறார். இந்த மானியம் இறுதியில் மே 2021ல் அனுமதிக்கப்பட்டது. கடந்த 15 ஆண்டுகளில் இது எங்களின் முதல் உலகளாவிய மானியம் என்பதால் நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்தோம், என்று புன்னகைக்கிறார் மேத்தா.

திட்டத்தின் மொத்த செலவு $81,000 இதில் ஜெர்மன் சங்கம் $41,000 பங்களித்தது மற்றும் RID 1890 அதன் DDFலிருந்து $21,000 நன்கொடையாக வழங்கியது.

“எங்கள் சங்கம் ஆரம்பத்தில் இருந்தே இந்த திட்டத்தை ஆதரிப்பதில் ஆர்வமாக இருந்தது” என்று RC கீல்-எய்டர் இன் தலைவர் டிர்க் ஆக்செல் கோச் கூறினார். அவர், தனது சங்கத்தின் மூன்று உறுப்பினர்களுடன், நுவாபாலியில் நடந்த தொடக்க விழாவில் பங்கேற்றார். குழந்தைகள் வேத மரபுகளை உள்வாங்குவதைப் பார்ப்பது மகிழ்ச்சி அளிக்கிறது, என்று புன்னகைக்கிறார் கோச்.

“ரோட்டரி இந்தியாவுடன் இணைந்து இந்த திட்டத்தில் பண்ணியாற்றியதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், இப்போது அதன் பலனை எங்களால் காணமுடிகிறது. பெண்களே, இது உங்களுக்காக, வெளி உலகத்திற்குச் செல்லுங்கள், அந்த உலகை சிறப்பாக மாற்றுங்கள் என்று ஜெர்மன் சங்கத்தின் உறுப்பினரான பெட்டினா ஃபிராங்க், தொடக்க விழாவில் கலந்து கொண்ட பெண்களிடம் கூறினார்.■

# ரோபோடிக்ஸ் கற்கும் அரசுப் பள்ளி மாணவர்கள்

**கிரண் ஜெஹரா**

புணே அருகில் உள்ள லோனிகந்த்-இல் உள்ள ஜில்லா பரிஷத் தொடக்கப் பள்ளி அரங்கத்துக்குள் சிறிய இயந்திர மனிதர்கள் தடைகளைத் தாண்டி நடக்கிறார்கள், சிறு சரிவுப் பாதைகளில் ஏறி இறங்குகிறார்கள், பந்துகளைச் சிறு வளையங்களுக்குள் வீசுகிறார்கள். இந்தச் செய்முறை விளக்கங்கள் இங்கு நடைபெறும் இயந்திர மனிதவியல் (ரோபோடிக்ஸ்) பயிற்சி வகுப்புக்கானவை. இங்கு உள்ள மாணவர்கள் நிரலாக்கம் (coding), IoT, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் STEAM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணக்கு) ஆகியவற்றைக் கற்று, குறிப்பிட்ட செயல்களைச் செய்யக்கூடிய இயந்திர மனிதர்களை (ரோபோக்களை) உருவாக்குவார்கள். அதற்கு RC புணே சின்ஹாகத் ரோடு, RID 3131ன் முயற்சிகளுக்கு நன்றி என்கிறார் திட்ட ஒருங்கிணைப்பாளர் தீபக் மகாஜன்.

இந்த மாணவர்களால் “ஆண்டுக்கு இரண்டு சீருடைகளைக் கூட வாங்க இயலாது. இவர்களில் சிலருடைய வீட்டில் மின்சாரம் கூட இல்லை. ஆனால், புதிய விஷயங்களைக் கற்கும் கனவுகளும் உறுதியும் இவர்களிடம் உள்ளன’’ என்று சுட்டிக்காண்பிக்கிறார் இவர்.

ரோபோடிக்ஸ் மற்றும் STEAM கல்வியை நகர்ப்புற, பழங்குடியின மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளுக்குக் கொண்டு வரும் லாப நோக்கில்லாத அமைப்பாகிய ரோபோடெக்ஸ் இந்தியா-வுடன் சேர்ந்து இந்தச் சங்கம் இந்தப் பள்ளியில் ஒரு ரோபோடிக்ஸ் STEAM ஆய்வகத்தைத் தொடங்கியுள்ளது. புணே-யில் உள்ள ZA அசோசியேட்ஸ் என்ற மேலாண்மை ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்துடனான ஒரு CSR கூட்டுப் பணி இந்தத் திட்டத்துக்குத் தேவைப்பட்ட ரூ.25 லட்சத்தைப் பெற உதவியது. இந்தத்

*லோனிக்கந்த் பள்ளி மாணவிகள் ரோபோ உருவாக்கக் கற்கின்றனர்.*






*ZS அசோசியேட்ஸ் அனயா பாட்டில், ரோபோடெக்ஸ் இந்தியா இயக்குனர் பாயல் ராஜ்பால், பூனே ஜில்லா பரிஷத் CEO அயுஷ் ப்ரசாத் மற்றும் Rtn தீபக் மகாஜன் பள்ளி மாணவியருடன்.*

திட்டம் 1,500 மாணவர்களுக்குப் பயன் தரும்.

இந்த மாணவர்கள் மாவட்ட மற்றும் மாநில அளவு ரோபோடிக்ஸ் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பையும் பெறுவார்கள். "இவர்களில் சிலர் ரோபோடெக்ஸ் பன்னாட்டு உலக ஒலிம்பியாடில் நம் நாட்டின் பிரதிநிதிகளாகப் பங்கேற்கவும் வாய்ப்பு உள்ளது" என்கிறார் மகாஜன்.

இந்த முன்னெடுப்பின்கீழ் மாணவர்களுக்கு LMS (திட்ட அடிப் படையிலான கலவைகள், எடுத்துக் காட்டாக, ரோபோவை இயக்கும் மென்பொருள், அறிவியல் கருவிகள் மற்றும் கணக்கிடுவான்கள்), பயிற்சிப் புத்தகங்கள், பணித் தாள்கள், காணொளி உள்ளடக்கம், ரோபோடிக் மாதிரிகளைச் செய்முறை விளக்கமாகக் காண்பிக்கும் நேரலை மற்றும் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி கள், இயல்நிலைக் கணக்கிடல் அடிப்படையிலான வன்பொருள் ஆகியவை வழங்கப்படுகின்றன, அதன்பிறகு, மதிப்பீடுகள் நடத்தப்படுகின்றன. ரோபோடெக்ஸ் இந்தியா இயக்குநர் பாயல் ராஜ்பால் RC புணே சென்ட்ரல் உறுப்பினர் ஆவார்.

முன்பு தனியார் பள்ளிகளில் மட்டும் செயல்பட்டுக்கொண்டிருந்த ரோபோடெக்ஸ் தன்னுடைய திட்டத்தை நலிந்த பின்னணி கொண்ட மாணவர்களுக்கும் விரிவுபடுத்தியதை நினைவுகூர்ந்த பாயல், 2018ல் அகமதாபாதில் ஒரு ரோபோடிக்ஸ் நிகழ்ச்சியில் "கிராமப்புற மாணவர் ஒருவர் என்னிடம் வந்து, தன்னுடைய தந்தைக்கு வயலில் உழுவதற்கு உதவக்கூடிய ஒரு ரோபோவைத் தான் ஆங்கிலத்துக்குப் பதில் குஜராத்தியில் பேசி விளக்கலாமா என்று கேட்டார்." அவருடைய தன்னம்பிக்கையைக் கண்டு வியந்த பாயல், அவருக்கு இந்த ரோபோ எப்படிக் கிடைத்தது, அதற்கு யார் நிரல் எழுதினார்கள் என்று கேட்டார். இந்தப் பையனின் தாய் ஒரு வீட்டில் வேலைக்காரராகப் பணிபுரிந்திருக்கிறார், அந்தக் குடும்பம் தான் இந்தப் ரோபோவை இந்தப் பையனுக்குக் கொடுத் திருக்கிறது. தன் தாய் வேலை பார்த்த வீட்டில் இருந்த WiFiஐ இணைப்பின் உதவியுடன் அந்தச் சிறுவன் ரோபோவுக்கு நிரல் எழுதக் கற்றிருக்கிறான், வயலில் உழும் ரோபோவை உருவாக்கி யிருக்கிறான்.''அவனுடைய ரோபோவின் சாதனையைக் கண்டு நாங்கள் வியந்து நின்றோம். எங்களுடைய திட்டத்தைப் பயன்படுத்தி அதிசயங்களைச் சாத்தியமாக்கக்கூடிய மாணவர்களுடைய பிரதிநிதியாக அவன் தோன்றினான். அப்போது தான் எங்களுடைய கிராமப்புற இந்தியாவுக்கான ரோபோடெக்ஸ் பிறந்தது.''

இன்று, இந்தத் திட்டம் இந்தியா முழுவதும் 20,000க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது. பாயலின் சங்கம் புணே-யில் ஒரு ஜில்லா பரிஷத் பள்ளியில் ரோபோடெக்ஸ் இந்தியா திட்டத்தைத் தொடங்கி யுள்ளது. ரோட்டரியின் உதவியுடன் "நாம் இன்னும் பல குழந்தைகளுக்கு ரோபோடிக்ஸை அறிமுகப்படுத்தலாம். இது ஒரு நெடுநாள் ஊடாடலின் தொடக்கம், இதன்மூலம் இந்தியாமுழுவதும் குழந்தை களுடைய வாழ்க்கைகள் மேம்படும், வருங்கால வேலை வாய்ப்புகளுக்கு இது அவர்களைத் தயார்செய்யும்'' என்கிறார் இவர்.

புணே-யில் ரோபோடெக்ஸ் இந்தியா நடத்திய ஹாக்கத்தான் என்ற ஒரு நாள் நிகழ்ச்சியில் பல ஜில்லா பரிஷத் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைக் கையாள்வதற்கு ரோபோடிக்ஸ், நிரல் தீர்வுகளைச் சிந்தித்தார்கள். "கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் பாட்-கள், சூரிய ஒளியில் இயங்கும் வண்டிகளில் தொடங்கி மாணவர்கள் தங்களுடைய புதுமையான திட்டங்களால் எங்களை வியப்பில் ஆழ்த்தினார்கள் வரையறைகள், சூத்திரங்களை மனப்பாடம் செய்வதற்குப்பதிலாக, இந்தத் திட்டத்தின்மூலம் மாணவர்கள் நேரடிப் பணி அணுகுமுறையின் வழியாகக் கற்கிறார்கள், இதனால் அவர்கள் மையக் கருத்துகளை நன்கு புரிந்துகொள்கிறார்கள், என்றார் பாயல்.■

# ரோட்ராக்டர்களாக கரூரின் இளம் வர்த்தகர்கள், தொழிலதிபர்கள்

V முத்துகுமரன்

ரோட்டரியின் இளைஞர் இயக்கமான ரோட்ராக்ட் ஜூலை மாதத்திலிருந்து ரோட்டரி இன்டர்நேஷனலுக்கு நிலுவைத் தொகையை கட்ட வேண்டும். ஆனால், RID 3000 மாவட்டத்துக்கு உட்பட்ட RAC கரூர் சங்கம், வர்த்தகர்கள். தொழில் வல்லுனர்கள் அடங்கிய அதன் உறுப்பினர்கள் வழக்கமான கட்டணத்தை விட கூடுதலாக ரூ.1,000 செலுத்த முன்வந்துள்ளனர். அதாவது உறுப்பினர்கள் கட்டணமாக ரூ.3,000 செலுத்த விரும்புகின்றனர். இதன் மூலம் ரோட்டரி இன்டர்நேஷனலுக்கு தேவையான பணத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறது. இந்த ரோட்ராக்ட் சங்கத்தில் ஒருவர்கூட மாணவராகவோ அல்லது ஆசிரியராகவோ, மருத்துவராகவோ இல்லை. இதன் உறுப்பினர்கள் அனைவரும் தமிழகத்தின் ஜவுளி நகரம் என்று அழைக்கப்படும் கரூரை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் வர்த்தகர்கள். எங்களிடம் 36 உறுப்பினர்கள் உள்ளனர். நகை வியாபாரம், ஜவுளி வியாபாரம், நிதி நிறுவனம், கல்விப் பயிற்சி அளிப்பவர்கள், கட்டடக் கலைஞர்கள், பொறியாளர்கள் என பல்வேறு தொழில் செய்பவர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் வெற்றிகரமாகத் தொழில் செய்து வருகின்றனர். இரண்டாவது, மூன்றாவது தலைமுறையைச்சேர்ந்தவர்கள். குடும்பத் தொழிலை முன்னெடுத்துச் செல்பவர்கள் என்கிறார் RID 3000 மாவட்டம், RAC கரூரின் முன்னாள் தலைவர் R சபரீஷ்.

சமீபத்தில் இவர்கள் R4Blood என்னும் இரத்ததானம் அளிக்கும் செயலியை அறிமுகப்படுத்தி யுள்ளனர். பிளே ஸ்டோர் மூலம் இதை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த தளத்தில் நன்கொடையாளர்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் கரூரை சுற்றி அளிக்கப்படும் அவசரச் சேவை பிரிவுகள் பற்றிய தகவல்களை இதில் பட்டியலிட்டுள்ளனர். ரோட்ராக்டர் R ஜீவானந்தன் உருவாக்கியுள்ள இந்த செயலி இரத்தம் தேவைப்படும் நோயாளிகளுக்கு உதவிகரமாக இருக்கும். இந்த தளத்தை ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் சங்கங்கள் உதவியுடனும் தேசிய அளவில் அணுக முடியும் என்றும் அவர் விளக்கினார். இந்த செயலியை உருவாக்க உறுப்பினர்கள் ரூ.1.2 லட்சம் நிதி திரட்டியுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 8ம் தேதி ரோட்ராக்ட் வார விழாவின்போது “கருணா” திட்டம் தொடங்கப் பட்டது. இதன் மூலம் அரசுப் பள்ளியில் படிக்கும் ஏழை மாணவர்கள் மருத்துவம் படிப்பதற் கான நீட் தகுதித் தேர்வில் பங்கேற்பதற்கு இலவசமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. மருத்துவர்களாக விரும்பும் 200 மாணவர்களுக்கு கிராவிடன்ஸ் என்னும் தனியார் பயிற்சி மையம் மூலம் பயிற்சி அளிக்க கூட்டாண்மை ஏற்படுத் தியுள்ளோம்.

மாநிலம் முழுவதும் உள்ள இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் ஆண்டு முழுவதும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. 2020ம் ஆண்டு மாநில அளவில் கேரம் போட்டி நடத்தப்பட்டது. இதில் 250 பேர் பங்கேற்றனர். ஆடவர், மகளிர் மற்றும் இரட்டையர் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு மொத்தம் ரூ.50,000 மதிப்பிலான பரிசுகள் வழங்கப்பட்டன. கடந்த 2021ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற மாநில அளவிலான கால்பந்து போட்டியில் 46 அணிகள் பங்கேற்றன. வெற்றி பெற்றவர்




*திட்டத் தலைவர் க்ரிஸ் மார்ஷல், கரூர் ரோட்டராக்ட் சங்க தலைவர் N பரணீஷ் மற்றும் சங்கத்தின் முன்னாள் தலைவர் செல்வகுமார் க்ராவிட்டோன்ஸ் CEO பரமேஷ்வரியுடன்.*




*RID 3000 முன்னாள் A G சுந்தரராஜன் மருத்துவக்கல்லூரி மாணவன் N ஹரிஹரனிடம் ரூ.50,000 மதிப்புள்ள காசோலை வழங்குகிறார்.*

களுக்கு ரூ.70,000 மதிப்பிலான பரிசுகள் வழங்கப்பட்டன. கால்பந்து போட்டிகள் மூலம் ரூ.3.5 லட்சம் நிதி திரட்டப்பட்டது. மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு மாணவரான N ஹரிஹரன் என்பவருக்கு கல்லூரிக் கட்டணமாக ரூ.50,000 வழங்கப்பட்டது. இப்போது அந்த மாணவர் சேலம் அரசு மருத்துவமனையில் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார்.

### நிதிச் சிக்கல்கள் இல்லை

எங்கள் சங்கம் வர்த்தக சமூகத்தினரை உள்ளடக்கிய சங்கமாக இருப்பதால் நிகழ்ச்சிகளை நடத்த ஆதரவு திரட்டுவது எளிதாக உள்ளது என்று விளக்கமளித்தார் சபரீஷ். ஜூலை முதல் செயல்பாட்டுக்கு வரும் RI நிலுவைத்தொகை குறித்து கேள்வி எழுப்பியபோது, உறுப்பினர்கள் நிலுவைக் கட்டணம் ஒரு பிரச்னையே அல்ல. சில ரோட்ராக்டர்கள் RIக்கான நிதிப் பொறுப்பை ஏற்கும் வகையில் சங்கத்தின் கட்டணத்தைவிட அதிகமாகச் செலுத்த தயாராக இருக்கிறார்கள். வர்த்தகர்கள் உறுப்பினர்களாக இருப்பதால் எங்களால் நிதிவளங்களைச் சேர்க்க முடியும், திட்டச் செலவுகளுக்குத் தேவையான நிதியையும் திரட்ட முடியும் என்றார் அவர்.

### உயர் ரக திட்டங்கள்

2022–23ம் ஆண்டுக்கான புதிய சங்கத் தலைவராக கட்டடக் கலைஞர் N.பரணீஷ் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். வரைவு செய்யப்பட்ட சில திட்டங்களை பட்டியலிட்ட அவர், விவசாயக் கழிவுகளை புகையில்லாத கரிக்கட்டி எரிபொருளாக மாற்றுவதற்கு பயிற்சி பட்டறைகள் நடத்த திட்டமிடப்படுள்ளது. இது ஒரு நல்ல லாபகரமான தொழிலாகும். இதன் மூலம் கார்பன் தடயம் குறைக்கப்படும் என்று மக்களிடம் எடுத்துக்கூறி விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்படும் என்றார்.

அக்ரி ஸ்கூல் (Agri School) என்னும் திட்டத்தின் கீழ் ரோட்ராக்டர்கள் ஒரு குழுவாக பள்ளிகளுக்குச் சென்று வேளாண்மையின் முக்கியத்துவத்தை மாணவர்களிடம் எடுத்துக் கூறுவார்கள். விதையிலிருந்து தட்டு வரையிலான உணவுச் சங்கியில் பயிர்கள் வளர்ப்பு குறித்து அவர்களுக்கு எடுத்துரைக்கப்படும். RHAC என்னும் ரோட்ராக்ட் சுகாதார விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை திட்டத்தின் கீழ் சேவை மனப்பான்மை உள்ள மருத்துவர்கள் குழு, இந்த ரோட்ராக்ட் திட்டத்தின் கீழ் ஏழைக் குடும்பங்களுக்கு ஆலோசனைகள் வழங்கும்.

கரூரில் சமூக அடிப்படையிலான ஐந்து ரோட்ராக்ட் சங்கங்களும், நிறுவனம் அடிப்படையில் 13 சங்கங்களும் உள்ளன. இவற்றில் 1,500க்கும் மேலானவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். ஆனால், அவர்களில் 85 சதவீதம் பேர் இன்னும் மை ரோட்டரி போர்டலில் (வலை முகப்பில்) இன்னும் தங்களை பதிவு செய்து கொள்ளவில்லை. இது கட்டாயத் தேவையாகும்.■



*மாநில அளவு கேரம் போட்டி.*

# நிவாரணப் பணிகளில் ரோட்ராக்டர்கள்

**ஜெய்ஸ்ரீ**

கடந்த ஜூன் மாதம் அஸ்ஸாமில் பெய்த கனமழை 27 மாவட்டங்களில், 2,900 கிராமங்களில் வசிக்கும் 5 மில்லியன் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்தியது. சிலர் வெள்ளத்தின் பிடியில் சிக்கி உயிரிழந்தனர். பலரின் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டது. சில்சாரில் வசிக்கும் RID 3240க்கு உட்பட்ட மாவட்ட ரோட்ராக்ட் பிரதிநியான ராஜஸ்ரீ சின்ஹா, வெள்ளத்தில் மூழ்கிய தனது வீடு மற்றும் வீதிகளை விடியோவாக எடுத்து வாட்ஸ்ஆப் மூலம் பதிவிட்டிருந்தார். நான் உடனடியாக அவரைத் தொடர்புகொண்டேன். அவரிடம் நடந்த உரையாடலிலிருந்து அஸ்ஸாம் மாநிலத்தின் வெள்ளநிலைமையைப் புரிந்துகொண்டேன். வெள்ளத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட நகரங்களில் சில்சாரும் ஒன்று. பராக் மற்றும் பெக்லி நதிகளின் கரைகள் உடைப்பெடுத்து நிலைமையை மேலும் மோசமாக்கியிருந்தன.

ஜூன் மாதம் 18 மற்றும் 19 ஆகிய இரண்டு நாட்கள் தொடர் மழை பெய்தது. ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. கரைகள் உடைப்பு எடுத்ததால் வெள்ள நீர் நகரில் புகுந்தது. வீட்டிற்குள் தண்ணீர் வரத் தொடங்கிய உடனேயே அதாவது, தண்ணீர் அளவு அதிகரித்த உடன் நாங்கள் முதல் மாடிக்குச் சென்றோம். ஏறக்குறைய 10 நாள்களுக்கு மின்சாரமோ அல்லது நல்ல குடிதண்ணீரோ இல்லை என்றார் சின்ஹா. நிவாரண உதவிக்காக அவசரமாகத் தேவைப்படும் கொசு விரட்டி, குடிநீர், பால் பவுடர், சானிடரி நாப்கின்கள், போர்வைகள் ஆகிய பொருள்களின் பட்டியலை அவர் உடனடியாகப் பகிர்ந்து கொண்டார்.

சாலைகள் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சீர்குலைந்தன. இதனால் நகரங்களுக்கு இடையே தகவல் தொடர்புகள் துண்டிக்கப் பட்டன. வெள்ளத்தின்போது கணவனை இழந்த, ஷீலுராணி தாஸ் நிலைகுலைந்துபோனார். இந்த துயரச் சம்பவம் என் மனதை விட்டு நீங்காமல் இருக்கும். ஒவ்வொரு முறை வெள்ளம் வரும் போதும் கணவரை மீட்க நான் போராடியது என் நினைவுக்கு வரும் என்று கூறி கதறி அழுதார். கடந்த ஓராண்டு காலமாக கணவர் படுத்த படுக்கையாக புற்றுநோயை எதிர்த்துப் போராடி வந்தார். அவர் உயிருடன் இருந்திருந்தால் அவரை மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றியிருக்க முடியும். ஆனால், துரதிருஷ்டவசமாக அவர் இறந்துவிட்டார். அவரது உடலை தகனம் செய்ய வாழை மட்டையில் வைத்துத்தான் எடுத்துச் செல்ல முடிந்தது என்றார்.

ஒரு பெண், உடல் நலம் இல்லாமல் இருந்த தனது குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல படகுக்காக பிச்சையெடுக்க வேண்டியிருந்தது. நல்ல குடிநீர் கிடைக்காமல் மக்கள் திண்டாடினார்கள் என்று சில நெஞ்சை உருக்கும் சம்பவங்களை சின்ஹா கூறினார். வெள்ள நீரை குடிப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. மேலும் சமையலுக்கும் அழுக்குகள் நிறைந்த வெள்ள நீரைத்தான் பயன்படுத்த வேண்டியிருந்தது என்று வெள்ள நிவாரணப் பொருள்களை விநியோகித்தபோது ஒரு பெண் கூறியதாக அவர் குறிப்பிட்டார். மேலும் படகில் இருந்த ஒருவர், பலாப்பழத்தை கையில் பிடித்தபடி, நான், எனது குழந்தைகள், எங்கள் வீட்டு பசுமாடு எல்லோரும்



RAC ஹைலக்கண்டி உறுப்பினர்கள் வெள்ள நிவாரணம் வழங்குகின்றனர்.

உணவு கிடைக்கும் வரை இதைத்தான் சாப்பிட வேண்டியிருக்கும் என்று கூறியிருந்ததையும் அவர் சுட்டிக் காட்டினார். சில்சாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 1 லட்சம் பேர், 500க்கும் மேற்பட்ட முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

மழை நின்றவுடன் மாவட்டத்தில் உள்ள ரோட்ராக்ட் சங்கங்கள் களமிறங்கின. குடிநீர் பாட்டில்கள், உணவுப் பொருள்கள் மற்றும் இதர நிவாரணப் பொருள்கள் சேகரிக்கப்பட்டு மாநிலம் முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன. ரோட்ராக்டர்கள் சமூக வலை தளங்கள் மூலம் நிவாரணப் பொருள்கள் தேவை என கோரிக்கை விடுத்ததை அடுத்து அவை வந்து குவிந்த வண்ணம் இருந்தன.

ரோட்ராக்டர்கள் தண்ணீர் பாட்டில்கள், மெழுகுவர்த்திகள், பிஸ்கட் பாக்கெட்டுகள் மற்றும் சமைக்கப் பட்ட உணவுகள் ஆகியவற்றை மூங்கில் படகுகளில் ஏற்றிச்சென்று சிங்கரி பஸ்தி, நியூபகத்பூர் உள்ளிட்ட பகுதியில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் 250க்கும் மேற்பட்ட மக்களுக்கு வழங்கினர்.

RAC ஹைலாகண்டி தலைவர் கௌசிக் சக்ரவர்த்தி மற்றும் சங்கத்தினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 500க்கும் மேலான குடும்பங்களுக்கு குடிநீர் மற்றும் மளிகை சாமான்களை இலவசமாக விநியோகித்தனர். பல இடங்களில் கழுத்தளவு தண்ணீரில் நீந்திச் சென்று நிவாரண உதவிகளை வழங்க வேண்டியிருந்ததாக ஹைலாகண்டி தெரிவித்தார். வெள்ளம் காரணமாக அகர்தலாவைச் சேர்ந்த 14 மாணவர்கள் சில்சாரில் சிக்கித் தவிக்க நேர்ந்தது. அவர்கள் ஒருவாரம் தங்குவதற்கும் உணவுக்கும் ஏற்பாடு செய்து பின்னர் அவர்களை ரயில் மூலம் தங்கள் இருப்பிடங்களுக்கு அனுப்பிவைத்தோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

RAC சில்சார் ராயல்ஸ் சங்கத்தைச் சேர்ந்த ரோட்ராக்டர்கள், தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படையினருடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று வெள்ள நிலைமையை ஆய்வு செய்தனர். நிவாரண முகாம்களில் தங்கியிருந்தவர்களுக்கு 100 பாக்கெட்டுகள் சானிடரி நாப்கின்கள், தனிநபர் சுகாதாரப் பொருள்கள், 8,000 லிட்டர் குடிநீர், பிஸ்கட் பாக்கெட்டுகள், கொசுவிரட்டி, மெழுகுவர்த்திகள், மளிகைப் பொருள்களை நிவாரண உதவியாக வழங்கினர். நாங்கள் நகரம் முழுவதும் சுமார் 1,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினோம். வெள்ளத்தால் தங்களது உடைமைகளை இழந்து தவித்த மக்களை பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது என்றார் சங்கத்தின் தலைவர் அனிமேஷ் பால். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதில் எங்களுடன் கைகோர்த்து செயல்பட்ட பொது மக்கள் மற்றும் இதர தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார் அவர்.■

# ரோட்டரி கண் மருத்துவமனை பெற்றது பாட்னா

### ரோட்டரி செய்திக் குழு



*பீகார் சுகாரத்துறை அமைச்சர் மங்கள் பாண்டே கண் மருத்துவமனையை துவக்கி வைக்கிறார்.*

RC பாடலிபுத்ரா, RID 3250, RC கில்ட்போர்ட், RID 1145 உடன் இணைந்து உலகளாவிய மானியத்துடன் $94,000 செலவில் பாட்னாவில் மகாவீர் ரோட்டரி பாடலிபுத்ரா கண் மருத்துவமனையை அமைத்தது. இந்த மையமானது ஃபாகோ எமல்சிஃபிகேஷன் சிஸ்டம், ஸ்கேன் பயோமீட்டர், ஸ்லிட் லேம்ப், ஆட்டோ கெரடோ ரிஃப்ளெக்டோ மீட்டர், ஆபரேஷன் மைக்ரோஸ்கோப் மற்றும் பிற உயர் தொழில் நுட்ப உபகரணங்களுடன் பொருத்தப் பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையை பீகாரின் சுகாதாரத்துறை அமைச்சர் மங்கள் பாண்டே, DG பிரதீம் பானர்ஜி முன்னிலையில் திறந்து வைத்தார்.

இது ஆதரவற்றவர்களுக்கு இலவச அறுவை சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை அல்லாத சேவைகளை வழங்கும். ரோட்டரி சங்கங்கள் ஏழை நோயாளிகளை சிகிச்சைக் காக இந்த மருத்துவமனைக்கு பரிந்துரைக்கலாம். RC பாடலிபுத்ரா கடந்த இரண் டு ஆண்டுகளில் ரூ.2.4 கோடி மதிப்பிலான மூன்று ஜிஜி திட்டங்களை ஏற்கனவே முடித்துள்ளது. இதில் மூன்று டயாலிசிஸ் மையங்கள் (பாட்னாவில் இரண்டு மற்றும் முசாபர்பூரில் ஒன்று), செல் பிரிப்பான் வசதியுடன் கூடிய இரத்த வங்கி ஆகியவையாகும்.■

ADVERTORIAL




**Mega Project**

**कन्या श्री**

**Cycle Donation Drive**



This Rotary year started with a befitting welcome to our first ever woman RI President in the history of Rotary, Jennifer Jones, by organizing ***Kanya Shree Mega Project in our district on 1st July, wherein 2100 cycles were presented to the needy and meritorious girl students in 19 cities.*** The donors were Rotarians and their friends and families. T***he Chief Guest of the inaugura**l **program was Shri Pushkar Singh Dhami, Hon'ble CM of Uttarakhand.*** Smt. Hema Malini, Social Worker, Classical Dancer & Actress and Member of Parliament supported the project.













ADVT.


# Lakshay





District Governor Rtn. Pawan Agarwal and First Lady Rtn. Prachi Agarwal attended the Goal Setting Seminar – Lakshay at Pune between 20th to 22nd July, 2022. The event was addressed by RI President Jennifer Jones and Past RI President, Shekhar Mehta.

## District Governor Pawan Agarwal started this Rotary year with new vigour




## CSR Projects

RI District 3110 is pleased to announce the approval of 4 CSR projects of Rotary Club of Kashipur by Rotary Foundation (India) in the month of July, 2022. ***The total value of these projects is* USD 275,000**.

These projects are being done in the area of "Basic Education & Literacy" and "Maternal & Child Health".

***New Clubs:*** Four new clubs have been chartered so far, out of which one is ***"All-women-club"***

## Endowment Funds

District has already created two ***Pooled Endowment Funds*** totalling ***USD 59,000***

This is the first time that our district has done any endowment.



**Prachi & Pawan Agarwal**
District Governor, RID 3110

Follow us: @Rotary3110

# ஒரு கிராமத்தை மாற்றியமைத்த மகிழ்ச்சி ஹள்ளித் திட்டம்

V முத்துகுமரன்

ரோட்டரி சங்கங்கள் நகரங்கள் மற்றும் பெரிய ஊர்களில் “வளர்ச்சியானது நகர்த் தொகுதிகளில் கவனம் செலுத்துவதால் கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆனால், சில கிராமங்களில் பல ரோட்டரித் திட்டங்களைச் செய்வதும் போதாது. எங்களுடைய மகிழ்ச்சி ஹள்ளி (கிராமம்) என்ற திட்டம் கிராமத்து மக்களிடையில் குன்றாத மகிழ்ச்சியும் முன்னேற்றத்தையும் வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

மகிழ்ச்சி ஹள்ளியின் முதல் கட்டத்தில், இந்தச் சங்கம் பெங்களூரு கிராமப்புறத்தில் உள்ள ஆனேக்கல் வட்டத்தைச் சேர்ந்த சிவனஹள்ளி கிராமத்தில் உள்ள மக்களுடைய வளம் குன்றா வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் முழுமையான சூழமைப்பை உருவாக்க ராமகிருஷ்ணா அமைப்பு, மாநில அரசின் கிராமப்புற முன்னேற்றம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையுடன் முத்தரப்பு MoU ஒன்றில் கையொப்பமிட்டது. இந்த அமைப்பு நடத்தும் ஸ்ரீ சாரதா தேவி வித்யா கேந்த்ரா என்ற தொடக்கப் பள்ளி CBSEல் இணைந்தது, உயர்நிலைப் பள்ளியாக மேம்படுத்தப்பட்டது, இதில் இன்ஃபோசிஸ் அறக்கட்டளையைச் சேர்ந்த சுதா மூர்த்தியும், ராமகிருஷ்ணா பக்தர்களுடைய பங்களிப்புகள், பிற நன்கொடைகளும் ஆதரித்தன. “குழந்தைகள் பள்ளிக்குச் சென்று வர ரூ.45 லட்சம் மதிப்புள்ள இரண்டு 50-இருக்கைப் பேருந்துகளை நாங்கள் அளித்துள்ளோம். இப்போது, மாணவர் எண்ணிக்கை 300லிருந்து 800 வரை செல்லலாம்” என்று விளக்குகிறார் பகவத். புதுப்பிக்கப்பட்ட இந்தப் பள்ளிக்கு ரூ.30 லட்சம் மதிப்புள்ள ஆய்வகக் கருவிகளை வழங்க ஒரு பன்னாட்டு நல்கைக்கு இந்தச் சங்கம் விண்ணப்பம் செய்துள்ளது. வகுப்பறைக் கற்றலுக்கு உதவும் மாண்டிச கருவிகள் ரூ.4 லட்சம் செலவில் பெறப்படும்.

இந்த அமைப்பு இயக்கும் நலப் பராமரிப்பு மையத்தில் தன்னார்வலர் மருத்துவர்கள், செவிலியர்கள் பணிபுரிகிறார்கள். இவர்கள் ஞாயிற்றுக் கிழமையில் மட்டும் இங்கு வருவதால், கிராமத்து மக்களுடைய மருத்துவத் தேவைகள் நிறைவடையவில்லை. “அதனால், அத்திபெலெ ஆக்ஸ்ஃபோர்ட் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவ மனையுடன் இணைந்து ரூ.6.5 லட்சம் மதிப்புள்ள தொலை மருத்துவ (tele medicine) மருந்தகம் ஒன்றை நாங்கள் அமைத்தோம். இதன் மூலம், மருத்துவர்கள் நாள்தோறும் நோயாளிகளுக்குத் தொலை-ஆலோசனை வழங்குகிறார்கள்.

75,000 லிட்டர் கொள்ளளவுள்ள தொட்டி ஒன்று கிராமத்து மக்கள்



**RID 3190 IPDG ஃபசல் முகமது, RC பெங்களூர் மிட்டவுன் தலைவர் (2021–22) ஸ்ரீகாந்த் பகவத், செயலாளர் நம்ரதா பாட்டியா மற்றும் உறுப்பினர்கள் சிவனஹள்ளி கிராமத்தில்.**

1,400 பேருக்குக் குடிநீர் வழங்கும். “நாங்கள் ஏற்கெனவே உள்ள ஒரு மையத்தில் பெண்களுக்குத் தையல் போன்ற தொழில் சார்ந்த திறன்களை வழங்குகிறோம், அவர்களுக்குப் பள்ளிச் சீருடைகள் போன்ற பெரிய ஆர்டர்களைப் பெறுகிறோம், இதனால் அவர்களுக்குத் தொடர்ந்த வருவாய் கிடைக்கிறது. இப்போது, சிவனஹள்ளியில் உள்ள 10 பெண்கள் இந்தப் பணியில் ஈடுபடுகிறார்கள், என்கிறார் சங்கச் செயலாளர் நம்ரதா பாடியா. தொழில் சார்ந்த மையத்தில் Rtn F R சிங்வி அவர்களுடைய சன்செரா பொறியியல் நிறுவனம் பள்ளி, கல்லூரியிலிருந்து நின்றவர் களுக்கு CNC இயந்திரங் களைக் கையாளப் பயிற்சியளிக்கிறது. “நாங்கள் அடுத்த 10 ஆண்டுகளில் 100 கிராமங்களில் மகிழ்ச்சி ஹள்ளி திட்டத்தை நடத்தத் தயாராக இருக்கிறோம்,'' என்றார் பகவத்.

### eMaanasi: மன நலன்

USல் உள்ள பால்டிமோரைச் சேர்ந்த RID 7130, DG Dr கீதா ஜெய்ராம் தன்னுடைய சொந்த ஊருக்குச் சென்றிருந்தபோது, கிராமத்து மக்கள், பெரும் பாலும் பெண்கள், அன்றாடச் சிரமங்களால் மன மற்றும் உளவியல் பிரச்சனைகளால் துன்பப் படுவதைக் கண்டறிந்தார். RC பெங்களூர் மிட்-டவுன் ஆதரவுடன், புனித ஜான்ஸ் மருத்துவக் கல்லூரியின் தொழில்நுட்ப அறிவுடன் அவர் 2001ல் ஆனேக்கல் வட்டத்தில் உள்ள முகலூர் கிராமத்தில் மானசி என்ற சமூக மன நல மருந்தகத்தை அமைத்தார். இந்த மையம் USல் உள்ள பால்டிமோரில் இருக்கும் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் மருத்துவமனை ஆராய்ச்சியாளர்களாலும் வழிநடத்தப்படுகிறது. “இந்த மருந்தகத்தில் சுமார் 1,200 நோயாளிகள் மன நலக் குறை பாடுகளுக்குச் சிகிச்சை பெறுகிறார்கள். என்கிறார் திட்டத்தின் தலைவர் ரமேஷ் புல்சந்தானி.

மானசி மருந்தகத்தின் வெற்றியைத் தொடர்ந்து, வடக்கு பெங்களூரில் உள்ள ஃபிரேசர் டவுனில் இந்தச் சங்கம் நடத்தும் HSIS மருந்தகத்தில் சென்ற ஆண்டு அதன் முதல் கிளை அமைக்கப்பட்டது. 2011ல், இந்தச் சங்கம் மானசிபற்றி ஓர் ஆவணப் படத்தை எடுத்தது. இதை RI வாரியமும் WHOம் பாராட்டின.


இப்போது, இந்தச் சங்கம் ரூ.80 லட்சம் செலவில் eMaanasi என்ற மென்பொருளை உருவாக்கியுள்ளது. இது மன மற்றும் உளவியல் பிரச் சனைகளுக்கான சிகிச்சையில் பன்னாட்டுத் தர அளவுகோல்களை வழங்கும்.

### மூளை நல முன்னெடுப்பு

TRF இரவு விருந்தின்போது, இந்தச் சங்கமும் பெங்களூரில் உள்ள நிம்ஹான்ஸும் (Nimhaans) நம்முடைய நரம்பியல் அமைப்புகளைக் கவனித்துக்கொள்வதுபற்றிய விழிப்புணர்வை உருவாக்குகிற மூளை நலன் பயிலகங்கள், யோகாசன முகாம்கள் மற்றும் பிற சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான ஓர் MoUல் RI தலைவர் சேகர் மேத்தா முன்னிலையில் கையொப்பமிட்டன. “நிம்ஹான்ஸ் மன நலப்பிரச் சனைகளைக் கண்டறிந்து சிகிச்சை வழங்குவது பற்றி PHCக்களில் உள்ள ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்து விரிவான மாதிரி ஒன்றை உருவாக்க விரும்புகிறது. எங்கள் கவனம் தடுப்புப் பராமரிப்பில் இருக்கும்'' என்கிறார் பகவத்.

ஓர் ஆண்டு வெள்ளோட்டத் திட்டமாகிய மூளை நல முன்னெடுப்பு, சிறப்பு முகாம்களின் வழியாக, உளவியல் அறிகுறிகளைக் கொண்ட மக்களை அடையாளம் காணும். “பின்னர், நாங்கள் அவர்களுக்குச் சிகிச்சை அளிப்போம்'' என்கிறார் சங்கப் பொருளாளர் நதீம் அகமது. ‘‘MCKS என்ற உள்ளூர் NGO இதற்கு ரூ.40 லட்சம் பங்களிக்கும், எங்கள் சங்கம் ரூ.10 லட்சம் வழங்கும்.''■

## உங்கள் சங்கத்தின் செய்திகள் ரோட்டரி நியூஸ் இதழில் வர வேண்டுமா?




ரோட்டரி நியூஸ், இந்த மண்டலத்தில் இருக்கும் சங்கங்களின் சேவை திட்டங்களை பற்றிய செய்திகளை தொடர்ந்து பிரசுரித்து வருகிறது.

உங்கள் சங்கத்தின் திட்டங்களை பற்றி தெளிவாகவும் சுருக்கமாகவும் விவரித்து, நல்ல புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் மொபைல் போனில் இருக்கும் போட்டோவாக இருந்தால் கூட, போட்டோ கேலரியில் இருந்து நேரடியாக எங்களுக்கு ஈமெயில் வாயிலாக மட்டுமே அனுப்ப வேண்டும், வாட்ஸ்ஆப் மூலம் அனுப்பும்போது புகைப்படங்களின் அளவு குறைவதோடு மட்டும் இல்லாமல் அதன் தரமும் குறைந்து விடுகிறது.

ரோட்டரி நியூஸ்கான உங்கள் திட்டங்களை சமர்ப்பிக்க தேவையானவை:

திட்டம் எப்படி உருவானது; திட்டத்தின் அவசியம்; திட்டத்தின் மதிப்பு மற்றும் அந்த தொகை எவ்வாறு திரட்டப்பட்டது; திட்டத்தை நிறைவேற்ற எதிர்கொண்ட சவால்கள்; திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது; திட்டத்தின் பயனாளிகள்.

உங்கள் சங்க திட்டங்களை கீழே இருக்கும் ஏதாவது ஒரு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்: rushbhagat@gmail.com, or rotarynewsmagazine@gmail.com

# ஒரு இளம் பெண்ணைக் காப்பாற்றிய கிராமத்தை தத்தெடுக்கும் திட்டம்

**ஜெய்ஶ்ரீ**

2014 தீபாவளியன்று கமினா பாட்டீலின் முகத்தில் பட்டாசு வெடித்ததால், அவரின் ஒட்டுமொத்த குடும்பமும் நிலைகுலைந்தது. அவள் முகத்தில் சிறு காயங்களை ஏற்படுத்தியதோடு, தாக்கம் காரணமாக அவளது வலது கண்ணில் இருந்த கண்மணி அதன் விழிபள்ளத்திலிருந்து வெளியே வந்தது. அந்த தீபாவளி எனக்கு ஒரு இருண்ட நாள், இன்றும் நான் பட்டாசுகளை தொடுவதில்லை. அப்போது எனக்கு 14 வயதுதான், நீண்ட நேரம் கண்ணாடியில் என்னைப் பார்க்கவே பயமாக இருந்தது, என்கிறார் அவர். உடனடியாக உள்ளூர் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப் பட்டார், ஆனால் அங்கே எதுவும் செய்ய முடியவில்லை. பாதிக்கப்பட்ட கண்ணில் பார்வை இழந்தாள்.

பால்கர் மாவட்டத்தில் உள்ள குண்டே என்ற கிராமத்தில் வசிக்கும் காமினா, அவரது தோற்றத்தினால் பள்ளியில் அவளது சக மாணவர்களால் கேலி செய்யப் பட்டாள்; அவர் பள்ளியில் இருந்து விலகி மெதுவாக தன் வீட்டினுள் தன்னை அடைத்து கொண்டார். “நான் மிகவும் பரிதாபமாக உணர்ந்தேன், என் வீட்டை விட்டு வெளியே வருவதைத் தவிர்த்தேன். என் பெற்றோர் என்னால் கஷ்டப்படுவதைக் கண்டு எனக்கு இன்னும் வேதனையாக இருந்தது, ஆனால் எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. எந்தவொரு மேம்பட்ட சிகிச்சையும் எங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது.

அதே நேரத்தில் RC பாம்பே கண்டிவலி, RID 3141, பால்கரில் கிராமப்புற மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தி வந்தது. சங்கம் மாவட்டத்தில் உள்ள சில கிராமங் களை தத்தெடுத்து, பள்ளிகள், கழிப்பறைகள், தகனம் செய்யும் இடங்கள் மற்றும் தண்ணீர் வசதி களை அமைத்து கொண்டிருந்தது. மருத்துவ முகாம்களையும் ஏற்பாடு செய்தது.

2015ம் ஆண்டு குண்டே கிராமத்தில் இதுபோன்ற ஒரு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. மருத்துவர்கள் கழிவறையை பயன்படுத்த விரும்பியதால், கிராம பஞ்சாயத்து தலைவராக இருந்த கமினாவின் தந்தை அவர்களை தனது வீட்டிற்கு அழைத்து சென்றார். அப்போதைய சங்கத்தலைவர் தீபா கோயங்கா, வீட்டில் இருட்டில் அமர்ந்திருந்த கமினாவை கவனித்தார். நான் அவளுடன் உரையாட முயன்றபோது, அவள் அமைதியாக இருந்தாள். ஒரு திரைக்கு பின்னால் ஒளிந்து கொண்டாள். அவளது விபத்தைப் பற்றி அவள் தந்தையிடமிருந்து தெரிந்து கொண்டேன். கமினா எப்படி மக்களைத் தவிர்க்கிறார், எப்போதும் வீட்டிற்குள்ளேயே இருந்தார், மேலும் அவர் எப்படி கேலி செய்யப்பட்டார் என்று அவர் என்னிடம் கூறினார்.

தீபா உடனடியாக மும்பையில் உள்ள மருத்துவர்களுடன் கலந்தாலோசித்து, மலாடில் உள்ள LM பாட்டீல் ரோட்டரி கண் மருத்துவமனையில் காமினாவின்

**இடமிருந்து:** RC *பாம்பே கண்டிவ்லி தலைவர் தீபா கோயன்கா குழந்தை ஹிமானியுடன், கமினா பாட்டீல், முன்னாள் தலைவர்* S L *பிரசாத் மற்றும் ஜதின் லக்கானி.*



சிகிச்சைக்கு நிதியுதவி செய்ய முடிவு செய்தார். ஆனால் கமினாவின் நிலைக்கு சிகிச்சை அளிக்கும் அதிநவீன கருவிகள் அங்கே இல்லை. உடனடியாக RC பாம்பே கண்டிவ்லியைச் சேர்ந்த கிருஷ்ண சதுர்வேதி, ரூ.45 லட்சம் மதிப்பிலான இயந்திரத்தை ஸ்பான்சர் செய்ய ஒப்புக்கொண்டார். அந்த இயந்திரம் இரண்டு வாரங்களில் வந்து சேர்ந்தது, கமினாவுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனை தயாராக இருந்தது.

### சிகிச்சை

டாக்டர்கள் சேதமடைந்த கண்ணை அகற்றி திசுக்களை குணமாக்கினர். பின்னர் விழிபள்ளத்தில் செயற்கைக் கண் வைக்கப்பட்டது. அறுவை சிகிச்சை காமினாவின் பார்வையை மீட்டெடுக்கவில்லை என்றாலும், அவர் முகத்தை மாற்றியது. அந்த அறுவை சிகிச்சை மிகவும் நுட்ப மானது, உண்மையான மற்றும் செயற்கைக் கண்களை வேறு படுத்துவது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. அவர்களுடைய பங்களிப் பின் ஒரு பகுதியாக, மருத்துவ மனை அவளது சிகிச்சைக்காக எதுவும் வசூலிக்கவில்லை. இது 50 ஆண்டுகளுக்கு முன்பு RC நார்த்வெஸ்ட் மலாட்டால் நிறுவப் பட்டது, என்கிறார் தீபா.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு, கமினா மீண்டும் பள்ளிக்குச் சென்று இடைநிலைக் கல்வியை முடித்தார். 2021ல் திருமணம் செய்து கொண்டார். தீபா, அவரது சங்க உறுப்பினர்களுடன் சமீபத்தில் குண்டே கிராமத்தில் அவரைச் சந்தித்தார். “ஹிமானி என்ற அழகான பெண் குழந்தையுடன் கமினாவை பார்த்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம்.”

அவென்யூ தலைவராக தீபா RID 3141ன் 75 ரோட்டரி சங்கங்களுடன் ஒருங்கிணைந்து கிராமப்புற பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு 50,000 மறுபயன் பாட்டு சானிட்டரி நாப்கின்களை விநியோகித்தார். அவர்களுக்கு பருவமடைதல் மற்றும் மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்தும் மாவட்டத்தின் திட்டமான ப்ராஜெக்ட் ரெட் கீழ் கற்பித்தார்.■

---

# நைனிடாலில் ஒரு ரோட்டரி மருந்தகம்

ரோட்டரி செய்திக் குழு



*DG பவன் அகர்வால் (இடமிருந்து 5வது), சங்கத்தலைவர் பபிதா ஜெயின் மற்றும் PDG சுபாஷ் ஜெயின் (3012) ரோட்டரி ஜாகர்ஸ் பூங்காவில்*

உத்தரகாண்டில் உள்ள ஃபர்சோலி கிராமத்தில் RC நைனிடால், RID 3110ல் அமைக்கப்பட்ட ரோட்டரி மருந்தகத்தை DG பவன் அகர்வால் திறந்து வைத்தார்.

இந்தர்ஷீல் ஜெயின் அறக் கட்டளையின் ஆதரவுடன் அமைக்கப் பட்ட இந்த சிகிச்சையகம், மருத்துவமனைகள் அல்லது எந்த நவீன சுகாதார வசதியும் இல்லாத ஏழ்மையான குடும்பங்களுக்கு பயனளிக்கும் என்று சங்கத்தலைவர் பபிதா ஜெயின் கூறினார். மற்றொரு திட்டத்தில், சங்கம் ஒரு திறந்த உடற்பயிற்சி கூடத்துடன் கூடிய ரோட்டரி ஜாகர்ஸ் பூங்காவை நைனிடாலின் கென்னடி பூங்காவில் உருவாக்கியுள்ளது, அதையும் DG அகர்வால் திறந்து வைத்தார். “சங்கம் பூங்காவை அழகுபடுத்தும் மற்றும் அதை ஒரு தொடர்ச்சியான திட்டமாக பராமரிக்கும்” என்று பபிதா கூறினார். PDG Dr சுபாஷ் ஜெயின், RID 3012, AG Dr DK பாட் மற்றும் Rtn ராஜ் மெஹ்ரோத்ரா ஆகியோர் சம்பிரதாய நிகழ்வில் IPP விக்ரம் சியாலிடமிருந்து பொறுப்பேற்ற புதிய சங்கத்தலைவர் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர்.■

# புதிய இயக்குனர்கள் மற்றும் அறங்காவலர்கள் பதவியேற்றனர்

*RI இயக்குநர்கள் குழுவில் 19 உறுப்பினர்கள் உள்ளனர்: RI தலைவர், அடுத்த தலைவர் மற்றும் 17 இயக்குநர்கள், அவர்களின் மண்டலங்களால் பரிந்துரைக்கப்பட்டு RI மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். RI அரசியலமைப்பு மற்றும் சட்டங்களின் படி ரோட்டரி சர்வதேச விவகாரங்கள் மற்றும் நிதிகளை குழுமம் நிர்வகிக்கிறது. எட்டு புதிய இயக்குனர்கள் மற்றும் அடுத்த தலைவர் ஜூலை 1 அன்று பதவியேற்றனர்.*

*ரோட்டரியின் அறங்காவலர்கள் அறக்கட்டளையின் வணிகத்தை நிர்வகிக்கின்றனர், இது சேவை நடவடிக்கைகளுக்கு நிதியளிக்கும் ரோட்டரியின் தொண்டு பிரிவாகும். RIயின் அடுத்த தலைவர், அறங்காவலர்களை நியமிக்க அவர்களை நான்கு வருட காலத்திற்கு RI குழுமம் தேர்ந்தெடுக்கிறது. அறங்காவல் தலைவர் மற்றும் நான்கு புதிய அறங்காவலர்கள் ஜூலை 1 அன்று பதவியேற்றனர்.*

**இயக்குனர்கள்**

**கோர்டன் R மெக்கினலி**

*தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்,*

RC *சவுத் குயின்ஸ்பெரி, ஸ்காட்லாந்து*




கார்டன் மெக்கினலி ரோட்டரி இன்டர்நேஷனல் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர் எடின்பர்க்கில் உள்ள ராயல் உயர்நிலைப் பள்ளியிலும், டண்டீ பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றார், அங்கு பல் அறுவை சிகிச்சையில் முதுகலைப் பட்டம் பெற்றார். மெக்கினலி 1984ல் 26 வயதில் ரோட்டரியில் இணைந்தார். RC சவுத் குயின்ஸ்ஃபெரியின் உறுப்பினரான அவர், கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் ரோட்டரி இன்டர்நேஷனலின் (RIBI) தலைவராகவும் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். RIக்கு இயக்குனராகவும், 2022 ஹூஸ்டன் கன்வென்ஷன் கமிட்டியின் ஆலோசகராகவும், செயல்பாட்டு மறுஆய்வுக் குழுவின் தலைவராகவும் பல குழுக்களில் பணியாற்றியுள்ளார்.

அவரும் ரோட்டேரியான அவரது துணைவியார் ஹீத்தரும், பால் ஹாரிஸ் பெல்லொஸ், முக்கிய நன்கொடையாளர்கள் மற்றும் TRFன் Benefactor-கள். அவர்கள் பெக்வெஸ்ட் சொசைட்டியில் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

**ஆல்பர்டோ செச்சினி**

RC *ரோமா நோர்ட்-எஸ்ட், இத்தாலி*



ஆல்பர்டோ செச்சினி இத்தாலியில் உள்ள பழமையான நிறுவனங்களில் ஒன்றான ஐட்ரோஸ் இன்ஜினியரிங் நிறுவனத்தின் நிர்வாகியாகவும், தொழில்நுட்ப இயக்குநராகவும் உள்ளார். அவர் 1988ல் ரோம்மின் சபீன்சா பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியலில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்றார்.

ரோட்டரியுடன் செச்சினியின் முதல் அனுபவம் 1988ல், அவர் ரோட்ராக்ட் கிளப் ஆஃப் அன்சியோ-நெட்டுனோவை நிறுவியது. அவர் தனது முதல் ரோட்டரி சங்கத்தில் 1994ல் இணைந்தார். கமிட்டி உறுப்பினர், ரோட்டரி பொது தோற்ற ஒருங்கிணைப்பாளர், பயிற்சி தலைவர், பிராந்திய ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆலோசகர், தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்னர்கள் பயிற்சி கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் மற்றும் சர்வதேச சபை பேச்சாளர் உட்பட பல பதவிகளில் மண்டல மற்றும் சர்வதேச மட்டங்களில் RIக்கு சேவை செய்துள்ளார். ரோட்டரியின் இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகளில் தனது அனுபவத்தை கொண்டு, அவர் ரோட்ராக்ட்-இன்டராக்ட் கமிட்டியின் தலைவராகவும் துணைத் தலைவராகவும் பணியாற்றினார் மற்றும் 2014ல் சிட்னியில் நடந்த ரோட்ராக்ட் ப்ரீ கன்வென்ஷன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

செச்சினி, சர்வீஸ் அபோவ் செல்ஃப் விருதையும், ரோட்டரி அறக்கட்டளையின் சிறப்பான சேவைக்கான சான்றையும் பெற்றுள்ளார். அவர் பல பால் ஹாரிஸ் பெல்லோவாகவும், Benefactor ஆகவும் அறக்கட்டளையை ஆதரிக்கிறார்.

**பேட்ரிக் D சிசங்கா**

RC *நக்வசி, ஜாம்பியா*



பட்டய ஆளுகை நிபுணரான பேட்ரிக் சிசங்கா, லண்டன் ஸ்கூல் ஆஃப் அக்கவுன்டன்சியில் இருந்து பட்டய ஆளுகை நிறுவனம் (UK) மற்றும் ஜாம்பியாவின் இயக்குநர்கள் நிறுவனத்தின் உறுப்பினர். அவர் கார்ப்பரேட் ஆளுகை குறித்து உலக வங்கிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் மற்றும் ஜாம்பியாவின் இன்ஸ்டிடியூட் ஆஃப் டைரக்டர்ஸ் மற்றும் ஆப்பிரிக்க கார்ப்பரேட் கவர்னன்ஸ் நெட்வொர்க்கின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

சிசங்கா முதலில் இண்டராக்ட் உறுப்பினராக இணைந்தார். 1968ல் உயர்நிலைப் பள்ளி மாணவராக, அவர் கென்யாவிற்கு குறுகிய கால இடைநிலைப் பரிமாற்ற மாணவராக செல்லத் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

மொம்பாசாவில் அப்போதைய மாவட்ட ஆளுநருடன் தங்கினார்.

1986ல், அவர் RC காவாசி இன் பட்டய உறுப்பினரானார், மேலும் 1998ல், அவர் RID 9210ன் மாவட்ட ஆளுநரானார், அவர் அந்த பதவியை வகித்த முதல் வெள்ளையர் அல்லாத நபர். சிசங்கா உறுப்பினர் குழு மற்றும் Reach out to Africa கமிட்டி உட்பட பல குழுக்களில் RIக்காக பணியாற்றியுள்ளார். அவர் சர்வீஸ் அபோவ் செல்ஃப் விருது மற்றும் ரோட்டரி அறக்கட்டளையின் சிறந்த சேவைக்கான சான்றையும் பெற்றுள்ளார். அவரும் அவரது கூட்டாளியான பெட்ரோனெல்லாவும் முக்கிய நன்கொடையாளர்கள்.

### ஜெர்மி ஹர்ஸ்ட்

RC *கிராண்ட் கேமன், கேமன் தீவுகள்*



இங்கிலாந்தின் ரோசெஸ்டரில் பிறந்த ஜெர்மி ஹர்ஸ்ட் 1988ல் கேமன் தீவுகளுக்கு இடம் பெயர்ந்தார். கேமன் தீவுகள் மற்றும் பிற கரீபியன் சந்தைகளில் பலவிதமான சொத்து சேவைகளை வழங்கும் IRG குழும நிறுவனங்களை இயக்குகிறார்.

ஹர்ஸ்ட் உலகின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் உலகளாவிய ஆலோசனைக் குழுவின் தலைவராக உள்ளார் மற்றும் அதன் இயக்குநர்கள் குழுவில் பணியாற்றுகிறார். ஹர்ஸ்ட் 1988ல் ரோட்டரியில் இணைந்தார். அவர் RIன் உறுப்பினர் குழு மற்றும் கூட்டாண்மைக்கான குழுவில் பணியாற்றியுள்ளார் மற்றும் பல முறை RIPRஆக இருந்துள்ளார்.

கரீபியனில் ரோட்டரியின் பேரிடர் நிவாரண முயற்சிகளை நிர்வகிப்பதில் ஹர்ஸ்ட் பெரிதும் ஈடுபட்டுள்ளார், 2017ம் ஆண்டு இர்மா மற்றும் மரியா சூறாவளிகளுக்கான தனது மாவட்டத்தின் பேரிடர் நிவாரணக் குழுவின் தலைவராக இருந்தார் மற்றும் 2009ல் ரோட்டேரியன் அவசர பேரிடர் முன்முயற்சி (REDI) மாநாட்டை ஏற்பாடு செய்தார். அவரும் அவரது மனைவி மிச்செலும் ரோட்டரி அறக்கட்டளையின் முக்கிய நன்கொடையாளர்கள் மற்றும் பெக்வெஸ்ட் சொசைட்டி, பால் ஹாரிஸ் சொசைட்டி மற்றும் மாவட்டம் 7020 இன் போலியோபிளஸ் சொசைட்டி ஆகியவற்றின் உறுப்பினர்கள். அவர் சிறப்பான சேவைக்கான TRFன் சான்றைப் பெற்றுள்ளார்.

### ட்ரூ கெஸ்லர்

RC *நார்த் ராக்லேண்ட் (ஹேவர்ஸ்ட்ரா), நியூயார்க்*




ட்ரூ கெஸ்லர் MT வங்கியின் வணிக ரியல் எஸ்டேட் பிரிவின் மூத்த துணைத் தலைவராக உள்ளார். ஆர்வமுள்ள நிதி சேகரிப்பாளரான அவர், TRF, ஹபிடாட் பார் யுமானிட்டி, மார்ச் ஆப் டைம்ஸ் மற்றும் ஃபீடிங் வெஸ்ட்செஸ்டர் உள்ளிட்ட நிறுவனங்களுக்காக ஆயிரக்கணக்கான டாலர்களை திரட்டியுள்ளார்.

கெஸ்லர் 2001ல் 20 வயதில் ரோட்டரியில் இணைந்தார். அவர் 25 வயதில் RC நார்த் ராக்லேண்டின் (ஹேவர்ஸ்ட்ரா) தலைவராக பணியாற்றினார், அந்த சங்கத்தின் வரலாற்றில் இளைய தலைவராக இருந்தார். 32 வயதில், அவர் மாவட்டம் 7210ன் ஆளுநராக பணியாற்றினார்.

இன்டராக்ட், RYLA, ரோட்டரி யூத் எக்ஸ்சேஞ்ச் மற்றும் பிற நிகழ்ச்சிகளில் அவரது குழந்தைகள் அனைவரும் பங்கேற்றுள்ளனர். கெஸ்லர் மற்றும் ரோட்டேரியரான அவரது மனைவி, விக்கி, நியூயார்க்கின் ஹோப்வெல் ஜங்ஷனில் வசிக்கின்றனர்.

### முஹம்மது ஃபைஸ் கித்வாய்

RC *கராச்சி கர்சாஸ், பாகிஸ்தான்*



முஹம்மது ஃபைஸ் கித்வாய் சிஜி குளோபலின் தலைவராக உள்ளார், இது ஒரு முன்னணி கட்டிடக்கலை, பொறியியல், நகர்ப்புற வடிவமைப்பு, ரியல் எஸ்டேட் மேம்பாடு மற்றும் விருந்தோம்பல் நிறுவனமாகும். 1980ல் ரோட்ராக்டில் சேர்ந்த கித்வாய், பாகிஸ்தானின் முதல் ரோட்டரி இயக்குநராவார். 1986ம் ஆண்டில், கராச்சியிலிருந்து கனடாவிற்கு ரோட்டரி குரூப் ஸ்டடி எக்ஸ்சேஞ்ச் பயணத்தில் புறப்பட்ட அவரின் பான் ஆம் விமானம் 73 கடத்தபட்டது. அந்த வன்முறை தாக்குதலில் இருந்து அவர் உயிர்பிழைத்தார்.

கித்வாய் 1987ல் ரோட்டரியில் இணைந்தார் மற்றும் 1993ல் RC கராச்சி கர்சாஸின் உறுப்பினரானார். பாகிஸ்தானில் ரோட்டரி அதன் போலியோ ஒழிப்பு முயற்சி பணியைத் தொடங்கியதிலிருந்து அவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். 1997ல் கராச்சியின் புறநகர்ப் பகுதியில், அவர் ரோட்டரி சமூகப் படையை (RCC) நிறுவினார்.

அவர் ரோட்டரி பாகிஸ்தான் எழுத்தறிவு மிஷனின் நிறுவனர் மற்றும் தலைவராக உள்ளார். அவர் பாகிஸ்தானில் உள்ள ஆப்கானிய அகதிகளை ஆதரிப்பதிலும், 50,000க்கும் மேற்பட்ட ஆப்கானிய அகதிகளுக்கு உதவிய ஒரு முன்முயற்சியின் இணைத் தலைவராகவும், வறுமை மற்றும் பசியை எதிர்த்துப் போராடும் திட்டங்களில் பணியாற்றுவதிலும், ஆப்கானிய பெண்களின் கல்வி மற்றும் அதிகாரமளிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். சர்வீஸ் அபோவ் செல்ஃப் விருதையும், ரோட்டரி அறக்கட்டளையின் சிறப்புமிக்க சேவை விருது மற்றும் ரோட்டரி அறக்கட்டளையின் சிறப்பான சேவைக்கான சான்றையும் பெற்றுள்ளார்.

### பாட்ரிசியா மெர்ரிவெதர்-ஆர்ஜஸ்

RC *நேபர்வில், இல்லினாய்*




பட்ரிசியா மெர்ரிவெதர்-அர்ஜெஸ், லாப நோக்கமற்ற நிறுவனமான ப்ராஜெக்ட் பேஷண்ட் கேரின் நிர்வாக இயக்குநராக உள்ளார். மெர்ரிவெதர்-அர்ஜெஸ், 2002ல் ரோட்டரியில் இணைந்தார். அவர் ரோட்டரியின் கோவிட்-19 பணிக்

குழுவில், CoL மற்றும் கவுன்சில் ஆன் ரெசல்யூஷன்களின் பிரதிநிதியாகவும், RRFC ஆகவும், RIPR ஆகவும் மற்றும் சிகாகோவில் 2018 தலைவர்கள் அமைதி மாநாட்டின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

அவர் சர்வீஸ் அபோவ் செல்ஃப் விருது, அவென்யூஸ் ஆஃப் சர்வீஸ் விருது மற்றும் ரோட்டரி ஃபவுண்டேஷனின் சிறப்பான சேவைக்கான சான்றையும் பெற்றுள்ளார். அவரும், ரோட்டரி உறுப்பினரான அவரது கணவர் ஜார்ஜும், பால் ஹாரிஸ் சொசைட்டியின் உறுப்பினர்கள் மற்றும் பெரிய நன்கொடையாளர்கள்.

### லீனா J ஜெர்ஸ்காக்

RC *எனிபாக், நார்வே*



லீனா J ஜெர்ஸ்காக் நார்வே ஆயுதப்படைகளின் பாதுகாப்புப் பணியாளர்களின் நிர்வாகக் கட்டுப் பாட்டின் தலைவராக உள்ளார், அங்கு அவர் 1997 முதல் பணி புரிகிறார். 1997ல் ரோட்டரி சங்கத்தில் முதல் பெண்ணாகவும், அந்த நேரத்தில் அதன் இளைய உறுப்பினராகவும் ஜெர்ஸ்காக் இணைந்தார். அவர் TRFஐ ஒரு பெரிய நன்கொடையாளராக ஆதரிக்கிறார்.

### யோஷியோ சாட்டோ

RC *ஒகயாமா-சவுத், ஜப்பான்*



யோஷியோ சாட்டோ ஒரு சான்றளிக்கப்பட்ட பொது கணக்காளர் ஆவார், அவர் 1986 முதல் வரி மற்றும் பொது ஆலோசனை சேவைகளில் நிபுணத்துவம் பெற்ற தனது சொந்த ஆலோசனை நிறுவனத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

மாற்றுத்திறனாளிகள் சுதந்திரமான வாழ்க்கையை வாழ உதவும் அமைப்பான அசஹிகாவா வில்லாவின் உள்ளூர் கிளைக்கு ரோட்டரி சங்கம் மூலமும் சுயவமாகவும் தீவிரமாக ஆதரித்துள்ளார். நோட்ர டேமின் கசுகோ வாட்டனாபே மெமோரியல் ஸ்காலர்ஷிப் அறக்கட்டளையின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

1989 முதல், RC ஒகாயாமா-சவுத்தின் உறுப்பினரான சாட்டோ பல மாவட்ட மற்றும் தேசிய குழுக்களில் உள்ளார். மாவட்டம் 2690 ரோட்டரி அறக்கட்டளை தணிக்கைக் குழுவின் தலைவராகவும், ரோட்டரி ஜப்பான் நூற்றாண்டு நிர்வாகக் குழு மற்றும் RI ஜப்பான் யூத் எக்ஸ்சேஞ்ச் மல்டிடிஸ்டிரிக்ட் உறுப் பினராகவும் பணியாற்றியுள்ளார். மண்டல அளவில், அவர் RI இயக்குனருக்கான நியமனக் குழுவின் கூட்டமைப்பாளராகவும், பயிற்சி தலைவராகவும், ரோட்டரி நிறுவன அமர்வு குழு உறுப்பினர் மற்றும் RIPR ஆகவும் பணியாற்றியுள்ளார். ஜப்பானில் கல்வி ஆராய்ச்சி செய்யும் வெளிநாட்டு மாணவர்களை ஆதரிக்கும் ஜப்பானில் உள்ள ரோட்டரி மாவட்டங்களின் திட்டமான ரோட்டரி யோனியாமா நினைவு அறக்கட்டளையின் பங்களிப்பாளராகவும் உள்ளார்.


முக்கிய நன்கொடையாளர்கள் மற்றும் ஆர்ச் கிளம்ப் சொசைட்டி விழாக்களுக்கான மண்டல நிகழ்வுகள் உட்பட பல நிதி திரட்டும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதோடு, ஆர்ச் கிளம்ப் சொசைட்டி உறுப்பினர், பால் ஹாரிஸ் சொசைட்டி உறுப்பினர், நன்கொடையாளர் மற்றும் பெக்வெஸ்ட் சொசைட்டி உறுப்பினராக சாட்டோ தனிப்பட்ட முறையிலும் TRFஐ ஆதரிக்கிறார்.

## அறங்காவலர்கள்

### பாரி ராசின்

*அறங்காவலர், தலைவர்,* 2022–23

RC *ஈஸ்ட் நாசாவ், பஹாமாஸ்*



பாரி ராசின், பஹாமாஸ், நாசாவுவில் உள்ள டாக்டர்ஸ் ஹாஸ்பிடல் ஹெல்த் சிஸ்டத்தின் இயக்குனர் மற்றும் முன்னாள் தலைவர் ஆவார், அங்கு அவர் 38 வருட சேவைக்கு பிறகு ஓய்வு பெற்றார்.

1980 முதல் ரோட்டரியரான அவர் 2018–19ல் RI தலைவராக பணியாற்றினார், அப்போது அவர் ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங் களுக்கு இடையே நெருக்கமான கூட்டாண்மைக்காக வாதிட்டார் மற்றும் 2019 CoLல் ரோட்ராக்ட் சங்கங்களை RIயில் சேர்க்க RI உறுப்பினர் வரையறையை விரிவுபடுத்தும் நடவடிக்கையை முன்வைத்தார். RI இயக்குநர், ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர் மற்றும் துணைத் தலைவர், நிதி மற்றும் ஷேப்பிங் ரோட்டரியின் எதிர்காலக் குழுக்களின் தலைவர், RI பயிற்சித் தலைவர் மற்றும் கருத்தரங்கு பயிற்சியாளர் உள்ளிட்ட பல பதவிகளில் அவர் RIக்கு சேவை செய்து ள்ளார். 2010ல், பேரழிவுகரமான பூகம்பத்திற்குப் பிறகு ஹைத்தியில் ரோட்டரியின் பேரிடர் நிவாரண பணிகளை ரசின் ஒருங்கிணைத்தார். உலகெங்கிலும் உள்ள ரோட்டரி உறுப்பினர்களால் திரட்டப்பட்ட 6.5 மில்லியன் மூலம் ஹைத்தி முழுவதும் 105 நிவாரண மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை முடிப்பதை மேற்பார்வையிடுவதும் இதில் அடங்கும்.

சர்வீஸ் அபோவ் செல்ஃப் விருதை ராசின் பெற்றுள்ளார். அவரும் அவரது மனைவி எஸ்தரும் ரோட்டரி அறக்கட்டளையின் முக்கிய நன்கொடை யாளர்கள், பால் ஹாரிஸ் பெல்லோஸ் மற்றும் பால் ஹாரிஸ் சொசைட்டியின் உறுப்பினர்கள்.

### பரத் பாண்ட்யா

RC *போரிவ்லி, இந்தியா*




Dr பரத் பாண்ட்யா 1989ல் ரோட்டரியில் இணைந்தார். RID 3140ன் ஆளுநராக அவர் இருந்த ஆண்டில், அவரது மாவட்டம் TRFக்கு 2 மில்லியனுக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கியது, 2006–07ம் ஆண்டில் உலகளவில் சிறந்த பங்களிப்பாக அது இருந்தது. TRF மானியத்தால் நிதியளிக்கப்பட்ட நீர் மற்றும் துப்புரவுத்

திட்டங்கள் உட்பட ஏராளமான திட்டங்களை அவர் வழிநடத்தியுள்ளார்.

Dr பாண்ட்யா ஒரு பொது மற்றும் லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சை நிபுணர். அவரும் மகளிர் மருத்துவ நிபுணரான அவரது மனைவி மாதவியும், மும்பையில் தனியார் மருத்துவமனை நடத்துகின்றனர். அவர் 2019–21ல் RI இயக்குநராக பணியாற்றினார், மேலும் 2020–21ம் ஆண்டிற்கான அதன் பொருளாளராகவும் இருந்துள்ளார். பாண்டியா பிராந்திய RI உறுப்பினர் ஒருங்கிணைப்பாளராகவும், பயிற்சித் தலைவராகவும், ரோட்டரியின் உறுப்பினர் மற்றும் மாநாட்டு ஊக்குவிப்புக் குழுக்கள் மற்றும் இந்தியா போலியோ பிளஸ் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். அவர் RIன் சர்வீஸ் அபோவ் செல்ஃப் விருது மற்றும் TRFன் சிறந்த சேவைக்கான சான்று மற்றும் சிறப்புமிக்க சேவை விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார். அவரும் மாதவியும் அறக்கட்டளைக்கு முக்கியமான இரண்டாம் கட்ட நன்கொடையாளர்கள்.

### ஹோல்கர் நாக்

RC *ஹெர்சாக்டம் லாயன்பர்க்-மால்ன், ஜெர்மனி*



ஹோல்கர் நாக் 2020–21ல் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக பணியாற்றினார். 1992ம் ஆண்டு முதல் ரோட்டரி உறுப்பினராக இருக்கும் அவர், பொருளாளர், இயக்குனர், மதிப்பீட்டாளர், பல குழுக்களின் உறுப்பினர் மற்றும் தலைவர், CoL பிரதிநிதி, மண்டல ஒருங்கிணைப்பாளர், பயிற்சித் தலைவர் மற்றும் மாவட்ட ஆளுநராக பணியாற்றியுள்ளார்.

நாக் ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனமான நாக் K Gன் CEO ஆவார். 125 ஆண்டுகள் பழமையான குடும்ப வணிகமான நாக் என்டர்பிரைசஸ் இன் பங்குதாரராகவும் பொது மேலாளராகவும் இருந்தார். அவர் ராட்ஸேபர்க் நகரத்தின் சிவிக் அறக்கட்டளையின் நிறுவனராக மற்றும் கோல்ஃப்-கிளப் குட் கிராம்பெக்கின் தலைவராக பணியாற்றியுள்ளார். நாக், கார்ல் ஆடம் அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் தலைவர் ஆவார்.

நாக் மற்றும் அவரது மனைவி சூசான், ரோட்டரி அறக்கட்டளையின் மற்றும் பெக்வெஸ்ட் சொசைட்டியின் முக்கிய நன்கொடையாளர்கள்.

### மார்தா பீக் ஹெல்மேன்

RC *பூத்பே ஹர்பர், மேயின்*




மார்தா பீக் ஹெல்மேன் ஓட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் அறக்கட்டளையின் தலைவர் ஆவார், இது வளரும் நாடுகளில் பள்ளிகளை உருவாக்க உதவி, ஆபத்தில் இருக்கும் இளைஞர்களுக்கு உதவித்தொகைகளை வழங்குதல் மற்றும் ஹோலோகாஸ்ட்டில் உயிர் பிழைத்தவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குதல் போன்ற சேவைகளை செய்கிறது. வால்டர் அறக்கட்டளை 2021ல் மத்திய கிழக்கு அல்லது வட ஆபிரிக்காவில் ஒரு புதிய ரோட்டரி அமைதி மையத்திற்கு முழுமையாக நிதியளிக்கும் திட்டத்தை அறிவித்து வரலாறு படைத்தது. புதிய மையம் 2025ல் அதன் முதல் வகுப்பை வரவேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வால்டர் அறக்கட்டளை மற்றும் TRF இடையே 15.5 மில்லியன் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் ஹெல்மேன் முக்கிய பங்கு வகித்தார்.

ஹெல்மேன் RC பூத்பே ஆர்பரில் 2003ல் தனது கணவர் ஃபிராங்குடன் சேர்ந்தார். ஃப்ராங்க் ஜூன் 2022ல் இறந்தார். ஹெல்மேன் ரோட்டரியில் பீஸ் மேஜர் கிப்ட்ஸ் முன்முயற்சியின் தலைவராக பணியாற்றியுள்ளார். அவர் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கத் திற்கான பணிக்குழுவில் பணியாற்றியுள்ளார். TRFக்கு நிதி திரட்டுவதில் ஆர்வமுள்ள ஹெல்மேன், சாகுஜி தனகா ரோட்டரி பீஸ் பெல்லோஷிப்பை ஆதரிப்பதற்காக ஒரு குழுவை இணைத்தார், இது ரோட்டரி அமைதி மையங்களுக்கு 1 மில்லியன் நிதியை திரட்டியது. ஆளுநராக, அவர் அறக்கட்டளைக்கு மாவட்டம் 7780ன் வருடாந்திர கொடுப்பனவை 25 சதவீதம் அதிகரிக்க உதவினார். மார்தா மற்றும் ஃபிராங்க் ஹெல்மேன் ஆகியோர் அறக்கட்டளைக்கு முக்கிய நன்கொடையாளர்கள், பால் ஹாரிஸ் சொசைட்டி உறுப்பினர்கள் மற்றும் TRFன் லெகசி சொசைட்டியின் தொடக்க உறுப்பினர்கள்.

### கிரெக் இ பாட்

RC *எவர்கிரீன், கொலராடோ*



கிரெக் பாட் ஒரு ஓய்வுபெற்ற சான்றளிக்கப்பட்ட பொதுக் கணக்காளர் மற்றும் தனிப்பட்ட நிதி நிபுணர் ஆவார். அவர் 1979ல் தனது சொந்த நிறுவனத்தை தொடங்கினார். அவர் 1982ல் ரோட்டரியில் இணைந்தார், மேலும் RI துணைத் தலைவராகவும் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். இயக்குநர்கள் குழுவில் அவர் இருந்த காலத்தில், தணிக்கைக் குழு மற்றும் சட்ட ஆலோசனைக் குழு உள்ளிட்ட குழுக்களுக்குத் தலைவராக இருந்துள்ளார். அவர் செயல்பாட்டு மறுஆய்வுக் குழு மற்றும் TRFன் முதலீட்டுக் குழு போன்றவற்றிலும் பணியாற்றியுள்ளார். பயிற்சித் தலைவர், RIPR மற்றும் CoL பிரதிநிதி ஆகியவை அவர் வகித்த மற்ற பாத்திரங்களாகும்.

ரோட்டரி அறக்கட்டளையின் முக்கிய பரிசு ஆலோசகராக, பாட் தனது மாவட்டத்தின் மில்லியன் டாலர் டின்னர் ஏற்பாடு செய்தார், இதில் ஒரே இரவில் $3.1 மில்லியனுக்கும் அதிகமாக திரட்டப்பட்டது.

அவர் சர்வீஸ் அபவ் செல்ப்  விருது மற்றும் ரோட்டரி அறக்கட்டளையின் சிறந்த சேவைக்கான சான்றையும் பெற்றுள்ளார். அவரும் அவரது மனைவி பாம், ஆர்ச் க்ளம்ப் சொசைட்டி, பெக்வெஸ்ட் சொசைட்டி மற்றும் பால் ஹாரிஸ் சொசைட்டி ஆகியவற்றின் உறுப்பினர்கள் மற்றும் முக்கிய நன்கொடையாளர்கள் ஆவர்.■

# பிரேசில் நட்பு பரிமாற்றப் பயணம்

ரஷீதா பகத்

நம்மில் பலர் பிரேசில் நாட்டு காபியின் நறுமணம் மற்றும் சுவையால் கவர்ந்திழுக்கப் பட்டிருக்கிறோம். இப்போது உலகில் தரமான காபிக்கொட்டை களை உற்பத்தி செய்து வரும் பிரேசில் நாட்டுக்கு குஜராத்திலிருந்து இயற்கை உரத்தை தயாரித்து வழங்குவதற்காக இந்தியா-பிரேசில் ரோட்டரி சங்கத்தினர் கூட்டாண்மை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

இந்த தகவலை ரோட்டரி மாவட்டம் 3060க்கு உட்பட்ட, ரோட்டரி நட்புறவு பரிமாற்ற குழுவின் தலைவராக ஆறு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பிரபுல் திவானி தெரிவித்தார். இவர் வாபி ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர். கோவிட் தொற்றால் ஏற்பட்ட நீண்ட இடைவெளிக்குப் பிறகு, கடந்த மே மாதம் எங்கள் குழுவைச் சேர்ந்த 8 ரோட்டேரியன்களை பிரேசில் நாட்டில் உள்ள ரோட்டரி மாவட்டம் 4560க்கு இரண்டு வார பயணமாக அனுப்பும் வாய்ப்பு கிடைத்தது.

தொற்றுக்காலத்தில் கூட்டங்கள் நடத்துவதற்கும், பயணம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்கியதற்காக பிரேசில் நாட்டுக்கு நன்றி. திவானியின் நெருங்கிய நண்பரான மாவட்ட ஆளுநர் ஜோஸ் கார்லோஸ் அஸவேடோ (RID 4560), மற்றொரு மாவட்ட ஆளுநர் ப்ரெட்ஸன் சான்டோஸ் டாலி (RID 4590) இருவரும் பிரேசிலில் அகஸா டீ லிண்டோயா என்னுமிடத்தில் ரோட்டரி மாவட்ட மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இதில் கலந்து கொள்ள RID 3060





*RFE உறுப்பினர்கள் காபி வகைகளைப் பற்றி அறிந்துக் கொள்கின்றனர்.*



RFE குழு தலைவர் ஜிக்னேஷ் வசனி மற்றும் குழுவினர் பிரேசிலில் ஒரு காபி தயாரிப்பு நிறுவனத்தில்.

*ஒரு திட்டத்தின் மூலம் மருத்துவச் சேவைகளை மேம்படுத்த, RID 3060, பிரேசிலின் RID 4560 உடன் சர்வதேச கூட்டாண்மை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.*

மாவட்டத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த அழைப்பை மாவட்ட ஆளுநர் சந்தோஷ் பிரதான் ஏற்றுக்கொண்டிருந்தார்.

தொற்றுக் காலத்துக்கு முன் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் ஒரு குழுவாக, ரோட்டரி மாவட்டம் 3060 சார்பில் 2020ல் கோவாவில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டனர். இந்த நட்பு பரிமாற்றப் பயணம்தான் எங்கள் ரோட்டேரியன்கள் RID 4560, 4590 (பிரேசில்) மற்றும் RID 4455 (பெரு) ஆகிய இடங்களில் உள்ள ரோட்டேரியன்களுடன் மாவட்ட மாநாட்டின் மூலம் நட்புறவுகொள்ள உதவிகரமாக இருந்தது என்று திவானி தெரிவித்தார்.

இந்திய குழுவில் வசனியின் மனைவி கஷ்மீரா, கீர்த்தி குமார், தக்ஷா வாங்கடி, விஜயகுமார் மற்றும் சேத்னா மங்குகியா (இருவரும் சூரத் ஈஸ்ட் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த தம்பதிகள்), அனில் மற்றும் சுரேகா பாடீல் (இருவரும் துலே ரோட்டரி சங்கம்) ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் பின்னர் காபி

உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுக்கு ஆர்கானிக் காபிக் கொட்டை எது? சாதரண காபிக் கொட்டை எது என தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் காபிக் கொட்டையின் தரத்தை கண்டறியும் முறையும் விளக்கப்பட்டது.

**ரோட்டரி திட்டங்கள்**

மாநாட்டு நிகழ்வுகளுக்குப் பிறகு இந்திய ரோட்டேரியன்கள் பல்வேறு நகரங்களுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். அங்கு சுகாதாரம் மற்றும் எழுத்தறிவு திட்டச் செயல்பாடுகளை அவர்கள் நேரில் கண்டறிந்தனர்.

ஒரு திட்டத்தின் மூலம் மருத்துவச் சேவைகளை மேம்படுத்த, RID 3060, பிரேசிலின் RID 4560 உடன் சர்வதேச கூட்டாண்மை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. ஏற்கெனவே 73,214 டாலர் அனுமதிக்கப்பட்ட சர்வதேச மானிய உதவித் திட்டத்தை செயல் படுத்தவும் உள்ளது. இதில் வாபி ரோட்டரி

*மொழி, உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் கலாசார ரீதியில் மாற்றங்கள் இருந்துவந்த போதிலும் ஒரு ரோட்டேரியன் மற்றொரு ரோட்டேரியனால் அன்புடன் வரவேற்கப் படுகிறார். அப்போது தடைகள் மறைந்துவிடுகின்றன.*

சங்கத்தின் பங்களிப்பு 5,835 டாலர்களாகும் என்றார் திவானி. இந்த நிதியின் மூலம் காபிடோலியோ நகரில் அமைந்துள்ள சான்டா காஸா ஆப்






*இந்திய ரோட்டேரியன்கள் பிரேசிலில் ஒரு பள்ளிக்கூடத்தில்.*



கரியாட் மருத்துவ மனைக்கு கதிரியக்க கருவிகள் வழங்கப்பட உள்ளன. இந்த மருத்துவ மனையின் நிர்வாகத்தில் ரோட்டேரியன்களும் பங்கேற்றுள்ளனர். சர்வதேச மானிய உதவி RID 4560க்கு உட்பட்ட காபிடல் ரோட்டரி சங்கத்தின் ஆதரவுடன் "ஆரோக்கியமே வாழ்க்கை" திட்டத்தின் ஒரு பகுதியாக செயல் படுத்தப்படுகிறது.

மொழி, உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் கலாசார ரீதியில் மாற்றங்கள் இருந்து வந்த போதிலும் ஒரு ரோட்டேரியன் மற்றொரு ரோட்டேரியனால் அன்புடன் வரவேற்கப் படுகிறார். அப்போது தடைகள் மறைந்து விடுகின்றன. இவை தான் ரோட்டரி நட்புறவு பரிமாற்றத்தின் மூலம் நாங்கள் கற்றுக்கொண்ட பாடம் என்கிறார் திவானி பெருமையுடன்.■

# உறுப்பினர்கள் வளர்ச்சி, திட்டங்களில் சிறப்பிடம் பெறும் RID 3232

V முத்துகுமரன்

மாவட்ட மாநாடுகள், ரோட்டேரியன்களின் கூட்டு நுண்ணறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்தி ரோட்டரி சங்கங்கள் துடிப்பானதாக செயல்படவும், தங்களின் நடைமுறைகளைப் பகிர்ந்து கொண்டு சவால்களை எதிர்கொள்ளவும் தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது என்கிறார் RI இயக்குநர் A S வெங்கடேஷ். RID 3232 சார்பில் நடைபெற்ற சினெர்ஜி-22 மூன்று நாள் மாவட்ட மாநாட்டில் அவர் பேசினார். அவர் மேலும் கூறுகையில் ரோட்டரி மாநாடுகளில் கூட்டுறவு, பிணைப்பு மற்றும் மற்றவர்களுடனான தொடர்புகள் சிறப்பாக இருக்கும் நிலையில், நாம் எல்லாவற்றையும் தாண்டி நமது எண்ணங்களையும், நடைமுறைகளும் பகிர்ந்து கொண்டால் சங்கங்கள் வலுவானதாக இருக்கும் என்றார்.

RID 3232 (சென்னை சங்கங்கள்) மாவட்டத்தை பிரிப்பது குறித்து ரோட்டேரியன்கள் பலர் என்னிடம் கவலை வெளியிட்டனர். இது குறித்து அவர்களிடம் கருத்து வேறுபாடுகள் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. சென்னை மாவட்டத்தை இரண்டாக பிரிப்பதை எதிர்த்தோ அல்லது ஆதரித்தோ ஆக்கப்பூர்வமான கருத்துக்களை கூற யாராவது முன்வந்தால் அதைக் கேட்க தயாராக இருப்பதாக வெங்கடேஷ் கூறினார்.

RI துணைத் தலைவி நிக்கி ஸ்காட், RIPR, முன்னாள் மாவட்ட ஆளுநர் கிருஷ்ணன் V சாரிக்கு தன்னலமற்ற சேவைக்கான விருதை வழங்கி கௌரவித்தார். PDG சாரியுடன் தமக்கு உள்ள நீண்டகால தொடர்புகளை வெங்கடேஷ் நினைவுகூர்ந்தார். மாவட்ட ஆளுநராக



RIPR நிக்கி ஸ்காட், RID A S வெங்கடேஷ் மற்றும் DG J ஸ்ரீதர் மாவட்ட மாநாட்டில்.




PDG கிருஷ்ணன் V சாரி அவர்களுக்கு RIPR நிக்கி, (இடமிருந்து) நல்லம்மை மற்றும் PDG அபிராமி ராமநாதன், RID வெங்கடேஷ், DG J ஸ்ரீதர், நித்யா சாரி மற்றும் புனிதா ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் விருது வழங்குகிறார்.

சாரி இருந்த போது தான், இந்தியா சுதந்திரதின பொன்விழாவைக் கொண்டாடியது. அந்த ஆண்டு முழுவதும் மக்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை சாரி செயல்படுத்தினார். சாரி, தனது உரையில் 38 ஆண்டு காலம் ரோட்டேரியனாக செயலாற்றியதை நினைவுகூர்ந்தார். கொஞ்சும் தளர்வில்லாமல் தன்னுடன் தோள் கொடுத்து செயலாற்றிய நண்பர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

### நான்கு முன்னுரிமை பகுதிகள்

முதன் முறையாக இந்தியா வந்த போது பத்து ஆண்டுக்குளுக்கு முன்பு தில்லியில் நடைபெற்ற நோய்த்தடுப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்றத்தை RID 6450 (இங்கிலாந்து) மாவட்டத்தைச் சேர்ந்த RIPR நிக்கி நினைவு கூர்ந்தார். சங்கங்களின் வளர்ச்சிக்காகவும், சிறந்த சேவை திட்டங்களுக்காகவும் மாவட்ட ஆளுநர் J ஸ்ரீதரை அவர் பாராட்டினார்.

கடந்த ஆண்டு ரோட்டரி பேரிடர் மீட்பு மானியமாக 21 மில்லியன் டாலரும், கோவிட் மானியமாக 30 மில்லியன் டாலரும் அனுமதித்திருந்தது. ஒரு வகையில் கோவிட் தொற்று ரோட்டரி சங்கங்களின் செயல்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் செய்யப்பட்டதை விட கடந்த இரண்டு ஆண்டுகளில் மாற்றம் மிகப்பெரிய அளவில் நிகழ்ந்துள்ளது என்றார் நிக்கி.

### சாதனை, வளர்ச்சித் திட்டங்கள்

முன்னதாக DG ஸ்ரீதர், தனது மாவட்ட சங்கங்களின் செயல்பாடு தொடர்பான அறிக்கையை வெளியிட்டார். இதுவரை நாங்கள் ரூ.38.9 கோடி மதிப்பில் 5,130 சேவைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். இதன் மூலம் 10.18 லட்சம் மக்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளோம். எங்களது TRF நிதிப் பங்களிப்பு 1.7 மில்லியன் டாலராக உள்ளது. மாவட்டத்தில் 22 புதிய சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 168 உறுப்பினர்கள் உள்ளனர். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 8,213 ஆக உள்ளது. உறுப்பினர்கள் வளர்ச்சி 1 ஜூலை 2021 முதல் 14.8 சதவீதமாக உள்ளது. பெண் உறுப்பினர்களின் வளர்ச்சி 18.56 சதவீதமாக உள்ளது. 93.69 சதவீத உறுப்பினர்களை தக்க வைத்துள்ளோம். புதிதாக 1,300 ரோட்ராக்டர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இதையடுத்து அவர்களின் மொத்த எண்ணிக்கை 21,000க்கும் மேல் உயர்ந்துள்ளது. PDG J B காம்தாரின் நாடி குழுவுடன், சென்னை மாதவரம் ரோட்டரி சங்கத்தில் மாவட்டம் தனது முதல் கார்ப்பொரேட் சங்கத்தை உருவாக்கியுள்ளது.

பேரிடர் மேலாண்மை கையேட்டை RI தலைவர் சேகர் மேத்தா வெளியிட்டார். சென்னை பெருநகர மாநாகராட்சி யுடன் இணைந்து சங்கம், பல்வேறு கோவிட் நிவாரணப் பணிகளையும், வெள்ள நிவாரணப் பணிகளையும் செய்து வருகிறது. ஒரே நாளில் 48 சங்கங்கள் மூலம் 68,810 பேருக்கு தடுப்பூசி போட்டுள்ளது. இதற்கான செலவு ரூ.3.8 கோடி.

தொழில் திறன் வளர்ப்பு பயிற்சி மையங்கள் மூலம் ரூ.1.3 கோடி செலவில் 9,157 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கடந்த ஜூன் 30ம் தேதிக்குள் சென்னையில் உள்ள மருத்துவமனைகளில் 100 டயாலிசிஸ் சிகிச்சை கருவிகள் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 82 டயாலிசிஸ் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

மாவட்ட பயிற்சியாளர் PDG காம்தார், ஆலோசகரும் PDGயுமான அபிராமி ராமநாதன், மாநாட்டுத் தலைவர் வினோத் சாரோகி மற்றும் மாவட்டச் செயலர் ரவிசங்கர் ஆகியோர் பேசினர். “சினெர்ஜி 2022” 3,000 ரோட்டேரியன்கள், ஆன்கள் மற்றும் 500 ரோட்ராக் டர்கள் பங்கேற்றனர்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# ருவாண்டாவில் காமன்வெல்த் நாடுகள் மாநாட்டில் தலைவர் மேத்தா

ரோட்டரி செய்திக் குழு

கடந்த ஜூன் மாதம் RI தலைவர் சேகர் மேத்தா, ருவாண்டாவின் கிகாலியில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற ஒரு தனியார் நிகழ்ச்சியில் இளவரசர் சார்லஸுக்கு ரோட்டரி விருதை வழங்கி கௌரவித்தார். நிலைத்தன்மை மற்றும் பல்லுயிர் பெருக்கத்துக்கான அவரது அர்ப்பணிப்பு உணர்வை மேத்தா பாராட்டினார். சுற்றுச் சூழல் பாதுகாப்பில் ரோட்டரிக்கு உரிய பங்கு பணிகளையும் மேத்தா பகிர்ந்து கொண்டார். வேல்ஸ் இளவரசர், ரோட்டரி செய்துவரும் மனிதாபிமான சேவைகளைப் பாராட்டினார்.

1990ஆம் ஆண்டில் ரோட்டரி கௌரவ விருது அப்போதைய ரோட்டரித் தலைவரால் நிறுவப்பட்டு, நாடுகளின் தலைவர்கள் மற்றும் இதர முக்கியப் பிரமுகர்களுக்கு சர்வதேச கருத்தொற்றுமை மற்றும் நல்லெண்ணத்தில் அவர்களின் பங்களிப்பு களுக்காக வழங்கப்பட்டு வருகிறது.




*RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி ருவாண்டாவில் CHOGM சந்திப்பில் இளவரசர் சார்லஸிற்கு ரோட்டரி பேனரை அளிக்கின்றனர்.*




*WHO இயக்குனர் ஜெனரல் டெட்ராஸ் அதனாம் கெப்ரியேசஸ், பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை இணை நிறுவனர் மெலிண்டா கேட்ஸ் அவர்களுடன் RI தலைவர் மேத்தா.*

ருவாண்டாவில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் (CHOGM) மாநாட்டின் போது மேத்தா, போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் நீண்டகால பங்குதாரர்களான உலக சுகாதார நிறுவன இயக்குநர் ஜெனரல் டெட்ராஸ் அதனொம் கெப்ரியேசஸ் மற்றும் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் இணை நிறுவனர் மெலிண்டா கேட்ஸ் ஆகியோரையும் சந்தித்துப் பேசினார். ■

# சங்கங்களின் திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## ஏழைப் பெண்ணுக்கு ரோட்டரி வீடு



*RC வேலூர் சவுத் உறுப்பினர்கள் புதிதாக கட்டியுள்ள வீட்டின் முன்.*

RC வேலூர் சவுத் ஏழைப் பெண் ஒருவருக்கு ரூ.1.75 லட்சம் செலவில் வசதியான 180 சதுர அடி வீடு ஒன்றைக் கட்டித்தந்தது. சங்க உறுப்பினர்கள் ஒரு மாதத்துக்கான அவசியப் பொருட்கள், மளிகைப் பொருட்களைக் கொடையளித்துள்ளனர்.

## பெருமைப்படுத்தப்பட்ட விமானி



*மஹாச்வேதா சக்ரவர்த்தி PDG அஜய் அகர்வாலிடமிருந்து விருது பெறுகிறார்.*

போரால் பாதிக்கப்பட்ட உக்ரேனிலிருந்து 800 இந்திய மாணவர்களை அழைத்து வந்த 24 வயது இளம் பெண் விமானி மகாஸ்வேதா சக்ரபர்த்தி அவர்களுக்கு ஸ்வயம் சித்தா விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது RC கல்கத்தா மெட்ரோ.

## தீபக் சிகார்பூருக்குத் “தன்னலமற்ற சேவை” விருது



*TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா PDG தீபக் சிகார்பூருக்கு விருது வழங்குகிறார். உடன் (இடமிருந்து) DG Dr அனில் பர்மர், PDG Dr ஷைலேஷ் பாரிக்கர் மற்றும் IPDG பங்கஜ் ஷா ஆகியோரும் உள்ளனர்.*

RI இயக்குநர்கள் வாரியம் RC புனே சிவாஜி நகர், RID 3131 உறுப்பினர் PDG தீபக் சிகார்பூர் அவர்களுக்குத் “தன்னலமற்ற சேவை” விருது வழங்கியது. இவர் தன் மாவட்டத்தின் DRRFC மற்றும் RPICஆக சேவை புரிந்துள்ளார்.

## பெண்களுக்கு ஆற்றல் அளித்தல்



*சங்கத் தலைவர் சந்தோஷ் சேனாபதி (2021–22), PDG அஷ்வினி கர் மற்றும் Rtn பிஜோய்லஷ்மி கர் பயனாளிகளுடன்.*

RC புபனேஸ்வர், RID 3262, பெண்களுக்கு ஆற்றல் அளித்தல் முன்னெடுப்பின்கீழ், மூன்று பெண்கள் ஒரு நல்ல வருவாயைச் சம்பாதிக்க உதவும் நோக்குடன் தையல் இயந்திரங்களை நன்கொடையளித்தது.

# பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் உள்ள சவால்கள்

V முத்துகுமரன்



பச்சாதாபம் மற்றும் வலிமையை உருவாக்கும் திறன், நம்பிக்கையின் ஆற்றல், நிலையான கற்றல், கற்றலை மறத்தல் மற்றும் உங்கள் வசதியான மண்டலங்களுக்கு (comfort zone) வெளியே எப்போதும் வெற்றி பெற முயற்சிப்பது ஆகியவை சினெர்ஜி '22 என்ற தலைப்பில் RID 3232 மாவட்ட மாநாட்டில் RID A S வெங்கடேஷ் நடத்திய குழு விவாதத்தில் நான்கு வெற்றிகரமான பெண் தலைவர்கள் முன்வைத்த குணங்கள்.

**உத்வேகம் தரும் பெண்கள் தலைமை**

அமெரிக்காவில் தொடங்கிய பிளாக் லைவ்ஸ் மேட்டர் இயக்கம் எப்படி பின்னர் பல்வேறு பரிமாணங்களுடன் மற்ற நாடுகளுக்கும் பரவியதோ அதேபோல், "DEI (Diversity, equity and inclusion) என்ற இந்த கொள்கையை, பல்வேறு அமைப்புகளும் ஏற்றுக்கொண்டதால் முன்னிலை படுத்தபட்டுள்ளது. நம் 117 வயதான ரோட்டரிக்கு ஜூலை 1 முதல் ஜெனிபர் ஜோன்ஸ் முதல் பெண் தலைவராக பதவி வகிக்க உள்ளார், மேலும் அவரை ஆதரவளிக்க போகும் துணைத் தலைவர் RID நிக்கி ஸ்காட். RIல் உள்ள DEI பணிக்குழு இப்போது இனம், பாலினம், திறன் மற்றும் வயது பன்முகத்தன்மை ஆகியவற்றைப் பார்த்து, அமைப்பை வலுப்படுத்தவும் எதிர்கால சவால் களுக்குத் தயாராகவும் உள்ளது, என்று அவர் தெரிவித்தார்.

பெண் குழு உறுப்பினர்கள் கூறியவற்றின் சுருக்கம் இங்கே:

**கட்டிடக்கலை நிபுணர் பொன்னி கான்செசாவ்:** திருச்சி NITயில் சேர அட்மிட் கார்டு பெற்றிருந்தும், பெண் என்பதால் முதல்வர் சேர்க்கையை மறுத்து விட்டார். கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று நான் அவரை மிரட்டினேன்; ஒரு சட்ட வழக்கும் தொடுப்பதாக கூறினேன், எனது வழக்கு மிகவும் வலுவானது மற்றும் இந்திய அரசியலமைப்பு கூட என்னை ஆதரிக்கும் என்று எனக்குத் தெரியும். அந்தத் ஆண்டில் இருந்த 3,000 மாணவர்களில் நான் மட்டுமே பெண்.

நான் நியூயார்க்கில் உள்ள கார்னெல் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த போது, அந்த நிறுவனத்தில் சேர்ந்த முதல் இந்தியப் பெண் நான் தான். பின்னர், எனது நிறுவனத்திற் கான வணிக ஆர்டர்களை எனக்கு வழங்க ஆண்களை ஏற்றுக்கொள்ள வைப்பதும் மிகவும் கடுமையாக இருந்தது. சட்டம், மருத்துவம் அல்லது பிற தொழில்களைப் போலல்லாமல், கட்டுமானத் தொழிலில் "பிடிக்கத்தக்க காரணி" என்று ஒன்று இருக்கிறது. ஒரு லட்சியப் பெண் இந்தத் துறையில் விரும்பப்படுவதில்லை, அதேசமயம் ஆண்களுக்கு அத்தகைய வரம்புகள் இல்லை.




TRF அறங்காவலர் Dr பரத் பாண்ட்யாவை DG J ஸ்ரீதர், நிகழ்ச்சி தலைவர் வினோத் சரோகி மற்றும் RC மெட்ராஸ் தலைவர் மோகன் ராமன் முன்னிலையில், கௌரவிக்கிறார்.

**ஜெயா வைத்தியநாதன், தலைமை நிர்வாக அதிகாரி, BCT டிஜிட்டல்:** நான் கார்னலில் பொன்னிக்கு 10 வயது ஜூனியர். 1990களில், நான் குழந்தை பெற விரும்புகிறேன் என்று அறிவித்த போது, என் சகாக்கள், முதலீட்டு வங்கியாளர்கள், இது ஒரு தொழில் தற்கொலை என்று கூறினார்கள். பெண்கள் பணியிடத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதும்,



**இடமிருந்து:** *ஜெயா வைத்தியநாதன், ப்ரதீபா பட்சு, RI இயக்குனர் A S வெங்கடேஷ், பொன்னி கான்செஸ்ஸா மற்றும் ப்ரபா ஸ்ரீனிவாசன்.*

தொழிலில் விரும்பப்படுவதும் முக்கியம். அதிகமான பெண்கள் வேலைக்குச் செல்வது நிச்சயமாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை உயர்த்தும்.

மக்களவை மற்றும் ராஜ்யசபா உறுப்பினர்களில் 10 சதவீதம் பேர் மட்டுமே பெண்கள் என்பது அப்பட்டமான உண்மை, ஆனால் மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள். இடஒதுக்கீடு முறைக்கு நான் எதிரானவள் என்றாலும், நல்ல அரசியல் பிரதிநிதித்துவம் பெற, சட்டமன்றங்களில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வேண்டும். ஆண்களை விட பெண்கள் பல பணிகளில் சிறந்தவர்கள்.

**பிரதீபா பாட்சு, தலைவர், போஷ் சர்வீஸ் சொல்யூஷன், இந்தியா:** பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான சுயநினை வற்ற, நுட்பமான சார்புகள் இன்னும் உள்ளன, ஏனெனில் சமூக நிலைமைகளை உடைப்பது மிகவும் கடினம். பல ஆண்டுகளுக்கு முன்பு, ஜெர்மனியில் எனது மூன்று மாத தொழில் பயிற்சி மிகவும் கடினமாக இருந்தது, ஏனெனில் அங்கு பெண் மென்பொருள் பொறியாளர்கள் வேறு யாரும் இல்லை. நான் எனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கிய போது, வெறும் 150 உறுப்பினர்களைக் கொண்ட குழுவாக இருந்தது, ஆனால் இப்போது தயாரிப்பு மேம்பாட்டிற்காக உலகம் முழுவதும் 27,000 பணியாளர்களைக் கொண்ட பெரிய குழுக்கள் எங்களிடம் உள்ளன. படிநிலையில் ஏறும் போது சரியான அணுகுமுறைகள் மிகவும் முக்கியம், மேலும் நிலையான வளர்ச்சிக்கு விரைவாகக் கற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

**பிரபா சீனிவாசன், CEO, வென்ச்சுரா பரானாஸ்:** நான் என் நிறுவனத்தில் சேர்ந்தபோது, ஒரு பெண் தலைமை நிர்வாக அதிகாரியின் கீழ் பணியாற்ற ஆண்கள் தயாராக இல்லை. ஆனால் நாங்கள்அதனை பொருட்படுத்தாமல் முன்னோக்கி சென்றோம், இப்போது எங்கள் ஊழியர்களில் 40 சதவீதம் பேர் பெண்கள்.

மாநாட்டில் உரையாற்றிய TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா, வெற்றிக்கு எப்போதும் கடின உழைப்பு தேவை என்பதை ரோட்டேரியன்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும், மேலும் தங்கள் இலக்குகளை அடைய புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, கோவிட் தொற்றுநோய் எங்கும் இருளையும் விரக்தியையும் பரப்பியுள்ளது. "நீங்கள் செய்தித் தாள்களின் பக்கங்களைப் புரட்டினால், ரஷ்யா-உக்ரைன் போர், பயங்கரவாதம் மற்றும் பட்டினி போன்ற மோசமான செய்திகளால் நிரம்பியுள்ளன. ஆனால் இருண்ட காலங்களில் ரோட்டேரியன்களின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாதது, என்றார்.

புதிய உறுப்பினர்களைத் தக்கவைக்க அவர்களை ஈடுபடுத்துவது மிக முக்கியமானது, என்று கூறினார். வருடாந்திர நிதியத்தின் மூலம் உலகளாவிய திட்டங்களை இயக்குவதற்கு ரோட்டேரியன்களின் தன்னார்வ நன்கொடைகள் TRFக்கு முக்கியமானவை என்று பாண்ட்யா கூறினார். ரோட்டரி தனது உலகளாவிய மானியத் திட்டங்களுக்கு அதிக அளவிலான நிதிப் பொறுப்பையும் வெளிப்படைத்தன்மையையும் உறுதி செய்கிறது, பெறப்பட்ட அனைத்து நிதிகளில் 92 சதவீதம் சேவைத் திட்டங்களுக்காக செலவிடப்படுகிறது.

அனைத்து ரோட்டரியர்களும் TRFல் தொடர்ந்து முதலீடு செய்தால், நம் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுக்கு சிறந்த வாழ்க்கையுடன் பிரகாசமான எதிர்காலத்தை உறுதிசெய்ய முடியும். அறக்கட்டளை நல்லெண்ணத்தின் பாரம்பரியத்தை கொண்டுள்ளது, என்று மேலும் கூறினார். ■

# ரோட்டரி ஆளுநர்





**ராஜேஷ்குமார் சுரா**
*மைனிங்*, RC *பிகானிர்*, RID 3053

## புதிய உறுப்பினர்களை ஈர்க்க கூட்டுறவு நிகழ்வுகள்

கல்வி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில்தான் ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள ரோட்டரி சங்கங்கள் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. ராஜஸ்தான், இந்தியாவில் அதிக மாவட்டங்களைக் கொண்ட மாநிலம் என்பதால், ஏழை மக்கள், குறிப்பாக கிராமப்புற பகுதி மக்கள் பயன்பெற மாதம் 2 அல்லது 3 சுகாதார முகாம்கள் நடத்த திட்டமிட்டுள்ளோம் என்கிறார் ராஜேஷ் K சுரா. தற்போது எங்கள் மாவட்டத்தில் 75 சங்கங்கள் உள்ளன. இதில் 3,000-த்துக்கும் மேலானவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்கள் எண்ணிக்கையை 10 சதவீதம் அதிகரிக்க திட்ட மிட்டுள்ளோம். சமூகத்தில் நலிவுற்ற மக்கள் மற்றும் பெண்கள் திறன் வளர்ப்பு இந்த ஆண்டு எங்களின் முக்கிய நடவடிக்கையாக இருக்கும் என்றார் அவர்.

ரோட்டரி பற்றிய மக்களிடம் நல்லெண்ணத்தை ஏற்படுத்த TRF நிதியுதவி மூலம் செயல்படுத்தப் படும் பெரிய திட்டங்கள் குறித்து விளம்பரப் படுத்தி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்து வோம். தற்போது மொத்தம் 1,000 ரோட்ராக்டர்கள் உள்ளனர். கூடுதலாக 10 சதவீத உறுப்பினர்களைச் சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

TRF பங்களிப்பாக வருடாந்திர நிதியாக 2,00,000 டாலர் வழங்க திட்டமிட்டுள்ளோம் என்றார். 2005ம் ஆண்டு பிகானீர் ரோட்டரி சங்கத் தலைவராக சசி மோகன் முந்த்ரா பதவியேற்றபோது சுரா ரோட்டரியில் இணைந்தார்.■

**அனில் அகர்வால்**
*பிரின்டிங் பேக்கேஜிங்*, RC *பிரயாக்ராஜ்*, RID 3120

## ஏழு பகுதிகளில் கவனம்

அனில் அகர்வால், தமது மாவட்டத்தில் உள்ள 10 சங்கங்களை மூடிவிட விரும்புகிறார். இந்த சங்கங்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 12க்கும் குறைவாக உள்ளது மட்டுமல்லாமல், கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் பெயர் சொல்லக்கூடிய எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்த வில்லை என்பது தான் முக்கிய காரணம். மாவட்டத்தில் 91 சங்கங்களில் 3,900 ரோட்டேரியன்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த எண்ணிக்கையை 10 சதவீதம் உயர்த்த அவர் திட்டமிட்டுள்ளார். ரோட்டரி செயல்படாத இடங்களில் புதிதாக 20 சங்கங்களை நிறுவவும் அவர் உறுதிபூண்டுள்ளார்.

பெயரளவில் 64 ரோட்ராக்ட் சங்கங்கள் இருப்பதாக கூறப்பட்டாலும் அவற்றில் 22 மட்டுமே செயல்பட்டு வருகின்றன. ரோட்ராக்டர்களின் மொத்த எண்ணிக்கையை மூன்று மடங்காக அதாவது, 600 ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். எங்கள் சங்கம் ஏழு முக்கியமான துறைகளில் கவனம் செலுத்த உள்ளது. இரத்த தானம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள், மாநில சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஒவ்வொன்றும் 2,500 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள 15 வனக்காடுகள் அமைக்கப்படும். TRF நிதிப் பங்களிப்பாக 1,00,000 டாலர்கள் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

அகர்வால், இன்டராக்டராக இருந்து படிப்படியாக உயர்ந்தவர். 2005–2006ல் நான் ரோட்டரியில் சேர்ந்ததில் என் தந்தைக்கும் முக்கிய பங்கு உண்டு என்று நினைவுகூர்கிறார் அனில் அகர்வால். ■

# ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





**ஜீனேந்திர ஜெயின்**
*குடிநீர் குழாய்கள், RC போபால் ஷாபுரா, RID 3040*

## மாவட்டம் முழுவதும் மருத்துவ முகாம்கள்

ஜீனேந்திர ஜெயினுக்கு உள்ள முக்கிய சவால்களில் ஒன்று தமது மாவட்டத்தில் உள்ள 2,700க்கும் மேலான ரோட்ராக்டர்களைத் தக்கவைத்துக் கொள்வதாகும். ஏனெனில், ரோட்ராக்ட் சங்கங்களுக்குகான நிலுவைத் தொகைகள் குறித்த புதிய விதிகளைத் தொடர்ந்து அவர்களில் சிலர் வெளியேறலாம். தற்போது மாவட்டத்தில் 112 ரோட்டரி சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 2,800 உறுப்பினர்கள் உள்ளனர். மேலும் இந்த ஆண்டு புதிதாக 8 சங்கங்களை நிறுவவும், உறுப்பினர்கள் எண்ணிக்கையை 20 சதவீதம் அதிகரிக்கவும் திட்ட மிட்டுள்ளதாக அவர் கூறினார்.

மாவட்டம் முழுவதும் ஐம்பதுக்கும் மேலான கண்தான முகாம்கள் நடத்தப்படும். மத்தியப்பிரதேசத்தில் மூன்று டயாலிஸிஸ் மையங்கள் அமைக்க (1,00,000 டாலர்கள்) சர்வதேச மானிய உதவிக்கு விண்ணப்பிக்க திட்டமிட்டுள் ளோம். கடந்த 10 ஆண்டுகளில் மாவட்ட சங்கங்கள் மூலம் பல நோக்கு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

TRF நிதிப் பங்களிப்பு பற்றி கூறுகையில், இலக்கை அடைவது கடினமான சவாலாகும். ஆனால், இந்த ஆண்டு இதற்கான தொகை நிச்சயம் 1,30,000 டாலர்களுக்கு குறைவாக இருக்காது என்றார். மூத்த சகோதரரும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான நரேந்திர ஜெயினின் செயல்களால் ஈர்க்கப்பட்டு 2012ல் நான் ரோட்டரியில் சேர்ந்தேன் என்றார் ஜீனேந்திர ஜெயின்.■

**Dr துஷ்யந்த் சௌதுரி**
*பொதுநல மருத்துவர், RC ஜம்முதாவி, RID 3070*

## மார்பக புற்றுநோய் கண்டறியும் நடமாடும் வாகனம்

மாவட்டத்தில் சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டு போவதைவிட ரோட்டேரியன்களின் தரம் முக்கியமானது என்கிறார் டாக்டர் துஷ்யந்த் சௌதுரி. தற்போது தனது எல்லைக்குள் 130 ரோட்டரி சங்கங்கள் இருப்பதுடன் திருப்தி அடைகிறார் அவர். பஞ்சாப், இமாசலம், ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசம் மற்றும் லடாக் உள்ளிட்ட பகுதிகளில் மொத்தம் 3,600 உறுப் பினர்கள் செயல்பட்டு வருகின்றனர் என்கிறார் சௌதுரி. ரோட்ராக்ட் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 50 சதவீதம் அதிகரித்து அதன் எண்ணிக்கையை 500 ஆக உயர்த்தவும் நடவடிக்கைகள் எடுத்துவருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஒருகோடி ரூபாய் சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் மூலம் ஜம்முவில் ரோட்டரி கண் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது. மார்பக புற்றுநோய் கண்டறிவதற்காக ரூ.90 லட்சத்தில் நடமாடும் மார்பக ஊடுகதிர் படக் கருவி அடங்கிய வேன் அறிமுகப்படுத்த உள்ளார். TRF நிதிப் பங்களிப்பாக 3,00,000 டாலர்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

1997ம் ஆண்டு, ஜம்முவில் உள்ள RAC அரசு மருத்துவக் கல்லூரியின் பட்டயத் தலைவராக ரோட்டரியில் சேர்ந்தார் Dr சௌதுரி.■

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# எதிர்க்காலத்திற்காக உங்கள் ஆரோக்கியத்தை கவனியுங்கள்

பரத் — ஷலன் சவூர்


அன்பான நண்பர்களே, நாம் ஒவ்வொருவரும் நம் உடலையும் மனதையும் எதிர்காலத்திற்காக உறுதிப்படுத்த வேண்டும், இதனால் பிற்காலத்தில் மன அழுத்தம், காயம் அல்லது புறக்கணிப்பு ஆகியவற்றால் எந்த நோயும் ஊடுருவ முடியாது. கவனமான இன்று, கவலையற்ற நாளை என்பது நமது கொள்கையாக இருக்க வேண்டும். பேஸ்பால் வீரர் மிக்கி மேன்டில் கேலியாக கூறியதை போல, 'நான் இவ்வளவு காலம் வாழப் போகிறேன் என்று எனக்குத் தெரிந்திருந்தால், நான் என்னை நன்றாக கவனித்திருப்பேன்' அவர் 63 வயதில் காலமானார்.

தயவுசெய்து உங்களை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள். உங்கள் உட்கொள்ளலைப் கவனிக்கவும், சுறுசுறுப்பாகவும், விழிப்புடனும் இருக்க வேண்டும். பல ஆண்டு களுக்கு முன்பு, நாங்கள் இருவரும் கடுமையான அமிலத்தன்மையால் அவதிப்பட்டோம். அது மிகவும் சங்கடமாக இருந்தது. எங்கள் குடும்ப மருத்துவர் கேட்டார், "காலையில் என்ன சாப்பிடுகிறீர்கள்?" "காபி" என்றோம். "ஒரு கோப்பை தேநீருடன் நாளை தொடங்குங்கள்" என்றார். அதை செய்தோம். மாயஜாலம் போல் வேலை செய்தது. இது போன்ற சிறிய மாற்றங்கள் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

### நீர் வழி

சமீபத்தில், ஒரு இயற்கை மருத்துவர் ஒரு நேர்காணலில், "தலைவலிக்கு ஆளானால், காலையில் முதலில் ஒரு கப் வெதுவெதுப்பான நீரை அருந்த வேண்டும். நீங்கள் டீ அல்லது காபி பிறகு சாப்பிடலாம்." என்று கூறினார். அன்றிலிருந்து எந்த படபடப்பும் இல்லை. தண்ணீர் ஒரு சிறந்த மருந்து. காலையில் சூடாக குடிக்கவும். மற்றும் நாள் முழுவதும் அடிக்கடி இரண்டு சிப் குடிக்கவும். சிறுநீர் தொற்று மற்றும் கோளாறுகளுக்கு பெரும்பாலும் டிஹைட்ரேஷன் காரணமாகும். உங்கள் உடலின் அளவுக்கு குடிப்பதன் மூலம் உங்கள் சிறுநீர் பாதையை உறுதிப்படுத்தலாம். அதிகமான தண்ணீர் அமிலத்தன்மையை ஏற்படுத்தும். எனவே, போதும் என்ற அளவும் இங்கே முக்கியமானது. நம்மில் சிலருக்கு ஒரு நாளைக்கு ஒரு லிட்டர், சிலருக்கு இரண்டு அல்லது அதற்கு மேல் தேவைப்படும். உங்கள் உடலின் தேவையை கண்டறியவும்.

உதவிக்குறிப்பு: தாகம் எடுக்கும் வரை காத்திருக்க வேண்டாம். விடுமுறை அல்லது வணிகப் பயணத்தின் போது கூட குடித்துக் கொண்டே இருங்கள். வெளியூர் பயணத்திற்குப் பிறகு பலருக்கு UTI (சிறுநீர் பாதை நோய்த்தொற்று) இருப்பது கண்டறியப்பட்டுள்ளது, அங்கு அவர்கள் தண்ணீரைத்



தவிர எல்லாவற்றையும் உட்கொண்டுள்ளனர்!

**உங்கள் குடலை மகிழ்ச்சியாக வைத்திருங்கள்**

ஆரோக்கியமான குடல் ஆரோக்கியமான மனதை உருவாக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். நமது நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதியான என்டெரிக் நரம்பு மண்டலம் நமது முழு செரிமானப் பாதை வழியாக - உணவுக்குழாய் முதல் குடல்கள் வழியாக ஆசனவாய் வரை செல்கிறது. குடல், மூளை, நரம்பு மண்டலம், ஹார்மோன்கள் மற்றும் நோயெதிர்ப்பு அமைப்பு ஆகியவற்றுக்கு இடையே எப்போதும் ஒரு மாநாடு நடக்கிறது. குடலில் உள்ள நுண்ணுயிரிகள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைக் கட்டுப்படுத்துகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். மகிழ்ச்சியற்ற குடல் மலச்சிக்கல், புண்கள், மனச் சோர்வு, பார்கின்சன் மற்றும் அல்சைமர் நோய்களுக்கு வழி வகுக்கும்.

நீங்கள் உட்கொள்ளும் உணவை கண்காணியுங்கள். கண்டதையும் உண்ணாதீர்கள். உங்களுக்கு ஏதேனும் உணவு ஒவ்வாமை இருந்தால், அதை புறக்கணியுங்கள்.

இது படிப்படியாக உடலை பலவீனப் படுத்துகிறது மற்றும் அனைத்து வகையான நோய்களுக்கும் வழிவகுக்கிறது.

**இந்த உணவுகளை அருந்துங்கள்:**

- பீன்ஸ், ஓட்ஸ், பீட்ரூட், சக்கரை வள்ளி கிழங்கு, வெண்டைகாய் - இவை நார்ச்சத்து நிறைந்தது மற்றும் குடலை திறம்பட சுத்தப்படுத்துவதை உறுதி செய்கின்றன.
- தயிர், பூண்டு, வெங்காயம், அவக்காடோ, கிராம்பு, இஞ்சி ஆகியவை குடலில் உள்ள நல்ல பாக்டீரியாக்களை அதிகரிக்கும். கேரட், சுரைக்காய், பீட்ரூட் ஆகியவை நல்ல பாக்டீரியாவை ஆதரிக்கும் பாலிபினால்களை உற்பத்தி செய்கின்றன.

**நன்றாக சாப்பிடுவது**

அதிகமாக சாப்பிடுவது உடல் பருமனுக்கு வழிவகுக்கும், உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய் போன்ற அதனுடன் தொடர்புடைய கோளாறுகளை ஏற்படுத்தும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. சாப்பிடும் போது அமைதியாகவும் நிதானமாகவும் இருங்கள். உற்சாகமாக இருக்கும் போது, நாம் அதிகமாக அல்லது மிக வேகமாக சாப்பிடுகிறோம். சோகமாக இருக்கும் போது, நாம் குறைவாக சாப்பிடலாம் அல்லது சாப்பிடாமல் இருக்கலாம்.

உணவில் உங்களுக்கு எது பொருத்தமானது மற்றும் எது பொருந்தாது என்பதை கண்டறியுங்கள். உதாரணமாக, சமீபத்தில், சோளம் எனது அமைப்புக்கு பொருந்தாது என்று கண்டுபிடித்தேன். அதனால் அதை தவிர்த்து விட்டேன். நார்ச்சத்து உட்கொள்வதில் கூட நாம் கவனமாக இருக்க வேண்டும். வெள்ளை அரிசியை விட பிரவுன் அரிசியைத் தேர்ந்தெடுக்க மருத்துவ ஆலோச னை பெற்ற ஒரு நண்பர், இரண்டு நாட்களில் அவரது வயிற்றில் வீக்கம் மற்றும் வலியை ஏற்படுத்தியது. டாக்டரின் ஆலோசனையின் பேரில், "மிதமான அளவு-" வெள்ளை அரிசி க்கு திரும்பிய அவர், இப்போது முற்றிலும் ஆரோக்கியமாக இருக்கிறார்.

**மகிழ்ச்சியான ஹார்மோன்களால் உற்சாகம்**

உடற்பயிற்சி என்டோர்பின் என்ற ஹார்மோன்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நமது குடலை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறது. விறுவிறுப்பாக நடப்பது, தீவிரமாக உடற்பயிற்சி செய்வது, படிக் கட்டுகளில் ஏறுவது அல்லது நடனமாடுவது இந்த சக்தி வாய்ந்த ஹார்மோன்களை அதிகரிக்கிறது இவை இயற்கையான வலி நிவாரணிகள், அசௌகரியத்தைக் குறைத்து நமது உற்சாகத்தை அதிகரிக்கும்.

திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் வயிறு மற்றும் தரைப் பயிற்சிகள். செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் பல்வேறு கால் மற்றும் கை ஊசலாட்டங்கள். இந்த உடற்பயிற்சிகள் செய்வதன் மூலம் நான் எனது உற்சாகத்தை அடைந்தேன். வாரம் முழுவதும், நான் ஒரு அமர்வில் 40 நிமிடங்கள் ஸ்டேஷனரி சைக்கிள் ஓட்டுகிறேன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், புல்லிகளில் உடற்பயிற்சி செய்கிறேன். அவை எனது உடல் மற்றும் மன நலனை மேம்படுத்தியுள்ளது.

**திறனுடன் இருக்க நிலையாக இருங்கள்**

கோவிட் சூழல் அனைவரின் வாழ்க்கையிலும் நிறைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மாற்றம் அசௌகரியத்தை ஏற்படுத்தலாம் மற்றும் எதிர்மறை மாற்றங்கள் நம்மை ஸ்தம்பிக்க வைக்கலாம்.

"இதுவும் கடந்து போகும்" என்ற அற்புதமான சொற்றொடரை நினைவில் கொள்ளுங்கள். நாம் தற்போது அனுபவிக்கும் எந்த சூழ்நிலையும் நீடிக்காது. அப்படித் தான் வாழ்க்கை இயங்குகிறது. நல்ல காலம் நீடிக்கும் போது அதை அனுபவிப்பதும், கெட்ட நேரம் வரும்போது பொறுமையாக இருப்பதும் தான் வழி.

உங்கள் திட்டங்களை அடிக்கடி மாற்ற வேண்டாம் - இது எதிர்மறையானது. உங்களின் உணவு அட்டவணை, உணவு-நேரம், வழக்கமான உடற்பயிற்சிகள், சூடான குளியல், தியானம், தூக்கம், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடுதல், என உங்களைச் சீராக வைத்திருக்கும் அனைத்தையும் செய்யுங்கள். உங்கள் தனிப்பட்ட வழக்கத்துடன் உங்கள் சொந்த அன்றாட வாழ்க்கை யில் தேர்ச்சி பெறுங்கள். தற்காலம் மற்றும் எதிர்காலத்திற்காகவும் உங்கள் ஆரோக்கியம் மற்றும் வாழ்வை கவனியுங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# RI தெற்காசியா அலுவலகத்திலிருந்து செய்தி

**உலகளாவிய மானிய பங்களிப்பு**
உலகளாவிய மானியங்களுக்கான (GG) பணப் பங்களிப்புகள் அதன் ஒப்புதலுக்கு முன் அனுப்பப்படக் கூடாது. விண்ணப்பம் அங்கீகரிக்கப்படாவிட்டால், பங்களிப்புகள் வருடாந்திர நிதி-பங்கீட்டு கணக்கில் வைக்கப்படும், அதன் பிறகு மறு ஒதுக்கீடு செய்ய முடியாது. அனைத்து GG பங்களிப்புகளும் திரும்பப்பெற முடியாத TRFக்கான பங்களிப்புகளாகக் கருதப்படுகின்றன. மேலும் அவற்றை திரும்பப் பெறமுடியாது.

**மாவட்ட செயல்பாட்டு மானியங்கள்**
தொற்றுநோய்களின் போது, அறக்கட்டளை சமூகங்களுக்கு உதவி வழங்குவதற்காக மாவட்டங்களுக்கு பேரிடர் செயல்பாட்டு மானியத்தை அங்கீகரித்து வழங்கியது. இந்த மானியங்களுக்கான இறுதி அறிக்கையை மாவட்டங்கள் அனுப்புமாறு கோருகிறது. அறிக்கைகள் கைமுறையாக தாக்கல் செய்யப்பட வேண்டும், இவை மானிய மையத் தில் இருக்காது. அறிக்கையிடல் தேவைகள் மற்றும் தேவையான வடிவங்கள் *http://www.rotaryfoundationindia.org/reporting/*ல் காணலாம்.

**ரோட்டரி அறக்கட்டளைக்கு (இந்தியா) பங்களிப்புக்கான வழிகாட்டுதல்கள்**
**காசோலை/வரவோலை மூலம்**

- ➢ பங்களிப்புப் படிவம்/கவரிங் குறிப்பு – நன்கொடையாளர் விவரங்களை (பெயர், உறுப்பினர் ஐடி, நிதி பதவி மற்றும் பான்) குறிப்பிடும் படிவம்
- ➢ PAN அனைத்து பங்களிப்புகளுக்கும் கட்டாயமாகும்.
- ➢ நிறுவனக் கடிதம் – நன்கொடையாளரின் சுய/குடும்பக் கட்டுப்பாட்டில் உள்ள வணிகம்/டிரஸ்ட் கணக்கிலிருந்து பங்களிப்பு செய்யப்பட்டிருந்தால் அவசியம்

**Rotary.org வழியாக**

- டூப்ளிகேட் ID உருவாக்குவதைத் தவிர்க்கவும், உங்கள் சங்கத்தின் கீழ் உங்கள் பங்களிப்பை உரிய நேரத்தில் செலுத்த *My Rotary* உள்நுழைவைப் பயன்படுத்தவும்.
- உங்களிடம் *My Rotary* உள்நுழைவு இல்லையென்றால், ஒன்றை உருவாக்கவும் அல்லது ஆன்லைனில் பங்களிப்பு செய்யும் போது உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தவும்
- குடும்ப அறக்கட்டளை/நிறுவனத்தின் பங்களிப்புகள் இருந்தால், காசோலை/வங்கி வரைவோலை RISAOக்கு அனுப்பவும். *My Rotary* மூலம் இந்தப் பங்களிப்புகளைச் செய்யாதீர்கள்
- உங்கள் 80G ரசீதில் சரியான PANஐ உறுதி செய்வதற்காக சமர்ப்பி என்பதைக் கிளிக் செய்வதற்கு முன் உங்கள் PANஐ மீண்டும் சரிபார்க்கவும்

**கற்றல் மைய படிப்புகள்**
*Learning Center* இது உங்கள் தலைமைப் பதவியில் உங்களுக்கு உதவ பல படிப்புகளை வழங்குகிறது. நன்கொடையாளர்களைக் கண்டறிந்து வளர்ப்பதற்கான உதவிக்குறிப்புகளுக்கு, *Fundraising Basics* பார்க்கவும். உங்கள் சகாக்கள் இடுகையிட்ட சிற்றேடு யோசனைகள், குறிப்பு வழிகாட்டிகள், பவர்பாயிண்ட் விளக்கக்காட்சிகள் மற்றும் நிதி திரட்டும் கருவிகளைக் கண்டறிய *Foundation Giving learning* தலைப்பைப் பார்வையிடவும்.

**ரோட்டரியின் உரிமம் பெற்ற விற்பனையாளர்கள்**
எங்கள் விற்பனையாளர்களின் பட்டியலை *https://my.rotary.org/en/member-center/licensed-vendors*இல் பார்க்கலாம். உரிமம் பெறாத விற்பனையாளர்களை பற்றி rilicensing@servicesrotary.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு புகார் அளிக்கலாம்.

| Licensed Vendors | Address |
|---|---|
| Better Services | Office #350, A To Z Industrial Estate, Ganpatrao, Kadam Marg Lower Parel (W) Mumbai 400013 |
| Mohan Plastics | 63, Roshanara Plaza Complex Roshanara Road New Delhi 110007 |
| Tej Brothers | 4806/24, Bharat Ram Road Darya Ganj, New Delhi 110002 |
| Sacheti & Co | Shiwaji Nagar, Opposite Jain Temple, Kishangarh 305801 Rajasthan |
| Naveen Enterprises | No 11, Naveen Mansion 11th Main Road, Aurobindo Marg, 5th Block, Jayanagar Bengaluru 560041 |
| BK AD Gifts | 130 C, Kottur Road Palayamkottai, Tirunelveli Tamil Nadu 627002 |

RI உரிமக் குழுவை *rilicensingservices@rotary.org* அல்லது 847-866-4463 இல் தொடர்பு கொள்ளவும். நீங்கள் *rajesh.anand@rotary.org* என்ற முகவரியில், சட்ட மற்றும் பணிமேலாளர் ராஜேஷ் ஆனந்தை தொடர்பு கொள்ளலாம்.

# 5,500 பேரைப் பரிசோதித்த பருச் மருத்துவ முகாம்

ரோட்டரி செய்திக்குழு

RC பருச், RID 3060 மற்றும் இந்திய மருத்துவக் கழகம், இந்தியப் பல் மருத்துவக் கழகம், பருச் ஹோமியோபதிக் கழகம் ஆகியோர் இணைந்து ஒரு மிகப் பெரிய மருத்துவ, அறுவைச் சிகிச்சை முகாம் நடத்தினார்கள். இதில் 5,500 நலிந்த மக்களுக்குப் பொது நோய்கள் உள்ளனவா என்று பரிசோதிக்கப் பட்டது. தேவையுள்ளோருக்கு மருந்துகள் வழங்கப்பட்டன.

இந்த முகாமின் தொடக்க விழாவில் DG சந்தோஷ் ப்ரதான், AG துஷார் ஜின்வல்லா, மாவட்ட ஆட்சித் தலைவர் துஷார் சுமெரா, SP (பருச்) Dr லீனா படீல், கூட்டாளர் அமைப்புகளில் அலுவலர்கள் பங்கேற்றார்கள். “இந்த முகாமின் முதன்மை நோக்கம், தேவையுள்ள மக்களுக்கு இலவச அறிவுறுத்தல்கள், மருந்துகளை வழங்குவது, தேவைப் பட்டால் சிறப்புச் சிகிச்சை அல்லது அறுவைச் சிகிச்சைக்கு அவர்களை அனுப்புவது. அறுவைச்சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட மக்களுக்குச் சரியான நேரத்தில் நலப்பராமரிப்பு கிடைப்பதை நாங்கள் உறுதி செய்கிறோம்’’ என்றார் ரோட்டரியன், நிகழ்ச்சித் தூதுவர், பருச் MLAஆன துஷ்யந்த் படேல்.

இந்த முகாமில் வெவ்வேறு சிறப்புத் துறைகளைச் சேர்ந்த சுமார் 215 மருத்துவர்கள், 300 நலப் பணியாளர்கள் நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்தார்கள். “7 ஆண்டு களுக்கு முன், ஏழைகளுக்கு நலப்பராமரிப்பின் முக்கியத் துவத்தை உணர்ந்து நாங்கள் இந்த ஆண்டு மருத்துவ முகாமைத் தொடங்கினோம். ஒவ்வொரு முகாமுக்குப் பிறகும், யார் யாருக்கு அறுவைச் சிகிச்சைகள் செய்யவேண்டும் என்று நாங்கள் பதிவு செய்கிறோம், நோயாளிகளை உரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பிச் சிகிச்சை கிடைக்கச் செய்கிறோம்’’ என்றார் சங்கச் செயலாளர் (2021–22) ரச்னா பொடார்.



DG *சந்தோஷ் ப்ரதான் (வலது) மற்றும் அவர் மனைவி சுனேத்ரா முகாமில் குழந்தைகளுக்கு சத்துணவு பொதிகள் வழங்குகின்றனர்.*

### நிகழ்ச்சிக்கு முந்தைய விளம்பரங்கள்

இந்த முகாமுக்குமுன் ஒரு மாதத்துக்குச் சமூக ஊடகங்களில் விளம்பரப் பரப்புரை நடைபெற்றது, சிற்றேடுகள் வழங்கப்பட்டன. RCC பருச் தன்னார்வலர்கள் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று முகாமில் இலவச மருத்துவ சிகிச்சை கிடைக்கிற செய்தியைப் பரப்பினார்கள் என்கிறார் சங்கத் தலைவர் Dr விக்ரம் பிரேம்குமார்.

குழந்தை மருத்துவர்கள் குழு ஒன்று குழந்தைகளைப் பரிசோதித்தது. போதுமான ஊட்டச் சத்து இல்லாத குழந்தைகளுக்குச் சுமார் ஒரு மாதத்துக்குப் போதுமான ஊட்டச்சத்துப் பொதிகள் சுமார் 1,500ம், பல வைட்டமின் துணைப் பொருட்களும் வழங்கப்பட்டன. “நாங்கள் இதுவரை 2,150 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துப் பொதிகளை வழங்கியுள்ளோம், இந்த ஆண்டுமுழுக்க அவற்றை வழங்கத் திட்டமிட்டுள்ளோம்’’ என்கிறார் இவர்.

“Rtn துஷ்யந்த் படேல், குஜராத் அரசின் துணைத் தலைமைக் கொறடா, மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவ ஊழியர்களுடைய திறமை, நேரம், சேவைக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம்’’ என்றார் நிகழ்ச்சித் தலைவர் அனிஷ் பரிக்.

இந்த முகாமில் மாஹிபென் சோலங்கி என்பவருக்குச் சக்கர நாற்காலி பரிசளிக்கப்பட்டது. “முன்பு என் பெற்றோர் என்னைத் தூக்கிச் சென்றார்கள், இனிமேல் நான் அவர்களுக்குச் சுமையாக இல்லாமல் என் விருப்பப்படி வீட்டிலிருந்து பள்ளிக்கும் மற்ற இடங்களுக்கும் செல்வேன்’’ என்றார். ■

# வாழ்க்கைகளை மாற்றும் ரோட்டரியின் பணி

V முத்துகுமரன்

இந்தியாவிலுள்ள 39 மாவட்ட ஆளுநர்களும் ஒரே ஆண்டில் (2021–22) 20,000 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து மிகச் சிறந்த பணியாற்றியுள்ளார்கள். முந்தைய 10 ஆண்டுகளின் உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி வெறும் 40,000 தான் என்பதைக் காணும்போது, இது பெரிய சாதனை. மேலும் வளருங்கள், மேலும் செய்யுங்கள் மற்றும் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்துவாருங்கள் ஆகிய RI மந்திரங்கள் நம் பகுதிகளில் மிகப் பெரிய வெற்றி அடைந்துள்ளன என்பதைத்தான் இது காண்பிக்கிறது என்றார் PRIP சேகர் மேத்தா. ஜூன் மாதம் சென்னை அருகிலுள்ள காஞ்சிபுரத்தில் RID 3231 நடத்திய விருது மற்றும் நன்றி வழங்கல் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு பேசினார்.

தன்னுடைய தலைமை ஆண்டின்போது, ரோட்டரி திட்டங்களைப் பார்க்கவும் நாட்டுத் தலைவர்களைச் சந்திக்கவும் தன் மனைவி ராஷி அவர்களுடன் தான் மேற்கொண்ட உலகப் பயணத்தை அவர் நினைவுகூர்ந்தார். “அப்போது, உலகெங்கும் சங்கச் செயல்பாடுகளின் முதன்மை இலக்கு, பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதுதான் என்பதை நான் கண்டேன். என்னுடைய 37 ஆண்டு ரோட்டரி வாழ்க்கையில், சென்ற ஆண்டுபோல் MHM, திறன் முன்னேற்றம், பெண்கள் கல்வி போன்ற பிரச்சனைகளுக்கு இவ்வளவு வலியுறுத்தல் வழங்கப்படுவதை நான் எப்போதும் பார்த்ததில்லை.”

இந்தியா முழுவதும் ரோட்டரி சங்கங்கள் பள்ளி மாணவிகளுக்கு (குறிப்பாக கிராமப் பகுதிகளில்) 10,000க்கும் மேற்பட்ட மிதி வண்டிகளை வழங்கியிருக்கும்.

### TRF, வழங்குதலுக்கு மிகச் சிறந்தது

ஒருவர் TRFக்கு நன்கொடை யளிக்கிறார் என்றால், ரோட்டரியில் அந்தப் பணம் எப்படிச் செலவிடப் படவேண்டும் என்ற வழியை அவர் தீர்மானிக்கலாம் என்றார் மேத்தா. “நம் அறக்கட்டளை உலகின் மிகச் சிறந்த மிகவும் நம்பகமான தொண்டு நிறுவனம் ஆகும்.




*DG நிர்மல் ராகவன் மற்றும் அவர் மனைவி நந்தினி RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி அவர்களை கௌரவிக்கின்றனர்.*

V முத்துகுமரன்

“ஒவ்வொரு ரோட்டெரியனும் ஒவ்வோர் ஆண்டும் TRFக்குப் பங்களிக்கவேண்டும். ஏனெனில், இது அன்றாட வாழ்க்கையை மிகச் சிரமத்துடன் நடத்துகிற பல மில்லியன் மக்களுக்கு மாற்றத்தின் வழி.”

ரோட்டெரியன்கள் தனக்கு மேல் சேவை என்ற கொள்கையைப் பின்பற்றவேண்டும். ஹூஸ்டன் ரோட்டரி மாநாட்டில் இந்திய PM நரேந்திர மோடி தொடக்க உரை ஆற்றியபோது, ஜூன் 25ஐ உலக யோகாசன நாளாகக் கொண்டாடும்படி ரோட்டரியைக் கேட்டுக்கொண்டார். இதன் பொருள், தாக்கமுள்ள மாற்றத்தைக் கொண்டுவருகிற ரோட்டரியின் ஆற்றலை அவர் அங்கீகரிக்கிறார் என்பது தான் என்றார் மேத்தா.

தமிழ் நாட்டின் ஏழு RI மாவட்டங்களைச் சேர்ந்த 20,000 ரோட்டரியன்களின் திறமை, மாநில அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களைவிட மிகப் பெரியது. “ஒரு முன்னேற்றத் திட்டத்தைப்பற்றி அல்லது அதை எப்படிச் செயல் படுத்துவது என்பதுபற்றி முதல்வர் ரோட்டரி ஆளுநர்களுடைய கருத்துகளை நாடவேண்டும்.” சில மாவட்டங்களில் பதிவு செய்யப்படும் ‘போலிச் சங்கங்களை’க் கண்டித்த அவர், ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக் கப்படுவதற்கு உதவும் வாக்கு வங்கிகளாகப் புதிய சங்கங்களைத் தொடங்குவதை நிறுத்தவேண்டும், ஏனெனில் “அப்படிப்பட்ட சங்கங்கள் நெடுநாள் நீடிக்காது” என்றார். ரோட்டரி இந்தியா மனிதத்தன்மை அறக்கட்டளை இந்தியா முழுவதும் 125 டயாலிசிஸ் இயந்திரங்களை நிறுவ இலக்கை அமைத்திருந்தது. “DG J ஸ்ரீதர், RID 3232, ஒருவர் மட்டும் இந்த ஆண்டில் (2021–22) சென்னை மருத்துவ மனைகளில் 134 இயந்திரங்களை அமைத்துள்ளார், இது மிகச் சிறந்த சாதனை” என்றார் மேத்தா.

25க்கும் மேற்பட்ட புதிய ரோட்டரியன்களைச் சேர்த்த சங்கத் தலைவர்கள் எட்டுப் பேருக்குத் தங்க ஊசிகள் வழங்கப்பட்டன. TRFக்கு 1,000க்குமேல் பங்களித்த 18 ரோட்டரியன்கள் (ஒரு மிகப் பெரிய கொடையாளர் உள்பட) பெருமைப்படுத்தப்பட்டார்கள். சிறப்பாகச் செயல்படும் சங்கங்கள், தலைவர்கள், செயலாளர்கள், குறிப்பிடக்கூடிய திட்டங்கள், தனித்துவமான பங்களிப்பை வழங்கிய ரோட்டரியன்கள், சங்கங்களுக்கு DG நிர்மல் ராகவன் (2021–22) சுமார் 1,300 விருதுகளை வழங்கினார்.

மாவட்டப் பயிற்சியாளர் PDG C R சந்திர பாபு, மாவட்ட ஆலோசகர் PDG A சம்பத்குமார், DGE J K N பழனி, DGN P பரணிதரன், DGND M ராஜன் பாபு ஆகியோர் பெருமைப் படுத்தப்பட்டார்கள். ஆறு புதிய சங்கங்களைப் பதிவு செய்துள்ளது என்றார் RID 3231ன் உறுப்பினர் எண்ணிக்கைப் பிரிவுத் தலைவர் C பாஸ்கரன்.■

# RC டொம்பிவ்லி தொடங்கிய மகிழ்ச்சிப் பள்ளி

## ரோட்டரி செய்திக்குழு

மகாராஷ்டிரத்தில் உள்ள முர்பாத் வட்டத்தைச் சேர்ந்த ஜம்புர்தெ கிராமத்தில் இருக்கும் பழுதடைந்த ஜில்லா பரிஷத் பள்ளி ஒன்றை RC டொம்பிவ்லி, RID 3142, மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றி 120க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பலன் அளித்தது.

சங்கத் தலைவர் உல்கா சாவ்லா (2021–22), திட்டத்தின் தலைவர் டாக்டர் ஷிராலி, ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவ் தாம்பெ இந்தப் பள்ளிக்குப் பலமுறை சென்று பொருள் வழங்கல், பணியாளர்களைத் திட்டமிட்டார்கள், பணிகளைக் கண்காணித்தார்கள். “இந்தப் பள்ளி மிக மோசமான நிலையில் இருந்ததாலும், இந்தக் கிராமத்தில் 2,000 பேர் வசிப்பதாலும் நாங்கள் இதைத் தேர்ந்தெடுத்தோம்” என்கிறார் முன்னாள் தலைவர் சங்கர் சதாவனெ. முதன்மை வாசல் அமைத்தல், கூரை, சுற்றுச் சுவரைப் பழுது பார்த்தல், ஆண், பெண்ணுக்குத் தனித்தனிக் கழிப்பறைத் தொகுதிகள் கட்டுதல், கணினி அறை, மின் கற்றல் பொதிகள், அலமாரியுடன் நூலக நூல்கள், கை கழுவும் நிலையம், நீர் தூய்மைப்படுத்தி, விளையாட்டுப் பொருட்கள் போன்ற பல புதுப்பித்தல் பணிகள் படிப்படியாகச் செய்யப்பட்டன.

தொடக்க விழாவின்போது, தாமதமின்றி இந்தத் திட்டத்தை நிறைவுசெய்ததற்காகவும், RILM



RC *டொம்பிவ்லி சங்கத்தினர்* DG *மயூரேஷ் வார்கேவுடன்.*

வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, அதன்மூலம், நலிந்த நிலையில் இருந்த கிராமத்து மாணவர்களுடைய வாழ்க்கைகளை மாற்றியதற்காகவும் DG டாக்டர் மயூரேஷ் வார்கே இந்தச் சங்கத்தைப் பாராட்டினார்.■



# குழந்தை பராமரிப்பில் சுற்றுச்சூழல் காப்போம்

ப்ரீதி மேஹரா

பிரசவம் என்பது ஒரு இயற்கையான செயல் முறையாகும், மேலும் எந்தவொரு தலையீட்டையும் முடிந்த வரை இயற்கைக்கு நெருக்கமாக வைத்திருக்க அனைத்து முயற்சிகளும் செய்யப்படுகின்றன. இதேபோல், குழந்தை உலகில் தனது இருப்பைக் குறிக்கும் தருணத்திலிருந்து இந்த கொள்கைக்கு பெற்றோர் உண்மையாக இருக்க வேண்டும் என்பது நிபுணர்களிடையே ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்து.

குடும்பத்தில் ஒரு குழந்தை எதிர்பார்க்கப்படும் போது, பாரம்பரிய சடங்குகள் தவிர, புதிதாகப் பிறக்கும் குழந்தைக்கும் தாய்க்கும் தேவையான பல விஷயங்களை ஒன்றாகச் சேர்ப்பதற்கான ஒரு விறுவிறுப்பான செயல்பாடு நடக்கும். பல வீடுகளில் குழந்தை வளர முழு நர்சரி திட்டமிடப்படும்.

இயற்கை அன்னையின் மீது ஆழ்ந்த மரியாதை கொண்டவர்கள் மற்றும் பசுமையாக மாற விரும்புபவர்களுக்கு, உங்கள் குழந்தையை வளர்ப்பதில் முடிந்தவரை நிலைத்தன்மையைப் பயன்படுத்த இது ஒரு வாய்ப்பாகும்.

இதன் முதல் படி குழந்தைக்கு முடிந்தவரை தாய்ப்பால் கொடுப்பதே ஆகும். இது உணவு வழங்க பூஜ்ஜிய கழிவு வழியாகும், இதற்கு பாட்டில்கள் அல்லது கோப்பைகள் தேவையில்லை, செலவுகளும் இல்லை. இருப்பினும் சில நேரங்களில் புதிய தாய்மார்களுக்கு உதவ நர்சிங் பம்ப் தேவைப்படுகிறது. ஃபார்முலா பாலை நாடுவதை விட இது மிகவும் சிறந்தது, சில சமயங்களில் எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக, ஃபார்முலா பாலை பயன்படுத்தவும் கட்டாயம் ஏற்படும்.

எந்த காரணத்திற்காகவும் உங்கள் குழந்தைக்கு பாட்டில் பால் கொடுக்க வேண்டியிருந்தால், பிளாஸ்டிக் பாட்டில்களுக்கு பதிலாக நிலையான பாட்டில்களைத் தேர்வு செய்யவும். இன்று நல்ல கடைகளில் பல டிசைன்கள் கிடைக்கின்றன. நச்சுத்தன்மையற்ற விருப்பங்களுக்கு, கண்ணாடிப் பாட்டிலைத் தேர்ந்தெடுக்கவும், அவற்றில் பெரும்பாலானவை கண்ணாடியைப் பாதுகாக்க சிலிகான் உறையுடன் வருகின்றன, மேலும் குழந்தை பாட்டிலை எளிதாகப் பிடிக்க உதவுகிறது. சிலிகான் முலைக்காம்பு இணைக்கப்பட்ட துருப்பிடிக்காத ஸ்டீல் பாட்டில்களும் உள்ளன. பிளாஸ்டிக் பாட்டிலைப் பயன்படுத்தினால், அது BPA (Bisphenol-A) இல்லாததா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தரக்குறைவான பொருட்கள்



குழந்தையின் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் பிளாஸ்டிக் கசிவுக்கு வழிவகுக்கும்.

குழந்தையின் உணவுக்கு செல்லலாம். வணிக ரீதியான குழந்தை உணவு பல தாய்மார்களுக்கு ஒரு பொதுவான பதில். ஆனால் உங்கள் குழந்தைக்கான சொந்த உணவை வீட்டிலேயே தயாரிப்பது சிறந்த மற்றும் பாதுகாப்பான வழியாகும். இது மலிவானது மட்டுமல்ல, ஆரோக்கியமானதும் கூட. பெரும்பாலான மருத்துவர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் வீட்டில் உள்ள மிக்ஸியில் பழங்கள் மற்றும் காய்கறிகளை கூழாக செய்ய பரிந்துரைக்கின்றனர். சில சிறந்த தினை சார்ந்த கஞ்சி வகைகள் நம் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் பாரம்பரியமாக தயாரிக்கப்பட்டு கிடைக்கிறது.

ஒரு குழந்தைக்கு அத்தியா வசியமான பொருளான, டயப்பர்களுக்கு நகர்வோம். நகர்ப்புற கடைகளில் யூஸ் அண்ட் த்ரோ டயப்பர்கள் அதிக அளவில் உள்ளது மற்றும் அவை வசதியாக இருப்பதால் பெற்றோர்கள் அவற்றை வாங்குகின்றனர். இருப்பினும், அவை மக்கும் தன்மையற்றவை மற்றும் இறுதியில் குப்பைக் கிடங்குகளை ஒழுங்கீனமாக்குகின்றன. அவசரத் தேவைகளுக்காகவோ அல்லது குழந்தையை வெளியே அழைத்துச் செல்லும் போது யூஸ் அண்ட் த்ரோ டயப்பர்களின் ஓரிரு பாக்கெட்டுகளை கையிருப்பில் வைத்திருக்கலாம், ஆனால் பழைய மென்மையான பருத்தியால் செய்யப்பட்ட டயப்பர்களைப் பயன்படுத்தலாம், அவற்றை கிருமி நாசினிகள் கரைசலில் துவைக்க முடியும். இதனால் நீங்கள் சுற்றுச் சூழலுக்கு பெரும் உதவி செய்வீர்கள்.





அதே விதி பெட்ஷீட்கள், தலையணை உறைகள், டயபர் பைகள் மற்றும் பிப்களுக்கும் பொருந்தும். இவை பழைய மஸ்லின் புடவைகளிலிருந்து தயாரிக்கப்படலாம். மென்மையான பருத்திகள் சிறந்தவை மற்றும் ஆரோக்கியமானவை. ஒரு குழந்தைக்கு சூழல்-நட்பு பொருட் களால் செய்யப்பட்ட ஆடைகள் மிகவும் வசதியாக இருக்கும்.

குழந்தைக்கான ஒரு நர்சரியை உருவாக்குவது வேடிக்கையாக செயல் மற்றும் நீங்கள் அப்போது புதுமையாக சிந்திக்கலாம். நடவடிக்கையை எளிமையாக வைத்து சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக மாற்றுவது நல்லது. வீட்டில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதைச் சிறப்பாகச் செய்யலாம். பயன் படுத்திய ஆடைகளை அழகான ஃபிரில்களாக மாற்றலாம். அல்லது மூங்கில் மற்றும் வைக்கோல் போன்ற இயற்கையான பொருட்களால் உங்கள் சொந்த தொட்டிலை உருவாக்கலாம், அதற்கு தேவையானது கற்பனை மற்றும் சிறிது திட்டமிடல் மட்டுமே.




இருப்பினும், முதல் 18 மாதங்களுக்கு அப்பால் குழந்தைகள் பெரும்பாலும் படுக்கைக்கு நகர்கிறார்கள். அதனால் பெற்றோர்களால் தொட்டில்களை பயன்படுத்த முடியாத சூழல் ஏற்படுகிறது. அவற்றை ஒப்படைக்க புதிய பெற்றோரை எதிர்பார்க்கிறார்கள். ஸ்ட்ரோலர்களுக்கும் இதே கதை தான். ஸ்ட்ரோலர்கள் நிலப்பரப்புகளில் முடிவடைவதற்குப் பதிலாக, அவை ஒரு வட்டப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக மாறினால் மிகவும் நன்றாக இருக்கும், மேலும் ஒரு குழந்தை வேகமாக வளரும்போது குடும்பம், காலனி அல்லது சமூகத்திற்குள் அதை தீவிரமாக கைமாற்றலாம்.

இதேபோல், பழைய துப்பட்டாக்கள் அல்லது வீட்டில் கிடைக்கும் மற்ற துணிகளில் இருந்து தூளிகள் தயாரிக்கலாம்.

ஒரு குழந்தை இருக்கும் இடத்தில், விளையாட்டு நேரம் இருக்கும், ஆனால் சூழல் நட்பு பொம்மைகள் மற்றும் பாகங்கள் பற்றிய தலைப்பு மிகவும் விசாலமானது. அதை இன்னொரு இதழில் ஆராய்வோம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# கோதாவரி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மளிகைப் பொருள் பொதிகள்

ரோட்டரி செய்திக் குழு

ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா மாநிலங்களில் கோதாவரி ஆற்றின் கரைகளில் வாழ்கிற, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு RID 3150ஐ சேர்ந்த ரோட்டரியன்கள் ரூ.5.4 லட்சம் செலவில் சுமார் 600 மளிகைப் பொருள் பொதிகளை வழங்கினார்கள். குறிப்பாக, இந்த ஆண்டு ஜூலை மாத வெள்ளத்தைத் தொடர்ந்து இந்த ஆறு பொங்கி வழிந்ததால் தீவுக் கிராமங்களில் வாழும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். இந்தப் பொதிகள் ஒவ்வொன்றிலும் ஒரு குடும்பத்துக்கு 10 நாட்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், பிற பொருட்கள் இருந்தன.

இந்த வெள்ள உதவித் திட்டத்தை RCகள் மங்களகிரி, தடெபள்ளி, குண்டூர் ஆதர்ஷ் ஆகியோர் இணைந்து இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மங்களகிரி பிரிவின் ஆதரவுடன் நடத்தினார்கள். “600 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3,000 மக்கள் இதனால் பலன் பெற்றார்கள்” என்றார் RC மங்களகிரி தலைவர் திரிபுரமல்லு சதீஷ் பாபு.■




RID 3150 *ரொட்டேரியன்கள் அளித்த மளிகை சாமான் பைகளுடன் மக்கள்.*

---

TRF உதவியுடன் நற்பணி

# கொல்கத்தாவில் இரத்த சோகை கண்டறிதல் முகாம்



*இரத்த சோகை பற்றிய புத்தகங்கள் முகாமில் வழங்கப்படுகிறது.*

மாத்ரி ரக்ஷா திட்டத்தின் கீழ் RC சால்ட் லேக் மெட்ரோபாலிடன், RID 3291, RC நிடௌ-பியெல், சுவிட்சர்லாந்து, RID 1990, உடன் இணைந்த பன்னாட்டு நல்கைத் திட்டமாக நடத்திய இரத்த சோகை நோயாளி களுக்கான நல முகாமில் 70 பெண்கள் பரிசோதிக்கப்பட்டார்கள். இவர்களில் 43 பேருக்கு ஹீமோகுளோபின் இயல்பாக இருந்தது, 23 பேருக்குக் குறைந்த எண்ணிக்கையில் இருந்தது, அவர்களுக்கு மருந்து தேவைப்பட்டது. அதனால், அவர் களுக்கு ஆறு மாதங்களுக்கு இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கப்பட்டன, புழு நீக்கம் பரிந்துரைக்கப்பட்டது, விழிப்புணர்வுச் சிற்றேடுகள் வழங்கப்பட்டன. முகாமில் அவை உறுப்பினர் ராஜேஷ் சிரிமர், AG மௌலி நாத் மஜ்ஹி, சங்கத் தலைவர் அர்ச்சனா கோயல் (2021–22), உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.■

# குழந்தைகளைக் காக்கும் ரோட்டரி தாய்ப்பால் வங்கி

ரோட்டரி செய்திக் குழு

தானேயில் ரோட்டரி தாய்ப்பால் வங்கி தொடங்கப்பட்டு இன்றுடன் பத்து ஆண்டுகள் ஆகிறது. இது மே 2012ல் அமைக்கப்பட்ட போது, மாவட்டத்தின் முதல் வசதி யாகவும், நாட்டிலேயே 10வது வசதி யாகவும் இருந்தது என்று குழந்தை அறுவை சிகிச்சை நிபுணரும் பால் வங்கியின் நிறுவனருமான Dr லக்ஷ்மிகாந்த் கசத் கூறுகிறார். அவர் அப்போது RC தானே நார்த் எண்ட் (அப்போது RID 3140) மற்றும் தானே அகாடமி ஆஃப் பீடியாட்ரிக்ஸ் (TAP) ஆகியவற்றின் தலைவராக இருந்தார். வங்கி 16,426 தாய் நன்கொடையாளர்களிடமிருந்து 793.5 லிட்டர் தாய்ப்பாலை சேகரித்துள்ளது, மேலும் 2022 மார்ச் வரை இந்த 10 ஆண்டுகளில் 2,704 குழந்தைகளுக்கு பயனளிக்கும் வகையில் 716.9 லிட்டர் பாலை விநியோகித்துள்ளது.

2012ல் ரூ.12 லட்சம் செலவில் இந்த வசதி, TAP, RC மும்பை நாரிமன் பாயின்ட் மற்றும் அப்போதைய DG விஜய் ஜலானால் அனுமதிக்கப்பட்ட மாவட்ட மானியத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்டது. இது பின்னர் 2019ல் RC மும்பை எலிகன்ட் மற்றும் ஆக்சிஸ் எலெக்ட்ரிகல் காம்போனென்டின் CSR நிதியுதவி யின் உதவியுடன் புதுப்பிக்கப்பட்டது.




PDG *விஜய் ஜலான் (வலது) மற்றும்* Dr *லக்ஷ்மிகாந்த் கசத் (இடது) தானே தாய்ப்பால் வங்கி துவக்க விழாவில்.*

குழந்தை பெற்ற எந்த ஆரோக்கியமான பாலூட்டும் தாயும் நன்கொடையாளர் ஆகலாம் என்கிறார் Dr கசத்.

## எப்படி செயல்படுகிறது

தாய்மார்களிடமிருந்து கைமுறையாக அல்லது மார்பகப் பம்புகளைப் பயன்படுத்தி, பால் வங்கியால் வழங்கப்படும் முன்-சுத்திகரிப்பு செய்யப்பட்ட, கசிவு இல்லாத கொள்கலன்களில் தாய்ப்பால் சேகரிக்கப் படுகிறது. பல்வேறு நன்கொடையாளர் களிடமிருந்து சேகரிக் கப்படும் பால், சுத்தி கரிக்கப்பட்ட ஸ்டீல் கொள்கலன்களில் சேகரிக்கப்பட்டு, உடனடியாக பேஸ்டுரைஸ் செய்யப்பட்டு குளிரூட்டப்படுகிறது. கொள்கலன்கள் எண்ணிடப்பட்டு, பேஸ்டுரைசேஷன் தேதி மற்றும் பிற விவரங்களுடன் குறிக்கப்படும்.



துறைத்தலைவர் உத்தரவு பெற்றால் மட்டுமே பால் வினியோகிக்கப்படும். பாலூட்ட முடியாத தாய்மார்களின் குழந்தைகள்; போதுமான தாய்ப்பாலைச் சுரக்க முடியாத தாய்மார்கள்; கைவிடப் பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகள்; பிரசவத்திற்குப் பிந்தைய காலத்தில் தாய் இறந்த குழந்தைகள்; குறைந்த எடை அல்லது முன்கூட்டியே பிறந்த குழந்தைகள் ஆகியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆனதும், ஆறு மாதங்கள் வரை, உறவினர்கள் வங்கியில் இருந்து தினமும் பால் பெற்றுக்கொள்ளலாம். அதன் பின்பு குழந்தைகளுக்கு வழக்கமாக தாய்ப்பால் நிறுத்தப்படும்.■

Wordsworld


# Utterly butterly original



**Sandhya Rao**

For all its massive size, the most recently named winner of the International Booker Prize is perfectly offset by its light-weight, quirky writing.

Yes, *Tomb of Sand* is utterly, butterly original, all 700-odd pages of it. It's no wonder that Geetanjali Shree, whose novel has won the International Booker Prize this year, has infused the Indian literary scene with new energy. This is the first time that a novel originally written in Hindi (*Ret Samadhi*) and translated into English, has won international recognition on such a prestigious scale. Actually, any Indian language, save English. Of course, the credit goes equally to the translator, Daisy Rockwell, and both author and translator share the award and the prize money.




There has been some confusion because of the word 'Booker'. To clarify: There is something called the Booker Prize, the top literary honour in the UK. Earlier open only to writers from the UK and erstwhile British colonies, the field was opened up in 2014 to include authors worldwide, so long as the work is in English and is published in the UK. Indian authors (or authors of Indian origin) who have won this Booker are V S Naipaul, Salman Rushdie, Arundhati Roy, Kiran Desai and Arvind Adiga. On the other hand, the International Booker, which is what *Tomb of Sand* has won, is awarded to a writer of any nationality for a book in English or translation into English. Recent winners include David Diop, Marieke Lucas Rijneveld, Jokha al-Harthi, Olga Tokarczuk, David Grossman and Han Kang. Stirring this pot for a few years was the Man Booker Prize, sponsored by the Man Group of companies.

At this point, a confession: If *Tomb of Sand* had not won international recognition, I might not have even heard of the book, let alone read it and that would have been entirely my loss.

What is this literary sensation that has got everybody all excited? For one, it belies its appearance. Despite being hefty along the lines of a *War and Peace* or *Ulysses*, *Tomb of Sand* has none of the darkness or density of the two classics, either in form or content. Geetanjali Shree has offered us a book that's light, peppy, irreverent, a novel that is and does its own thing. Completely original. I have read some 500 pages so far, and it hasn't worn me down. My arms ache so I can read only a few pages at a time, but my mind is set afloat, my brain dances, my eyes sparkle and sometimes I laugh out loud. The writing is bold, unique, almost stream-of-conscious, and the wordplay delightful. There is a plethora of references to people, places, events that trigger memories; the reader has no choice but to stop and reflect, even if you don't quite get what's going on.

Yet, it moves inexorably forward in the most peculiar manner, playing with words and meanings and contemporary references. You feel the author is not just telling her story in a fantastical manner, she's actually having fun in the process. Generally, you think of good writing as crafted very carefully,


My arms ache so I can read only a few pages at a time, but my mind is set afloat, my brain dances, my eyes sparkle and sometimes I laugh out loud.

every word and sentence and thought put there in a certain way for a certain reason. *Tomb of Sand* so brilliantly camouflages the effort that you feel a sense of freedom as you read on. For instance, at one point when the novel plunges into the world of crows, there's this little passage: 'So there's still more left to the tale of our young crow, Jackanapes. But since we've said *so*, there must be a *just so* tale as well. Such a tiny word, *so*, but nonetheless not as insignificant as one might think. Important linguists, since the time of Sanskrit to the present moment of Annie Montaut, have been quizzing the meaning of *so*, wondering what makes it so puzzling.' The reference is to the book's French translator!

Then, around page 575 that I flipped open at random, there's mention of the painter Bhupen Khakkar: 'Many years ago, there was a painter named Bhupen Khakkar. He told stories with a brush. … He knew that a story cannot be locked into a box, or a canvas, or a gaze.
… Because stories never end. They jump through windows and cracks or other such openings, or create them by shaking causing the earth to quake. From Bhupen's unspoken unwritten unfilled space. Where do they go?... Vanished. Unfettered, unworried. Customs thrown to the winds. Crossing borders. … Arisen from samadhi. Religious fanatics and governments do not care for samadhis, nor stories, nor Bhupen Khakkar. They like to shut them all up. In files, boxes trunks.' A few paragraphs later, there's a reference to writer Paul Zacharaiah.




It's really not possible to say what this book is about because it seems to be about everything, about life. What we understand is that there's an elderly woman (Amma), clearly depressed, who sleeps facing the wall, back to the world, maybe grieving. Her son (Bade), daughter-in-law (Bahu), and daughter (Beti) don't know what to do with her because she responds to nothing. And then she does.
In an interview, the author has talked about the old lady's movement from *nahi nahi* (no no) to *nayi nayi* (new new).




Perhaps the most remarkable thing about *Tomb of Sand* is how the absurd becomes the sane; at one level you think what on earth is she talking about and at another you feel yes, yes, that's absolutely right. The words dance crazily and yet make sense. In an interview to the *Financial Express* recently, the author said she never thought about readers while she was writing. And about her use of language she said, 'From my experience over the years and working with theatre, I think what I have learned is that language is an entity by itself. It is not just something to be used as a vehicle. Words have an identity of their own. It's the power of language that really takes over and makes me write in certain ways.'
In the person of Amma, the author acknowledges the influence of writer Krishna Sobti on her work, of how she lived life to the fullest.

Those familiar with *Ret Samadhi* say that Daisy Rockwell has done a magnificent job with the translation, and the wordplay in particular. This encourages me to try and read the original. For those interested, Geetanjali Shree's other books include *Mai*, *Hamara Shahar Us Baras*, and *Khaali Jagah*. It's not an easy choice for a read, but if you do decide to take it on, you will not be disappointed by *Tomb of Sand*.

*Postscript*: Alongside *Tomb of Sand*, I've been reading an author who has appeared in these pages before: Pallavi Aiyar. Although she is best known for journalistic nonfiction, she also has fiction titles featuring the adventures of a pair of cats called Soyabean and Tofu. I've been reading *Chinese Whiskers* (set in Beijing) and *Jakarta Tails* (set in Indonesia). A completely different experience from Geetanjali Shree, these two are easy reading that's down to earth but enjoyable. Besides, you get to know a little more about people and places in a straightforward way. And, there's a glossary for Chinese and Bahasa Indonesia words used in the books. And they're slim.

Still, also take a shot at the weighty one is what I suggest.

*The columnist is a children's writer and senior journalist*

## RC பன்ருட்டி — RID 2981



பன்ருட்டி அருகில் உள்ள ஒரு கிராம பள்ளியில் மாணவர் களுக்கு கல்வி கட்டணம் மற்றும் காலணி வழங்கப்பட்டது.

## RC நாசிக் — RID 3030



நாசிக் மருத்துவமனையில் உள்ள பச்சிளம் குழந்தைகள் ICUக்கு மருத்துவ கருவிகள் கொடை யளிக்கப் பட்டன. இந்த விழாவில் IPDG ரமேஷ் மெஹெர், DGE ஆஷா வேணுகோபால், PDG கிஷோர் கேடியா பங்கேற்றனர்.

## RC கரூர் — RID 3000



கனியலம்பட்டியில் உள்ள அரசு HS பள்ளி மாணவர் களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு ரூ.80,000 மதிப்புள்ள நிலத்தடி நீர்ச்சம்ப் கொடை யளிக்கப்பட்டது.

## RC அகமதாபாத் கிரேட்டர் — RID 3054



ரோட்டெரி யன்கள் Dr மோனிஷ் கோஹ்லி, Dr ரிதேஷ் டேவ் 300 குழந்தை களுக்குப் பல் பரிசோதனை நடத்தினார்கள்.

## RC விசாகப்பட்டினம் — RID 3020



AG ஜகபதி ராஜூ நிதியளித்த டிஜிட்டல் நூலகத்தை IPDG M ராம ராவ் தொடங்கி வைத்தார்.

## RC சூரத் ஈஸ்ட் — RID 3060



இந்தச் சங்கம் RC எமோரி-டுருய்ட் ஹில்ஸ், அட்லான்டா, US உடன் இணைந்து நடத்திய முகாமில், 127 பேருக்கு செயற்கைக் கை, கால்கள் வழங்கப்பட்டன.

# செய்திகள்

## RC பக்வாரா மிட்-டவுன் — RID 3070



பக்வாராவில் உள்ள குரு நானக் பணி நேதர்ஹீன் பிர்த் ஆசிரமத்தில் அன்னபூர்ணா நாள் கொண்டாடப் பட்டது.

## RC குஷிநகர் — RID 3120

RC கோரக்பூர் மிட்-டவுன், நைன் அறக்கட்டளை யுடன் இணைந்து, 60 குடும்பங் களுக்குப் மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.



## RC சண்டிகர் — RID 3080



பஞ்ச்குலா-வில் உள்ள ஹரிப்பூர் கிராமத்தில் HIV பாசிட்டிவ் நோயாளிகள் 30 பேருக்கு மளிகை பொருட்கள் வழங்கப் பட்டன.

## ரோட்டரி மின்-சங்கம் புணே டயமண்ட் — RID 3131

RCகள் புணே கன்டோன்மென்ட், அகமதாபாத் கிரேட்டர் இணைந்து ஜீவன் தீர்த் தொழில் சார்ந்த மையத்தில் 500 பெண்களுக்கு சானிட்டரி பேட்களை (ரூ.1.5 லட்சம்) வழங்கினார்கள்.



## RC கான்பூர் ஆர்யன்ஸ் — RID 3110



ஏழைத் தம்பதியர் விஜய் கௌதம், சோம்வதியின் மகள் ஸ்வாதி கௌதமுடைய திருமணத்தை இந்தச் சங்கமும் RC கான்பூர் ஷிகாரும் இணைந்து ஆதரித்தன.

## RC பாம்பே ஏர்போர்ட் — RID 3141

பால்காரில் உள்ள மாஸ்வான் கிராமத்தில் உள்ள ஆதிவாசி ஆசிரமப் பள்ளியில் புதிதாகக் இரண்டு வகுப்பறைகளும் ஓர் ஆய்வகமும் தொடங்கப்பட்டன.



### RC நிசாமாபாத் — RID 3150



நிசாமாபாத் அரசு மருத்துவமனைக்கு, மயக்க மருந்து வழங்கல் பணி நிலையம் (ரூ.7.28 லட்சம்) ஒன்று நன்கொடை யளிக்கப்பட்டது.

### RC ஷிமோகா சென்ட்ரல் — RID 3182

ஷெட்டிகெரெ அரசு உயர்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்புப் பொதுத் தேர்வில் உயர்ந்த மதிப்பெண் பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.



### RC பைல்ஹோங்கல் — RID 3170




பொது மருத்துவமனை ஆதரவுடன் இந்தச் சங்கம் 500க்கும் மேற்பட்ட கண்புரை அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளது.

### RC பெங்களூர் டௌன்-டவுன் — RID 3190

உலகச் சுற்றுச் சூழல் நாளை முன்னிட்டு காவல்துறைப் பொதுப் பள்ளியில் ஓவியப் போட்டி நடத்தப் பட்டது.



### RC மைசூர் நார்த் — RID 3181



சங்கத் தலைவர் ஜகதீஷ் S H அவர்களுடைய நிறுவலின்போது, அவர் ஆதரித்த டிஜிட்டல் வீடியோ வசதி கொண்ட பேருந்து (ரூ.35 லட்சம்), அகழ்ந் தெடுப்பானை (ரூ.32 லட்சம்) DG பிரகாஷ்காரந்த் தொடங்கிவைத்தார்.

### RC கோயம்பத்தூர் வடவள்ளி — RID 3201

RCC வடவள்ளியுடன் சேர்ந்து பீடம்பள்ளி ரோட்டரி அடர்வனத்தில் 200க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டது. அன்பு இல்லம் என்ற முதியோர் இல்லத்தில் வசிப்போருக்கு உணவு வழங்கப்பட்டது.



# செய்திகள்

## RC பொள்ளாச்சி — RID 3203



சங்கத் தலைவர் P T S மகேஸ்வர் ஃபோலெ வடிகுழாய் களைக் (ரூ.37,500) கோயம்பத்தூர் மருத்துவச் சேவைகள் இணை இயக்குநர் டாக்டர் கௌரி அவர்களிடம் கொடையளித்தார்.

## RC கிரேட்டர் தேஜ்பூர் — RID 3240

அஸ்ஸாமில் உள்ள பலிபரா வட்டத்தைச் சேர்ந்த ஏழைப் பெண் ஒருவருடைய, வெள்ளத்தில் சேதமடைந்த வீடு மீண்டும் கட்டப்பட்டது.



## RC சிவகாசி — RID 3212



தாய் மற்றும் சேய் நல மருத்துவப் பிரிவில் மருந்துகளைச் சேமிப்பதற்குச் சிவகாசி GHக்கு ஒரு குளிர்பதனப் பெட்டி (ரூ.14,000) கொடையளிக் கப்பட்டது.

## RC ஜபல்பூர் பிரீமியர் — RID 3261

ரயான் பன்னாட்டுப் பள்ளியில் 120 குழந்தை களுக்குப் பல், பொது நலன்பற்றிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது.



## RC மெட்ராஸ் சென்ட்ரல் — RID 3232



ரோட்டரி சென்ட்ரல் VHS ரத்த வங்கியில் நடந்த ரத்த தான முகாமில் சுமார் 40 கொடை யாளர்கள் பங்கேற்றார்கள்.

## RC ஜட்னி — RID 3262

ஒரு கண் மருத்துவ மனையில், ஒரு மருத்துவ உதவி வண்டி தொடங்கி வைக்கப் பட்டது.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# சங்க நிறுவலின்போது பல திட்டங்கள்

ரோட்டரி செய்திக் குழு

RC விருதுநகர் எலைட், RID 3212, தன்னுடைய புதிய சங்கத் தலைவர் K B கமலசேகரன், அவருடைய அலுவலர் குழுவின் நிறுவலின் போது பல திட்டங்களை நிறைவேற்றியது. PDG ஆறுமுகப் பாண்டியன் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். இந்தச் சங்கம் ரூ.1.08 லட்சம் செலவில் ஐந்து பெண்கள் CSC கணினிக் கல்வி நிறுவனத்தில் கணினிக் கல்வி பெறுவதை ஆதரிக்கும்.

விருதுநகர் SSK மகாலில் நடைபெற்ற நிறுவல் நிகழ்ச்சியில் 60 பெண்களுக்குச் சேலைகள் (ரூ.6,000) நன்கொடையளிக்கப்பட்டன. “KVS HS பள்ளியில் இந்தியச் சாதனைப் புத்தகத்தில் நுழைவதற்கு சுமார் 4,600 குழந்தைகள் முன்னாள் முதலமைச்சர் K காமராஜரைப் போன்ற முகமூடி அணிந்தார்கள். அங்கு நாங்கள் ரூ.18,500 செலவில் 5,000 தண்ணீர்ப் பாட்டில்களை வழங்கி ஆதரித்தோம்’’ என்கிறார் சங்கச் செயலாளர் உமா மகேஸ்வரன்.

பொறியியல் நுழைவுத்தேர்வில் 200க்கு 199 என்கிற இலக்கு மதிப்பெண்ணைப் பெற்ற KVS பள்ளியைச் சேர்ந்த தீபக் சந்துருவுக்கு இளம் சாதனை விருது வழங்கப்பட்டது, ஷேத்ரிய பெண்கள் HS பள்ளியைச் சேர்ந்த ஒன்பது வயது மோனிதாஸ்ரீ அவர்களின் யோகா சனத் திறமைகளுக்காக அவருக்கு இளம் சாதனை விருது வழங்கப்பட்டது. இந்தச் சங்கம் நிறுவல் நிகழ்ச்சியின் போது மூன்று புதிய உறுப்பினர்களைச் சேர்த்தது. சங்கம் ஏற்பாடு செய்த DG V R முத்து அவர்களுடைய நிறுவலின் போது, PDG PNB முருகதாஸ் ரோட்டரி அறக்கட்டளைக்கு ரூ.40 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.■



*PDG PNB முருகதாஸ் DG V R முத்துவிடம் ரூ.40 லட்சத்திற்கான காசோலையை வழங்குகிறார். அருகில் மலர்விழி முத்துவும் உள்ளார்.*



*சிறுமி மோனிதாஸ்ரீயிற்கு PDG ஆறுமுகப்பாண்டியன் விருது வழங்குகிறார்.*

# ஜப்பானிய நன்கொடைகள் பெற்ற ஹாப்பி பள்ளிகள்

ரோட்டரி செய்திக் குழு

இந்தூரில் உள்ள ஆறு அரசுப் பள்ளிகள் டிஜிட்டல் மேம்பாட்டை பெற்றன. 70 மென்பொருள் கொண்ட கணினிகள், ஆபரேடிங் சிஸ்டம் கொண்ட ஆறு இன்டராக்டிவ் பேனல்கள், ஆறு பிரிண்டர்கள், மின் பேக்-அப்பிற்கான க்ககுகள், மற்றும் இந்த உபகரணங்களுக்கான நாற்காலி, டேபிள்கள் ஆகியவற்றை நிறுவ 77,500 மதிப்பிலான உலகளாவிய மானியத் திட்டத்தைச் RC இந்தூர் அப்டவுன், RID 3040 செயல்படுத்தியது. மேலும் இந்த பள்ளிகளுக்கு குடிநீர் அமைப்புகள் மற்றும் கை கழுவும் நிலையங்களை அமைத்து தந்துள்ளது.




*DG ஜினேந்திர ஜெயின் இந்தூரில் மகிழ்ச்சி பள்ளியை துவக்கி வைக்கிறார். PDG சஞ்சீவ் குப்தா அவருக்கு வலதில் உள்ளார்.*

தனது டெர்ம் கிஃப்ட் மூலம் PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் RC உராவா ஈஸ்ட், ஜப்பான், RID 2770 இருந்து PRID செஜி கிட்டா ஆகியோர் ஹாப்பி பள்ளிகள் திட்டத்திற்கு முக்கிய பங்களிப்பாளர்கள். இந்த திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற, DRFC தகேஷி நககாவா, DRF பிரிவு தலைவர் சாகு புஜிமுரா, RC உரவா கிழக்கு தலைவர் தோஷிகி சானோ, முன்னாள் தலைவர்கள் மினோரு நோகுச்சி, ஷிகேரு சாய்தோ, முதன்மை தொடர்பாளர் ஷிகேரு மாட்சுமுரா மற்றும் இரண்டாம் தொடர்பாளர் தகாஷி சுகஹாரா, என RID 2770, ஜப்பானை சேர்ந்தவர்கள் உரிய நேரத்தில் பங்களித்துள்ளனர். ■

# டயாலிசிஸ் மையத்தை அமைத்தது RC மெட்ராஸ்

புஷ்பவதி பாபுலால் கம்தார் அறக்கட்டளை மற்றும் சந்திரகாந்த் மோகன்லால் டோலியா குடும்பத்துடன் இணைந்து RC மெட்ராஸ், RID 3232 அமைத்த டயாலிசிஸ் மையத்தை தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். சங்கம் மற்றும் டோலியா குடும்பத்தினர் நன்கொடைகளை வழங்கியதைத் தொடர்ந்து ஒரு உலகளாவிய மானியத் திட்டமான இதற்கு TRF ரூ.99 லட்சம் வழங்கியது.



*தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா சுப்ரமணியன் டயாலிஸிஸ் மையத்தை RC மெட்ராஸ் முன்னாள் தலைவர் மோஹன் ராமன், IPDG J ஸ்ரீதர் மற்றும் PDG J B கம்தார் முன்னிலையில் துவக்கிவைக்கிறார்.*

நகரின் புறநகர்ப் பகுதியான மாதவரத்தில் உள்ள நாடி RCM டோலியா டயாலிசிஸ் மையத்தில் 12 படுக்கைகள் உள்ளன, மேலும் இது ஒரு நாளைக்கு 36 நோயாளிகளுக்கு சேவை வழங்குகிறது. 2.5 கோடி செலவில் அமைக்கப் பட்டுள்ள இந்த மையத்திற்கு கம்தார் அறக்கட்டளை ரூ.1.08 கோடி நன்கொடையும், மீதமுள்ள ரூ.43 லட்சத்தை மற்றவர்களின் நன்கொடையும் பெறப்பட்டுள்ளது. அப்போதைய DG J ஸ்ரீதர், சங்கத் தலைவர் மோகன் ராமன், PDG JB கம்தார் மற்றும் அரசு அதிகாரிகள் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். ■

# பரிசு அளிப்பதில் பெண்மைக் கலை

LBW

TCA ஸ்ரீனிவாச ராகவன்

பரிசு அளித்தல் எப்போதும் எனக்கு ஒரு பெரிய பிரச்சனையாக இருந்துவந்துள்ளது. சுமார் அரை நூற்றாண்டுக்குமுன் (24 வயதில்) நான் முதன்முதலாக ஒரு பெண் தோழியுடன் பழகியபோது, அவர் வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு பரிசுகளைத் தந்து அவர்களை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவதைப் பார்த்து நான் வியந்தேன். ஆனால், நான் அளிக்கும் பரிசுகளுக்கு வெறும் 'நன்றி'தான் பதிலாகக் கிடைத்தது. அதனால், புதுமைச் சிந்தனையுள்ள யோசனைகளுடன் பரிசளிக்கும் மக்களைப் பார்த்து நான் எப்போதும் பொறாமைப்படுகிறேன். என்னுடைய கற்பனை ஓரளவில் நின்றுவிடுகிறது: ஆண்களுக்குப் புத்தகங்களும் விஸ்கியும், பெண்களுக்குச் சேலைகள். இவை பாதுகாப்பான பரிசுகள், ஊகிக்கக்கூடியவை. அத்துடன், சலிப்பூட்டுபவை. இப்படிதான் என் மனைவி என் பரிசுகளை விவரிக்கிறார். அத்துடன், நான் கடன் வாங்க விரும்பும் புத்தகங்களையும் நான் குடிக்க விரும்பும் விஸ்கியையும்தான் நான் பரிசளிக்கிறேன் என்று என் மனைவி குற்றம் சாட்டுகிறார். எனக்குத் திருமணமான புதிதில் (புகை பிடித்தல் மனைவியரால் அனுமதிக்கப்பட்டபோது) நான் குடிக்கக்கூடிய சிகரெட் பெட்டிகளைத் தான் நான் பரிசளிக்கிறேன் என்று அவர் குற்றம் சாட்டினார். இது ஓரளவு உண்மைதான். ஆனால் ஒன்று, நான் சேலைகளை அணிய இயலாது.

ஆண்டுகள் செல்லச் செல்ல, என் மனத்தை விரிவாக்குவது எப்படி என்று எனக்குத் தெரியவந்தது. சில பெண் தோழிகள், இரண்டு சகோதரிகள் மற்றும் மனைவி ஆகியோர் ஓர் எளிய உண்மையை என் தலையில் திணித்துள்ளார்கள்: மனத்தைச் செயல்படுத்துவது. அவர்களுடைய பரிசுகள் சரியாக இருக்கக் காரணம், என்ன பரிசளிக்கலாம் என்பது பற்றி அவர்கள் பல மணி நேரம் சிந்திக்கிறார்கள். சில நேரங்களில், அதை விற்கும் இடத்துக்குச் செல்வதற்குமட்டும் அவர்கள் நிறையப் பணம் செலவழிக்கிறார்கள். 1976ல் நான் ஒரு தோழியை 90 கிலோமீட்டர்கள் தொலைவிலுள்ள ஓர் இடத்துக்கு வண்டியில் அழைத்துச் சென்றேன், அங்கு அவர் சில அங்குல உயர முள்ள ஒரு வெண்கல உருவத்தை வாங்கினார். அந்த உருவத்தின் விலை ரூ.125. அதை வாங்கச் செல்வதற்குத் தேவையான பெட்ரோலின் விலை ரூ.50, திரும்பி வரும்போது சாப்பிட்ட மதிய உணவின் விலை ரூ.35. அந்தப் பரிசு பெரிய வெற்றியடைந்தது. அடுத்த பல மாதங்களுக்கு (வேறொரு பரிசைக் கண்டுபிடிக்கும் வரை) அவரும் அவருடைய நண்பர்களும் இதைத்தான் திரும்பத் திரும்பப் பரிசளித்தார்கள்.

ஆனால், திருமணம் பரிசளித்தல் போன்ற பல நிர்வாகப் பிரச்சனைகளைத் தீர்த்து விடுகிறது. நான் அந்தப் பொறுப்பை என் மனைவியிடம் ஒப்படைத்துவிட்டேன். எதைப் பரிசளிக்க வேண்டும், அதற்கு எவ்வளவு செலவழிக்கவேண்டும் என்று அவருக்குச் சரியாகத் தெரியும். பெண்களுக்கு இன்னும் நல்ல, மேலும் விலை உயர்ந்த பரிசுகள் கிடைப்பது எல்லாரும் அறிந்த உண்மை. மகிழ்ச்சியான விஷயம், எங்கள் வருவாய்களில் எத்தனைச் சதவிகிதம் பரிசு களுக்குச் செலவிடப்படுகிறது என்பது ஆண்டுக்குச் சுமார் 5% குறைந்துள்ளது.

முந்தைய பத்தாண்டுகளில் விஷயங்களை எளிமையாக்கு வதற்காகச் சந்தையில் இரண்டு புதிய பரிசுப் பொருட்கள் தோன்றி யுள்ளன: ஒயின் மற்றும் செடிகள். இவை இரண்டிலும் நிறைய வகைகள் உள்ளன, இவை எல்லா விலை களிலும் கிடைக்கின்றன. நான் வசிக்கும் குர்காவ்னில் நீங்கள் 1,000 ரூபாய்க்குக்கூட ஒரு பாட்டில் ஒயினை வாங்கலாம், வெறும் ரூ.100க்கு ஒரு தொட்டிச் செடியை வாங்கலாம். இவை இரண்டும் நல்ல தரம் கொண்டவை. இதற்குப் போக்குவரத்துச் செலவு எதுவும் இல்லை. மதுக் கடைகளும் செடி விற்கும் நர்சரிகளும் நடந்து செல்லும் தொலைவுக்குள் உள்ளன. இவ்வுலகில் பரிசளிப் போருக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும் இடம் எங்களுடைய குர்காவ்ன்தான்.

ஆனால், ஒவ்வொரு தீர்வுக்கும் ஒரு பிரச்சனை இருக்கவேண்டும் என்பதைப்போல, வெவ்வேறு ஒயின்கள், வெவ்வேறு செடிகளில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது எதிர்பாராத அளவு கடினமானது. ஏனெனில், ஒயின் களைப் பொறுத்தவரை, நாம் பெயர்ச் சீட்டு மற்றும் விலையைப் பார்த்துத் தீர்மானிக்கிறோம். செடிகளைப் பொறுத்தவரை, இலைகளின் தொகுப்பு மற்றும் தொட்டியின் அளவைப் பார்த்துத் தீர்மானிக்கிறோம். ஆனால் உண்மையில் அந்த ஒயின் மோசமாக இருக்கலாம்; அந்தச் செடி இலை கொண்ட ஒரு கிளையைச் சேற்றுத் தொட்டியில் ஊன்றியதாக இருக்கலாம்.

அதனால், சமீபத்தில் நான் ஒரு யோசனை சொன்னேன்: நாம் பேசாமல் பணத்தை எலக்ட்ரானிக் முறையில் அனுப்பிவிட்டால் என்ன? அந்தப் பணத்தைப் பெறுபவர் தான் விரும்பும் எந்தவொரு பரிசையும் வாங்கிக்கொள்ளலாமே. இந்த யோசனை மிகுந்த விசையுடன் நசுக்கப்பட்டது. ‘‘ஏன் இப்படி முட்டாள்தனமாகப் பேசுகிறீர்கள்?’’ என்றார் என் மனைவி,’’ நான் ஒவ்வொரு முறையின் விலை அட்டையைக் கஷ்டப்பட்டு நீக்குவது ஏன் என்று உங்களுக்குப் புரியவில்லையா?’’ ■

# ரோட்டரி நியூஸ் செயற்குழு (2022–23)



ரஷீதா பகத்

இடமிருந்து: DG N நந்தகுமார் (பொருளாளர்); DG துஷ்யந்த் சௌத்ரி (தலைவர்); DG வெங்கடேஷ் H தேஷ்பாண்டே (செயலாளர்) மற்றும் DG தினேஷ் குமார் (ஆலோசகர்).

## உங்கள் சந்தாவைப் புதுப்பிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது

*ரோட்டரி நியூஸ் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதிசெய்ய, உங்கள் வருடாந்திர சந்தாவைப் புதுப்பிக்கவும்.*

ரூ.480-அச்சு

ரூ.420 - மின் பதிப்பு

Scan here to pay

**குறிப்பு:** ரோட்டரி இதழுக்கான சந்தா விருப்பப்படி அல்ல, கட்டாயமாகும். RIயின் விதிகள் படி சந்தா செலுத்தாததற்காக சங்கங்கள் விலக்கப்படலாம்.

ஆன்லைனில் பணம் செலுத்துவதற்கான எங்கள் வங்கி விவரங்கள்: HDFC Bank, Montieth Road, Egmore, Chennai, Rotary News Trust, SB A/c No 50100213133460; IFSC HDFC0003820. G-Pay மூலமாகவும் சந்தாக்களை செலுத்தலாம்.

- UTR எண், சங்கத்தின் பெயர், தலைவர்/செயலாளர் பெயர், தொகை மற்றும் பரிமாற்ற தேதியை rotarynews@rosaonline.orgல் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அல்லது 9840078074 என்ற எண்ணுக்கு WhatsApp செய்யவும். உறுப்பினரின் பெயருடன் மொழி விருப்பத்தை (ஆங்கிலம், இந்தி அல்லது தமிழ்) குறிப்பிடவும்.
- சந்தா படிவத்தை இங்கே பதிவிறக்கவும்: *https://rotarynewsonline.org/wp-content/uploads/2022/01/Subscription-Form-22-23.pdf.* அனைத்து சங்கத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கு ஜூன் மாதத்தில் படிவம் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். புதிய சங்கங்கள் சந்தா பெறுவதற்கு எங்களைத் தொடர்பு கொள்ள சங்க அதிகாரிகள் ஆலோசனை வழங்கவும்.
- சங்க நிர்வாகிகள், சங்க உறுப்பினர்களின் நிலையில் ஏற்படும் மாற்றம் மற்றும் உறுப்பினர்களின் அஞ்சல் முகவரியில் ஏற்படும் மாற்றம் ஆகியவற்றை தொடர்ந்து எங்களுக்கு தெரிவித்து, சீரான மற்றும் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும்.

  அனைத்து உறுப்பினர்களின் பெயர்கள், PIN குறியீடு, மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் ID உள்ளிட்ட முழுமையான அஞ்சல் முகவரி படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். அதனுடன் டிடி/காசோலையும் இணைக்கப்பட வேண்டும்.
- தனிப்பட்ட உறுப்பினர்கள் தங்கள் இதழை தொடர்ந்து பெற, தங்கள் சங்கத்தின் சந்தா பட்டியலில் தங்கள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதை உறுதிசெய்யவும்.
- தங்கள் பகுதியில் அஞ்சல் கோளாறுகள்/தாமதங்கள் இருந்தால், சங்கங்கள் மொத்தமாக அனுப்புதல் முறையை தேர்வுசெய்யலாம். தயவு செய்து எங்களை தொடர்பு கொள்ளவும்.

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT.

